DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

BIG
Great Coverage.
BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எதிர்க்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1455 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 23, 2024

# கனடா நோக்கிய பயணம்: டிகோ கார்சியாவில் சிக்கிய தமிழ் புகலிட கோரிக்கையாளர்களின் நிலை



இந்தியப் பெருங்கடல் பகுதியில் பிரித்தானிய-அமெரிக்க இராணுவத்தின் ஆளுமையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள டியாகோ கார்சியாவில் சிக்கியுள்ள தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் கடும் நெருக்கடிகளில் சிக்கியுள்ளதாக ஐ.நாவின் சிறப்பு விசாரணைக் குழுவின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

அங்கு இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக சிக்கியுள்ளவர்கள் வன்முறை, துஷிபிரயோகம், சட்ட-விரோத தடுப்புக்காவல் ஆகியவற்றை எதிர்கொள்வதால், அவர்கள் உடனடியாக வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று அந்த ஐ நா அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

(உள்ளே விபரமான செய்தி 20ம் பக்கத்தில்)

# "இமாலய பிரகடனத்திற்கு" நிதியுதவி வழங்கியதை சுவிஸ் அரசு அதிகாரபூர்வமாக ஒப்புக்கொண்டது



இலங்கையில் தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட "இமாலய பிரகடனத்திற்கு" தாங்களே நிதியுதவி செய்ததாக சுவிஸ் அரசு அதிகாரபூர்வமாக ஒப்புக்கொண்டுள்ளது.

சுவிஸ் சோஷலிஸ கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மொலினா ஃபேபியன் எழுப்பிய கேள்விகளுக்கு கடந்த புதன்கிழமை (21) அன்று பதிலளிக்கும் போதே அந்நாட்டின் வெளியுறவு அமைச்சு இதை தெரிவித்துள்ளது.

"இமாலய பிரகடனத்திற்கு" சுவிஸ் அரசு எந்தளவிற்கு ஆதரவு வழங்கியது என்று அவர் நாடாளுமன்றில் எழுத்துபூர்வமான கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார்.

அதற்கு பதிலிளித்த அரசு, "சுவிஸ் வெளியுறவு அமைச்சு "போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு" புலம் பெயர்ந்த தமிழர்கள் மற்றும் பௌத்த பிக்குகளுக்குஇடையே பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தளம் ஒன்றை நிறுவ நிதியுதவி அளித்தது. அதையடுத்தே அந்த "இமாலய பிரகடனம்" வெளியானது.

எனினும், அந்த கலந்துரையாடலின் நிர்வாகம் அந்த பங்குதாரர் அமைப்பின் பொறுப்பாக இருந்தது" என்று விளக்கியுள்ளது.

(உள்ளே விபரமான செய்தி 16ம் பக்கத்தில்)

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

உதயன் சர்வதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
Dance, Music and Awards Presentation
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
மண்டபம்:-
The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM




## பிக்கரிங் நகரின் சிறந்த பெறுமதி கொண்ட ஒரு புதிய வரவு! வரலாற்றில் புதிய கொண்டோ விலைகளில்!

விலைகள் அதிகரிக்கும் முன்பாகவே நீங்கள் கொண்டோக்களை வாங்கிக் கொள்வதை நாம் விரும்புகின்றோம். அதை நீங்கள் இப்போதே செய்யலாம், ஏனென்றால் **Highmark** வரலாற்றில் குறைந்த விலைகளில் புதிய வரவாக நவீன கொண்டோக்களை வழங்குகின்றது!

அத்துடன் எமது விசேடமான சேமிப்புத் திட்டம். எமது **Highmark** இல் புதிய கொண்டோ ஒன்றை வாங்கினால்

# $50,000

வரையில் கழிவைப் பெறலாம்.

வட்டி வீதம் குறையும் போது கொண்டோக்களின் விலைகள் அதிகரிக்கலாம். எனவே தற்போது வாங்கிக் கொள்வதே சரியானதாகும். எமது விற்பனை முகவர் ஒருவரை இன்றே அழைத்து தாங்கள் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

குறைந்த $500களில் இருந்து பிக்கரிங் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள எமது கொண்டோக்கள் 3 படுக்கை அறைகளைக் கொண்டவை.




Off-site Sales Gallery Location and Hours:

633 KINGSTON ROAD, PICKERING

Mon. – Thu. 12pm – 6pm
Friday – Closed
Sat. & Sun. 12pm – 5pm

# TheHighmark.ca

CALL: 905-831-1755 or EMAIL: info@thehighmark.ca

HIGHMARK

FOLLOW US

* Prices, promotions, and specifications are subject to change without notice. All promotions are subject to terms and conditions. Renderings are artists' concepts. See Sales Representative for details. Exclusive Listing Brokerage Milborne Group Brokerage. Brokers Protected. E. & O.E.

Canada

We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# 60 வருடங்களுக்கு மேலான இலங்கைத் தமிழர் அரசியல் 'மிகவும்' மோசமான தலைவர்களின் கைகளுக்குச் தற்போது சென்றுள்ளதா?

60 வருடங்களுக்கு மேலான காலப்பகுதியை தற்போதைய ஆண்டில் கடந்து செல்லும் இலங்கைத் தமிழர் அரசியல் அதன் ஆரம்ப காலத்திலேயே சீராக இருந்ததா என்பதை உற்று நோக்கி ஆராய்ந்தால் அதற்கு "ஆம்' என்ற பதில் உடனேயே வந்து விடாது. அதற்கு காரணம் இனத்தின் பெயரால் நிறுவப்பெற்ற கட்சிகளில் இணைந்து பாராளுமன்றக் கதிரைகளையும் மூதவை ஆசனங்களையும் தங்கள் நோக்கமாகக் கொண்டு இயங்கிய தலைவர்கள் எனப்பட்டோர் இனம் சார்ந்த அரசியலுக்கு அப்பால் 'வர்க்கம்' சார்ந்த அரசியல்தான் செய்தார்கள் என்பது புலனாகும்.

இன்றிலிருந்து சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்ட அரசியல் தலைவர்கள் தங்களோடு தொண்டர்களையும் அழைத்து வருவார்களாம். ஆனால் இராணுவம் அல்லது பொலிஸ் படை வருகின்றபோது. தொண்டர்களை அடிவாங்கச் செய்துவிட்டு தலைவர்கள் பறந்து விடுவார்களாம். ஒரு நாள் 'உடுப்பிட்டிச் சிங்கம்' சிவசிதம்பரம் அவர்கள் மாத்திரம் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு முன்பாக சத்தியாக்கிரகம் செய்த போது மற்றைய தலைவர்கள் எழுந்து ஓடிவிட அவர் மட்டும் தொண்டர்களுக்குத் துணையாக நின்று 'அடி' வாங்கியதாக தற்போது உயிரோடு உள்ள சிலர் சொல்வதைக் கேட்டிருக்கின்றோம்.

அதற்குப் பிந்திய எமது இனம் சார்ந்த போராட்டம் 'சாதி அடக்கு முறைகளுக்கு' எதிரான போராட்டமாகும். மேற்படி சாதி அடக்கு முறைக்கு எதிரான போராட்டங்கள் ஆலயப் பிரவேசத்திற்கான போராட்டமாக உருவெடுத்த போது பல 'அதிசியங்கள்' அரசியல் தளத்தில் இடம்பெற்றிருந்தன. அந்த நாட்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்குள் வழிபாட்டுக்காக செல்வதற்காக போராட்டம் நடத்தியவர்களுக்கு எதிராக வழக்கு தொடுத்து சாதி அடக்கு முறையை ஊக்குவித்தவர் முன்னார் வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் சி. சுந்தரலிங்கம் என்பவர் ஆவார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற அவர் 'இனம் சார்ந்த' அரசியல் செய்தாரா? அன்றி 'வர்க்கம் சார்ந்த' அரசியல் செய்தாரா? என்பதை அவரது செயற்பாடுகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இந்த சாதீய அடக்கு முறைகளுக்கு எதிராக வடக்கில் பல கிராமங்களில் போராட்டங்கள் நடைபெற்ற வண்ணம் இருந்தன. குறிப்பாக சங்கானையில் உள்ள நிற்சாம் என்னும் கிராமத்தில் ஒடுக்கப்பட்ட தமிழ்ச் சமூகங்களைச் சேர்ந்தவர்களை உயர் சாதியினர் என்று சொல்லிக்கொண்டவர்கள் தாக்கினார்கள். ஆனால் அதற்கு எதிரான அடக்கப்பட்டவர்கள் திருப்பித் தாக்கும் போராட்டங்களை நடத்தினார்கள். அந்த போராட்டக்காரர்களுக்கு சீனச் சார்பு கொம்யூனிஸ்ட் கட்சியினர் ஆதரவளித்தனர். இதைக் கண்டு 'கொதித்த' அந்த நாட்களில் வட்டுக்கோட்டைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது "சங்கானையில் நிற்சாமம் தொகுதியில் கொம்யூனிஸ்ட்கள் அந்த பிரதேசத்தை வியட்னாம் ஆக்கப் பார்க்கின்றார்கள்" என்று முழக்கமிட்டார். இந்த 'முழக்கம்' எதன் அடிப்படையில் வந்தது. 'இனம்' சார்ந்த அரசியல? அல்லது 'வர்க்கம்' சார்ந்த அரசியலா? என்று பாராளுமன்றத்தில் கொம்யுனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமிர்தலிங்கம் அவர்களிடத்தில் கேள்வி எழுப்பி " நீங்கள் வியட்னாமில் நடைபெறும் மக்கள் போராட்டத்தை கொச்சைப்படுத்துகின்றீர்களா? என்ற கேள்வியை முன்வைத்தார்கள்.

ஆனாலும். இத்தனை ஆண்டுகள் கடந்தாலும் இந்த 2024ம் ஆண்டிலும் கூட அவ்வாறான அரசியல் தலைவர்களே எமது மக்களை வழிநடத்துவதாக காட்டிக் கொள்கின்றார்கள். 'கொழும்பு அரசியல்' செய்யும் அவர்கள் எவ்வாறு இனம் சார்ந்த அரசியல் செய்ய முடியும். கொழும்புத் தலைவர்களினால் ஏவப்பட்ட 'குழப்பவாதிகளாக' தமிழ்த் தேசிய அரசியலுக்கு வந்தவர்களால் இந்த வாரத்தில் கூட குழப்பங்களுக்கு தூபம் இடப்படுகின்றது. நடைபெற்ற கட்சித் தலைவர் தேர்தலில் தோல்வியைத் தழுவ ஏற்பட்டதை சாதாரண-மாக எடுத்து விட்டு அவர்கள் சொல்வது போல 'மக்கள் சேவை' செய்வதை விடுத்து நீதி மன்றங்களுக்கு தமிழர் அரசியலை கொண்டு சென்று காலத்தை வீணடிப்பவர்களை நாம் எவ்வாறு அழைக்கலாம். மிகவும் மோசமான அரசியல் தலைவர் என்போம் நாம்!

For All your Renovation Needs!

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva

416-706-8160

ROHINI TAILORS & DESIGNS

Saree Blouse, Skirt & Blouse

மற்றும் மணமகளுக்கான ஆடைகளும் தைத்துக் கொடுக்கப்படும்.
அத்துடன் கற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களுக்கான தையல் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
இடம்:- Pickering
தொடர்புகளுக்கு: 647 569 4794
அல்லது 416 438 2552

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# நிவாரணம் செந்தில்குமாரனின் MGR107 நிகழ்ச்சி மூலம் திரட்டப்பட்ட 212,807.19 டாலர்கள் நிதி தாயகத்தில் பல்வேறு வைத்தியசாலைகளின் தேவைகளுக்கு வழங்கப்படவுள்ளது



நிவாரணம் அமைப்பினூடாக தாயகத்தில் வறுமையில் வாடும் மக்களிற்கான பல்வேறு பணிகளைச் செய்வதோடு உயிர்காக்கும் இதய சத்திரசிகிச்சை, குருதிச் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளிட்ட பல பணிகளைச் செய்துவரும் திரு. திருமதி செந்தில்குமரன் இணையர் தம் பணிக்கு உதவுபவர்களிற்கு நன்றி நவிலும் வகையில் **Petit Delight** என்ற உணவுச்சாலையில் ஒழுங்குபடுத்திய கடந்த ஞாயிறு அன்று காலை உணவுடன் கூடிய நிகழ்வில் பலரும் வருகை தந்திருந்தனர். அவர்களில் சிலர் சிறப்புரைகள் ஆற்றினர்.

தன் தாயகப் பணித் திட்டங்களிற்கு மனப்பூர்வமாக ஆக்கமும் ஊக்கமும் நல்கியவர்களிற்கு செந்தில்குமரன் மனம் நெகிழ்ந்து நன்றி செலுத்தியதோடு அண்மையில் அவர் நிகழ்த்திய **MGR107** இசை நிகழ்ச்சியில் 212,807.19 கனடிய டாலர்கள் சேகரிக்கப்பட்டதாக அறிவித்தார் செயற்திறன் கொண்ட செந்தில்குமரன்!

"யாழ்ப்பாண மருத்துவமனையின் இருதய சத்திர சிகிச்சை பிரிவிற்கு மிகவும் அவசியமாக தேவைப்படும் வுழுநு இயந்திரத்தினை பெற்று தருவோம், சாவகச்சேரி மருத்துமனைக்கு அவசரம் தேவைப்படும் 2 குருதி சுத்திகரிப்பு இயந்திரங்களையும் பெற்று கொடுப்போம், உயிருக்கு போராடும் இளம் சிறார்களின் சத்திர சிகிச்சையினை ஒழுங்கு செய்து உயிர் காப்போம், கடும் சிறுநீரக வருத்தத்தினால் அவதியுறும் நோயாளிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் வழங்கி அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவோம், **MGR107** இல் திரட்டப்பட்ட **$**212,807.19 நிதி, தாயகத்தில் பல நூற்றுக்கணக்கான உயிர்களை காப்பாற்ற உதவ போகிறதென்பதினை பெரு மகிழ்ச்சியுடன் அறிய தருகின்றேன். இந்த முயற்சியை முன்னெடுக்கும் போதெல்லாம் எனக்கு உதவும் அத்தனை மனித கடவுள்களுக்கும் நன்றி!" எனும் உறுதிகளை செந்தில்குமரன் வழங்கியுள்ளார்.



"தெய்வத்தால்ஆகாதெனினும் முயற்சிதன் மெய் வருத்தக் கூலி தரும்" என ஐயன் வள்ளுவர் கூற்றிக்கேற்றாற்போல், கடந்த பல காலமாக தன் கடும் முயற்சியினால் பெரும் நிதியினை தன் இசை நிகழ்வுகளின் ஊடாக, அதுவும் குறிப்பாக உள்ளூர் கலைஞர்களை வைத்தே நடாத்தி, ஈழத்தில் பாரிய இதய சத்திர சிகிச்சைகளை ஒழுங்கு செய்து, பறிபோகும் நிலையிலுள்ள பிஞ்சு உயிர்களை மீட்டு அவர்கள் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கும் மின்னல் செந்தில் குமரனுக்கு, பெரும் தர்ம சிந்தனை கொண்ட மக்கள் கூட்டம் மிக பெரிய ஆதரவினை வழங்கி வருவதனை கண்கூடாக பார்க்க முடிகிறது.

இதய சத்திர சிகிச்சைகள் மட்டுமல்லாது தமிழர் தாயகத்தில் வைத்தியசாலைக்கு தேவைப்படும் முக்கிய உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதன் மூலம், அதுவும் சிறுநீரக நோயின் நிலை முற்றி, உயிர் வாழ குருதி சுத்திகரிப்பு செய்யும் வேண்டும் என்ற நிலையிலுள்ள நோயாளிகள் வாழும் பகுதிகளை இனம் கண்டு, அவர்கள் வாழ்விடங்களுக்கு அருகி-லேயே அரசாங்க வைத்திய சாலைகளில் குருதி சுத்திகரிப்பு நிலையங்களை திறந்து வைத்துள்ளதோடு, வறுமை கோட்டின் கீழுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதாரங்கள் வழங்கி பெரும் சேவையினை மக்களுக்கு வழங்கி வருகிறார்.

மருத்துவ உதவிகளால் மறுவாழ்வளிக்கும் "மின்னல்" இசைநிகழ்ச்சி புகழ் செந்தில்குமரனின் நிவாரணம் அமைப்பின் செயல்பாடுகளினால் பல நூறு உயிர்கள் காக்கப்பட்டு, அவர்கள் தம் குடும்பத்தினருடன் இரண்டாம் முறையாக வாழும் பாக்கியத்தினை பெற்று மகிழ்வுடன் இருக்கிறார்கள் என்பதே உண்மை.

இந்த கருத்தொருமித்த மக்கள் பணி ஆற்றும் இந்நல்லிதயம் கொண்ட இணையரால் மேலும் பல தாயக மக்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு வாழ்வு ஒளி பெற இதயம் நிறைந்த வாழ்த்துகள்!

- சிவவதானி

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரத்தை பறிப்பதை ஈ.பி.டி.பி. எதிர்க்கும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்



மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தினை இல்லாமல் செய்வதற்கு அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் தக்கவைக்கப்பட வேண்டும் என்பதுடன் மேலதிக அதிகாரங்களையும் பெற்றுகொள்ளும் வகையில் ஈ.பி.டி.பி. தொடர்ச்சியாக உறுதியுடன் செயற்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தினை மீளப்பெறுவதற்காக உதய கம்பன்பிலவினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்தத்திற்கான தனிநபர் பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில், "அரசியல் ரீதியான நோக்கங்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பிலவினால் இந்த தனிநபர் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. இது நாடாளுமன்ற விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் நிறையப் படிமுறைகளை தாண்டி வரவேண்டியிருக்கின்றது. தற்போதைக்கு அது சாத்தியமில்லை என்றே கருதுகின்றேன்.

ஒருவேளை, இந்த முயற்சி தொடர்ந்தும் முன்னகருமாக இருந்தால், நாம் உருவாக்கி வைத்துள்ள தேசிய நல்லிணக்கத்தினை பயன்படுத்தி, அதனை தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்தார்.

# இலங்கை கடற்படைக் கொடியவர்களால் படுகொலை செய்யப்பட்ட 10 மீனவர்களின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல்







1994.02.18 அன்று மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை இலங்கைக் கடற்படையால் படுகொலை செய்யப்பட்ட கட்டைக்காட்டை சேர்ந்த 10 மீனவர்களது 30ஆம் ஆண்டு நினைவேந்தல் ஞாயிற்றுக்கிழமை (18) இடம் பெற்றது.

1994 ஆம் ஆண்டு இரண்டாம் மாதம் பதினெட்டாம் திகதி அதிகாலை சுண்டிக்குளம் தொடுவாய் வாய்க்கால் கடலில் கட்டுமரங்களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் இலங்கைக் கடற்படையின் டோரா படகுகள் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் 10 மீனவர்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

18.02.2024 மாலை 03.30 மணியளவில் கட்டைக்காடு சென்மேரிஸ் மைதானத்தில் ஆரம்பமான குறித்த நினைவேந்தல் நிகழ்வின் பொதுச் சுடரினை கட்டைக்காடு பங்குத்தந்தை அமல்ராஜ் ஏற்றிவைத்தார்.

அதன்பின்பு உயிரிழந்த பத்து மீனவர்களினதும் உறவுகள் ஈகைச்சுடரினை ஏற்றி இறந்த தமது உறவுகளுக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

இறுதி நிகழ்வாக நட்புரீதியான உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெற்றதோடு வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி வைக்கப்படன.

# வலி வடக்கு 500 ஏக்கர் காணிவிவகாரம் – யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஆரம்பித்த போது கேள்வி எழுப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள்



17-02-2024 சனிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம் பெற்ற போது பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்வி எழுப்பினர்.

கூட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்தில் காணிகள் சுபீகரிக்கப்படாது என்ற தீர்மானம் எட்டப்பட்ட பலாலி பகுதியில் உள்ள 500 ஏக்கர் தனியார் காணிகளை அளவீடு செய்வதற்கு நில அளவைத் திணைக்களத்தை அனுப்பியது யார் என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.

இதன்போது பதில் யாரும் கூறாத நிலையில் நில அளவைத் திணைகள் அதிகாரிகள் இங்கு இருக்கிறீர்களா என சுமந்திரன் கேட்க நில அளவைத் திணைகள் அதிகாரி ஒருவர் இவ்வாறு பதில் வழங்கினார்.

குறித்த காணிகளை அளவிடு செய்து தருமாறு தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்திலிருந்து கடிதம் கிடைக்கப்பெற்றதால் அளப்பதற்காக சென்றோம் மக்கள் அங்கு தடுத்தார்கள் என்றார்.

இதன் போது குறுக்கீடு செய்த அமைச்சர் டக்ளஸ் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் குறித்த விவகாரம் தொடர்பில் கூறுமாறு கூறிய நிலையில் முன்னாள் பிரதேச செயலாளர் விளக்கத்தை முன் வைத்தார்.

குறித்த பகுதியில் உள்ள காணிகளில் விமான நிலையத்தின் தேவைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டவையை தவிர்த்து எஞ்சிய பகுதிகளை கணிப்பதன் மூலம் எதிர்வரும் அபிவிருத்தி திட்டங்களை இலகுபடுத்த எஞ்சிய காணிகளை அளவீடு செய்ய கொழும்பிலிருந்து அறிவுறுத்தல் கிடைத்ததாகக் கூறினார்.



அவர் இவ்வாறு பதில் வழங்கிய நிலையில் யாழ்ப்பாண அரச அதிபரை நோக்கி பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செல்வராஜா கஜேந்திரன் தீர்மானம் எடுக்கப்பட்ட பகுதியை ஏன் அளக்கச் சென்றார்கள் என கேள்வி எழுப்பினர்.

இதன்போது பதில் அளித்த யாழ்ப்பாண அரச அதிபர் குறித்த பகுதியில் காணியை எடுப்பதற்கான எந்த வித தீர்மானமும் மேற்கொள்ளவில்லை என தெரிவித்தார்.

# திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பெண்ணை இடையில் இறக்கி விட்ட அரச பேருந்து சாரதி!



திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பெண்ணை அரச பேருந்து சாரதியும், பேருந்து நடத்துனரும் இடையில் இறக்கி விட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பெண் நேற்றையதினம் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த போது பேருந்து சாரதி பேருந்தினை மிகவும் வேகமாக செலுத்தினார். இதனால் அதிர்ச்சியடைந்த குறித்த பெண் உயிர் அச்சத்தால், பேருந்தை அளவான வேகத்தில் செலுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

ஆனால் அந்த சாரதி அவ்வாறு மெதுவாக செலுத்த முடியாது என்றும், அந்த பெண்ணை கீழே இறங்குமாறும் வற்புறுத்தினர். பின்னர் சாரதியும் நடத்துனரும் இணைந்து அந்த பெண்ணை இடையில் இறக்கி விட்டனர்.

இலங்கையில், அதிலும் குறிப்பாக வடக்கில் அண்மைக் காலமாக பேருந்து விபத்துக்களானது மிகவும் அதிகரித்த வண்ணம் உள்ளன. பேருந்தில் பயணிக்கும் பயணிகள் உயிரை கையில் பிடித்தவாறே பயணம் செய்கின்றனர். இருப்பினும் பேருந்து சாரதிகள் அவற்றினை எல்லாம் பொருட்படுத்தாது தமது மேலதிக கொடுப்பனவுக்காகவும், அதிக வருமானத்தை பெறும் நோக்கிலுல் செயற்பட்டு வருகின்றனர்.

குறித்த பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதியானது மிகவும் பரபரப்பையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# எமது ஆட்சியில் அறிவிக்கப்பட்ட 10,000 இந்திய வீட்டு திட்டம், இன்று ஆரம்பிக்கப்படுவதை வரவேற்கிறோம்

### வீடுகள் அமையும் காணியின் அளவுகள் என்ன என்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்கிறார் மனோ கனேசன் எம்.பி



2017ம் ஆண்டு, எமது ஆட்சியின் போது மலையகத்துக்கு எமது அரசாங்கத்தால் அழைத்து வரப்பட்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி, பெருந்தோட்டங்களில் கட்டப்படும் இந்திய வீடமைப்பு திட்ட வீடுகளின் தொகையை மேலும் 10,000 த்தால் அதிகரிப்பதாக அறிவித்தார். எமது ஆட்சி 2019ல் முடிவுக்கு வந்ததால், எம்மால் அதை தொடர முடியவில்லை. இன்று அந்த வீடமைப்பு திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை அறிந்து, அதை வாழ்த்தி வரவேற்கின்றோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கனேசன் கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது, பெருந்தோட்டங்களில் கட்டப்படும் வீடமைப்பு திட்ட வீடுகளின் காணி விஸ்தீரணம், எமது ஆட்சியில் 7 பேர்ச் என அமைச்சரவை பத்திரம் மூலம் உறுதி செய்யப்பட்டது. 2019ம் ஆண்டு ஆட்சி பொறுப்பை ஏற்ற, இந்த அரசாங்கம் 20 பேர்ச்சில் பெருந்தோட்டங்களில் வீடு கட்டி தருவதாக கூறியது. பின்னர் கடந்த வரவு செலவு திட்டத்தின் போது 10 பேர்சில் பெருந்தோட்டங்களில் வீடமைப்பு என்று கூறியது.

ஆகவே, ஆரம்பிக்கப்படும் இந்திய வீடமைப்பு திட்ட வீட்டு காணிகளின் விஸ்தீரணம் பற்றிய ஒரு தெளிவின்மை மக்கள் மத்தியில் இருக்கின்றது. அரம்பிக்கப்படும் திட்டத்தில் கட்டப்படும் வீட்டு காணி விஸ்தீரணம், ஏழு பேர்ச்சா, பத்து பேர்ச்சா, இருபது பேர்ச்சா என்ற விபரத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டும். காணி விஸ்தீரணம் அதிகரிக்கப்பட்டிருக்குமானால், அவை இந்த அரசினால் 10 பேர்ச் அல்லது 20 பேர்ச் என்ற அளவுகளுக்கு அமைச்சரவை பத்திரம் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறோம்.

காணி விஸ்தீரணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் நாம் பெருமகிழ்ச்சி அடைவோம். எப்படியும், 2017ம் ஆண்டு, எமது ஆட்சியின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியால் 10,000 இந்திய வீடமைப்பு திட்டம், இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை அறிந்து, அதை இதயபூர்வமாக வாழ்த்தி வரவேற்கின்றோம்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# விடுதலைப்புலிகளின் தங்க ஆபரண புதையல் கிடங்கின் அகழ்வு பணிகள் ஆரம்பமாகின

பு. கஜிந்தன்

விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்ட தங்க ஆபரண புதையல் கிடங்கு தொடர்பில் 19-02-2024 அன்று அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸாரால் கடந்த 16ம் திகதியன்று குறித்த அகழ்வு பணிக்கான அனுமதி நீதிமன்றில் கோரப்பட்ட நிலையில், மன்றின் அனுமதியுடன் இன்று அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்டபட்ட விசுவமடு - குமாரசாமிபுரம் பகுதியில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றிலேயே விடுதலைப்புலிகள் அமைப்பினால் யுத்த காலப்பகுதியில் தங்க ஆபரணங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்த நிலையில் இன்று பகல் 2.30 மணியளவில் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



இதன்போது நீதவான், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், கிராம சேவையாளர், உள்ளிட்டோர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட குறித்த அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



# யாழ்ப்பாணம் நயினாதீவு தம்பகைப்பதி அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திரப் பெருமாள் தேவஸ்தானத்தின் பூந்தண்டிகைத் திருவிழா

வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நயினாதீவு தம்பகைப்பதி அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திரப் பெருமாள் தேவஸ்தானத்தின் ஐந்தாம்திருவிழாவின் பூந்தண்டிகைத் திருவிழா 19.02.2024 அன்று மாலை சிறப்பாக இடம்பெற்றது.

இவ் தேவஸ்தானத்தின் திருவிழா கடந்த 15.02.2024 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில், எதிர்வரும் 23.02.2024 அன்று இரதோற்சவமும், மறுநாள் தீர்த்ததோற்சவமும் இடம்பெற்று, அன்று மாலை கொடியிறக்கத்துடன் மஹோற்சவம் இனிதே நிறைவடையும்.

இவ் ஹோற்சவத்தினை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள் தலை மையிலான சிவாச்சாரியர்கள் நடாத்திவைத்தனர்.

பூந்தண்டிகை மஹோற்சவத்தில் பல்வேறு இடங்களில் இருந்து வருகைதந்த பக்தர்கள் கலந்துகொண்டதுடன் இராபோசன அன்னதானத்திலும் பங்குகொண்டனர்.





# நயினை நாகபூசணி அம்மனின் மண்டலாபிஷேக நிறைவு உற்சவம்

64 சக்திப்பீடங்களில் ஒன்றான வரலாற்றுச்சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் தேவஸ்தானத்தின் மண்டலாபி'ேக நிறைவு உற்சவம் 20-02-2024 அன்று பக்திபூர்வமாக இடம்பெற்றது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் மற்றும் எனைய பாரிவார தெய்வங் களுக்கு வி'ேட அபி'ேக ஆராத ணைகள் இடம்பெற்று உள்வீதியுடாக சிம்மவாகனத்தில் வீற்று அம்பிகை பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

இதில் பலபாகங்களில் இருந்து வருகை தந்த பக்தர்கள் கலந்து கொண்டு மண்டாபிலா'க உற்சவ அருட்கடாச்சத்தினை பெற்றுச்சென்றனர்.

மண்டலாபி'ேக கிரியைகளை சிவஸ்ரீ ப.மு.பால குமாரகுருக்கள் தலைமை யிலான சிவாச்சாரியர்கள் நடாத்திவைத்தனர்.

20.01.2024 அன்று 09.38 மணிமுதல் 11.20 மணிவரையான சுப வேளையில், 33 குண்ட பக்' மஹாயாக பிரதி'டா மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.






Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900



இலங்கை செய்திகள் Sri Lanka News

kd;dhu; epUgu;

# மன்னாரில் அரசியலில் ஈடுபடும் மற்றும் அரசியல் ஈடுபட காத்திருக்கும் பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்வு



(17-02-2024)

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பெண்கள் குழுக்களின் ஏற்பாட்டில் 17-02-2024 அன்று மன்னாரில் ஐந்து பிரதேச செயலகங்களை உள்ளடக்கி அரசியலில் ஈடுபடும் மற்றும் அரசியலில் ஈடுபட காத்திருக்கும் பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்வு மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.



சிறப்பு வளவாளராக ஓய்வு பெற்ற முன்னாள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்டாலின் டிமேல் கலந்து கொண்டு அவர்களால் முன் எடுக்கப்பட்டது.

இதன் போது மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேச செயலகங்களை உள்ளடக்கி முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளடங்களாக 45க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கு பற்றியதுடன் எதிர் காலத்தில் அரசியலில் பெண்களின் வகிபங்கு தொடர்பாகவும் இலங்கை அரசியல் உரிமைகள் தொடர்பாகவும் பெண்களின் சமத்துவம் தொடர்பாகவும் பல்வேறு விடயங்களை இவ் செயல் அமர்வின் மூலம் தெழிவூட்டல்களை பெற்றுக் கொண்டனர்.

# தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் 10 வயது சிறுமி கொலை தொடர்பான சந்தேக நபரை இம்மாதம் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு




(19-02-2024)

தலைமன்னார், ஊர்மனை கிராமத்தில் 10 வயது சிறுமி ஒருவர் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் 19-02-2024 அன்று திங்கட்கிழமை மதியம் உத்தரவிட்டார்.



தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் 10 வயது சிறுமி ஒருவர் கடந்த 16 ஆம் திகதி காலை சடலமாக மீட்கப்பட்ட நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட குறித்த கிராமத்தில் உள்ள தென்னை தோட்டத்தில் வேலை செய்யும் திருகோணமலை குச்சவெளி பகுதியை சேர்ந்த 52 வயதுடைய சந்தேக நபரை பொலிஸார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய 48 மணி நேர பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தினர்.

இந்த நிலையில் குறித்த சந்தேக நபர் திங்கட்கிழமை (19) பொலிஸாரினால் மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகள் உயிரிழந்த சிறுமி சார்பில் மன்றில் முன்னிலையாகினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் துப்பாக்கி சூடு – மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

(19-02-2024)

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, உயிலங்குளம் - நொச்சிக்குளம் பகுதியில் 19-02-2024 அன்று திங்கட்கிழமை நொச்சிக்குளம் பகுதியை சேர்ந்த ஒருவரை இலக்குவைத்து துப்பாக்கி பிரயோகம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், குறித்த கிராம மக்கள் குறித்த வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், திங்கட்கிழமை அன்று (19) காலை 8.30 மணியளவில் நொச்சி குளத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தனது கிராமத்தில் உள்ள தனது வயலில் நீர் பாய்ச்சிக் கொண்டு இருந்த வேளையில் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் ஒரு ரி-56 ரக துப்பாக்கி மூலம் அந்த விவசாயி மீது சுட்ட போதும் அவர் மயிரிழையில் உயிர் தப்பியதாக தெரிவிக்கப்படுகின்றது.



இதனால் கடந்த சில காலமாக இந்த கிராமத்து மக்களின் மீது ஒரு குழுவினர் தாக்குதல் நடத்தி இது வரை மூவர் உயிரிழந்துள்ளதாக அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த கிராமத்துக்கு பொலிஸ் காவல் போடப் பட்டும் அதையும் மீறி குறித்த சம்பவம் தொடர்வதாகவும், சம்பவத்தை கண்டித்தும் நொச்சிக்குளம் கிராம மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகள் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.




குறித்த பதாதைகளில் "கொலைகாரர்களுக்கு ஆயுதம் கொடுத்தது யார்?" "எங்களை பாதுகாப்பது அரசின் கடமை" "எங்கள் உயிருக்கு பாதுகாப்பு தாருங்கள்" எங்கள் மக்களுக்கு நீதி இல்லையா? யார் தருவது" போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

இத் துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் உடன் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக மன்னார் மற்றும் உயிலங்குளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை தொடர்ந்து திங்கட்கிழமை காலை முதல் மன்னார் பிரதான பாலம் ஊடாக மன்னார் நகருக்கு வருகை தரும் அனைத்து வாகனங்களும், பொலிஸாரினால் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்ட மை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த ஒரு கூட்டு முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது



**மன்னார் நலன்புரிச் சங்க ஐக்கிய இராச்சியத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன்**

(20-02-2024)

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் நிரந்தரமான வருமானம் ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்கான ஒரு கூட்டு முயற்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மன்னார் நலன்புரிச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன் தெரிவித்தார்.

மன்னார் நலன்புரிச்சங்கம் ஐக்கிய ராச்சியத்தினால் மன்னார் மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான அவசர கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (20) காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மன்னார் நலன்புரிச்சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன், துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், கலந்துகொண்டிருந்தனர்.





இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ஒரு கூட்டு முயற்சியான தொழில் நடவடிக்கைகளை எவ்வாறு ஏற்படுத்திக் கொடுப்பது மற்றும் நவீன தொழில்நுட்பத்தை எவ்வாறு இதனூடாக பயன்படுத்துவது மற்றும் தொடர்ச்சியாக இவர்களுக்கான வாழ்வாதார வருமானத்தை எவ்வாறு அதிகரிப்பது என்பது குறித்து இன்றைய கலந்துரையாடலில் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

மன்னார் நலன்புரிச்சங்கம் மன்னார் மாவட்டத்தில் கல்வி, மருத்துவம், விளையாட்டுத் துறை உள்ளிட்ட விடயங்களில் கவனம் செலுத்தி வரும் நிலையில், இவ்வருடம் மன்னார் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், குறித்த செயல் திட்டத்தை - மன்னார் நலன்புரிச்சங்கம் ஐக்கிய ராச்சியத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கு சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் நிரந்தரமான வருமானம் ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்கான ஒரு கூட்டு முயற்சியாக இக்கலந்துரையாடலில் முன்னெடுக்கப்பட்டது.

## 'CHITRA VARNAM' Grand Musical Show, Presented by Canada's 'AHAA RADIO STATION' on APRIL 27th, 2024 at WHITBY EVENT CENTRE



# கனடாவில் இயங்கிவரும் "ஆஹா" வானொலி நிலையத்தினர் தமது 3வது ஆண்டு நிறைவை முன்னிட்டு பெருமையுடன் நடத்தும் "சித்ரா வர்ணம்"




கனடாவில் இயங்கிவரும் "ஆஹா" வானொலி நிலையத்தினர் தமது 3வது ஆண்டு நிறைவை முன்னிட்டு பெருமையுடன் நடத்தும் "சித்ரா வர்ணம்" மாபெரும் இசை விழாவில் (on April 27th, 2024 at Whitby Event Centre) கலந்து கொள்ள இந்தியாவின் "சின்னக்குயில்" சித்திரா அவர்கள் தனது குழுவினருடன் கனடாவிற்கு வருகின்றார்.

இந்த இசைப் பெருவிழா தொடர்பான விபரங்களை அறிவிக்க "ஆஹா" வானொலி நிலையத்தினர் தமது அட்டகாசமான அறிவிப்பாளர்கள் மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் ஆகியோர் சகிதம் சனிக்கிழமை மாலை பிரம்டன் மாநகரில் ஒரு சந்திப்பு நிகழ்ச்சியை நடத்தினர்.

மிகவும் நேர்த்தியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சந்திப்பு நிகழ்வில் "ஆஹா" வானொலி நிலையத்தின் அதிபர் அருண் மற்றும் அவரது துணைவியார் தலைமையில் பல கலைஞர்களும் விழா அனுசரணையாளர்களும் (ஸ்பொன்சர்ஸ்) கலந்து சிறப்பித்தார்கள்.

மேற்படி சந்திப்பு நிகழ்ச்சிக்கு கனடா உதயன் ஊடகக் குழுமத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள. அங்கு உதயன் பிரதம ஆசிரியர் வாழ்த்துரை வழங்கி "ஆஹா" வானொலி நிலையத்தினரைப் பாராட்டிச் சென்றார்.

April 27th, 2024 at Whitby Event Centre அன்று நடைபெறவுள்ள இந்த அற்புதமான இசைப் பெருவிழாவிற்கான முதல் அனுமதிச்சீட்டுக்களும் அன்றைய தினம் அனுசரணையாளர்களுக்கு வழங்கப்பெற்றன.







# கனடிய தமிழர் பேரவையின் நிர்வாகத்தில் மாற்றங்களைக் கொண்டுவரும் நோக்கில் ரொறன்ரோவில் நடைபெற்று வரும் சமூக ஆர்வலர்களின் கலந்துரையாடல்கள்

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congres Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

- ரொறன்ரோவிலிருந்து சத்தியன்

கனடாவில் விடுதலைப் புலிகள் அமைப்பை பிரதிநிதித்துவம் செய்த உலகத் தமிழர் இயக்கத்தினால் பல வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்ட கனடிய தமிழர் பேரவையின் அண்மைக்கால நடவடிக்கைகள் மீது பொதுமக்களும் கல்விமான்களும் சமூக ஆர்வலர்களும் கொண்ட அதிருப்தி காரணமாக கடந்த சில வாரங்களாக கருத்துப் பரிமாற்றங்களும் உரையாடல்களும் கனடிய தமிழர்கள் மத்தியில் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பெற்ற மத்திய அரசின் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மாகாண அரசின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கல்விச் சபை மற்றும் நகர சபைகளின் உறுப்பினர் அனைவருமே கனடிய தமிழர் பேரவையின் செயற்பாடுகளுக்கும் குறிப்பாக "இமாலயப் பிரகடனம்" என்ற ஒரு அரசியல் சார்ந்த திட்டத்தை இலங்கையில் அறிமுகம் செய்ததில் மக்களால் நிராகரிக்கப்பெற்ற உலகத் தமிழர் பேரவையோடு இணைந்து ஒத்துழைப்பு வழங்கிய காரணத்தால அதைக் கண்டித்து வெளிப்படையான அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளனர். இவ்வாறாக அனைத்து தரப்பினர் மத்தியிலிருந்தும் தோன்றிய எதிர்ப்பலைகள் இன்னும் தணியாத நிலையில் ஆங்காங்கே பல உரையாடல்கள் தமிழர் சமூக மட்டத்தில் நடைபெற்று வருவதாக அறியப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் கனடிய தமிழர் பேரவையின் நிர்வாக அமைப்பில் மாற்றங்களைக் ஏற்படுத்தும் வகையில் ரொறன்ரோ நகரில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் சமூக ஆர்வலர்களின் கலந்துரையாடல்களில் கருத்துக்கள் பகிரப்பட்டுள்ளதாகவும் மேற்படி கலந்துரையாடல்களில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கல்விமான்களும் சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டு கனடிய தமிழர் பேரவை என்ற அமைப்பு கனடிய தமிழர்கள் மத்தியில் மிகவும் அவசியமான ஒன்று என்றும் அதை இயக்கத்தை தடை செய்வதிலும் பார்க்க அந்த அமைப்பின் நிர்வாகத்திலும் ஏனைய செயற்பாடுகளிலும் மாற்றங்களைக் கொண்டு வந்தால் கனடிய தமிழர் பேரவையின் இருப்பினால் பொதுமக்களும் முழுமையான பயனை அனுபவிக்க முடியும் என்ற கருத்துக்களும் பகிரப்பட்டதாகவும் அறியப்படுகின்றது.

இவ்வாறிருக்க, கனடிய தமிழர் பேரவையின் தற்போதைய தலைவ-ியும் மிக விரைவில் தனது பதவியை இராஜினாமாச் செய்யவுள்ளார் என்ற தகவலும் கசிந்துள்ளதாகவும் அறியப்படுகின்றது. அடுத்து வரும் வாரங்களிலும் விரிவுபடுத்தப்பட்ட கலந்துரையாடல்களும் செயற்பாடுகளும் சமூக ஆர்வலர்கள் மத்தியிலில் இடம்பெறவுள்ள எனவும் தெரியவருகின்றது.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டு செங்கலடியில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் அதிகார துஸ்பிரயோகத்துக்கு எதிராக இருவர் சவப்பெட்டியுடன் சாகும்வரை உண்ணாவிரம்







(கனகராசா சரவணன்)

இராஜாங்க அமைச்சர் எஸ் வியாழேந்திரனின் அதிகார துஸ் பிரயோத்துக்கு ஆளாகாமல் செங்கலடி பிரதேச செயலாளர் சட்டப்படி தமது கடமையை புரியுமாறும். அமைச்சரை ஏறாவூர் பற்று பிரதேச அபிவிருத்தி குழு தலைவர் பதவியை பறிக்குமாறு கோரியும் கல் மண் கிறல் ஆகழ்வில் சட்டரீதியாக ஈடுபடுவரும் இருவர் சவப்பெட்டியுடன் மட்டு செங்கலடி பிரதேச செயலகத்திற்கு அருகில் சாகும்வரை உண்ணாவிரதே போரட்டம் ஒன்றை திங்கட்கிழமை (19) ஆரம்பித்துள்ளனர்.

கல், மண், கிறவல் என்பனவற்றுக்கு சட்டரீதியாக அனுமதி பெற்று அகழ்வில் ஈடுபட்டுவருபவர்களின் 2024 ஆண்டு அனுமத-யை புதுப்பிக்க இராஜாங்க அமைச்சரின் சிபார்சு இருந்தால் மட்டும் புதுப்பிக்கமுடியும் என பிரதேச செயலாளர் அனுமதி பத்திரத்தை புதுப்பிக் மறுத்துவருகின்றதையடுத்து அராஜாங்க அமைச்சரின் அதிகார துஸ்பிரயோகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பாக உண்ணாவிரத போரட்டத்தில் இருந்துவரும் இருவரும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், செங்கலடி பிரதேசத்தில் கல், மண், கிறவல் என்பனவற்றுக்கு சட்டரீதியாக அனுமதி பெற்று பலர் அகழ்வு பணியில் ஈடுபட்டுவருகின்றனர் இந்த நிலையில் 2023 டிசம்பர் 31ம் திகதியுடன் அனுமதிப்பத்திரம் காலவதியானதையடுத்து 2024ம் ஆண்டு அதனை புதுப்பிப்பதற்கு கல் மண் கிறவல் அகழ்வு பணியில் ஈடபட்டுவருபவர்கள் பிரதேச செயகத்திற்க சென்றால் பிரதேச செயலாளர் அனுமதி பத்திரத்தை புதுப்பிக்க இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் சிபார்சு வழங்கினால் மட்டும் அதனை புதுப்பித்து தரமுடியும்என புதுப்பிக்கக மறுப்பு தெரிவித்துவருகின்றார்.

இதனையடுத்து மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து பல பிரச்சனைகளை முன்வைத்தோம் அவர் அந்த கடிதத்தை பிரதேச செயலாளருக்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்தார் ஆனால் இதுவரை பதில் எதுவும் இல்லை.

எனவே நாங்கள் புதிதாக ஒன்றும் கேட்கவில்லை ஏற்கனவே கல் மண் கிறவல் அகழ்வதற்கு அது சார்ந்த திணைக்களங்கள் பரிசோதனை செய்து அதற்கான அனுமதியை வழங்கி நாங்கள் அகழ்வு பணியினை மேற்கொண்டுவருகின்றோம்.

ஒவ்வொரு கல்குவாரியிலும் 10 க்கு மேற்படவர்கள் வேலை செய்கின்றனர். இவ்வாறு 300க்கு மேற்பட்டவர்கள் வேலை செய்துவருகின்றனர் இவர்களது வாழ்வாதாரமே இது தான் இந்த நிலையில் நாங்கள ஏற்கனவே வழங்கிய அனுமதியை புதுப்பித்து தருமாறு முறைப்படி விண்ணப்பித்தோம் ஆனால் எங்களுக்கு சட்டபடி ஆவணங்கள் இருந்தும் வியாழேந்திரன் சிபாரிசு செய்யும் நபர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்க முடியும் என பிரதேச செயலாளர் தெரிவித்து அனுமதியை புதுப்பிக்கது மறுத்துவருகின்றார்.

இராஜாங்க அமைச்சரை தனிப்பட்ட முறையில் சந்தித்தால் தான் மட்டும் அனுமதி வழங்கப்படும் என்றால் இதில் யார் அதிகாரிகள்? அரசியல் ரீதியாகவா அல்லது பேரம் பேசுவதற்கா? அமைச்சரை சந்திக்க வேண்டும் எனவே இவ்வளவு காலமும் அனுமதிபத்திரம் வழங்க அரசியல் இருந்ததே இல்லை இந்த முறைதான் அனுமதி பத்திரங்களை புதுப்பிப்பதில் அரசியல் வாதிகள் சம்மந்தப்பட்டுள்ளனர் எங்கள் பிரதேசத்தில் அபிவிருத்திக்குழு என்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு அவருக்கு ஏற்றமாதிரி அதிகாரிகளை துஸ்பிரயோம் செய்து வருகின்றார்.

எனவே இந்த அதிகார துஸ்பிரயோகத்திற்கு முற்றுபள்ளி வைக்க வேண்டும் அரச சேவை அரச அரச சேவையாக இயங்கவேண்டும் என்பதற்காக தீர்வு எட்டும்வரை சாகும்வரை ஒண்ணாவிரத போராட்டத்தை மேற்கொள்ள தீர்மானித்து இருந்து வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.



# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வரலாற்றை மாற்ற வேண்டாம் — ஆண் அதிபரை நிரந்தரமாக்குங்கள் என அடையாளப் போராட்டம்



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு புதிதாக பெண் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆட்சேபனை அடையாள போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

19-02-2024 திங்கட்கிழமை அன்று காலை 7:30 மணிக்கு கல்லூரிக்கு முன்பாக மாணவர்களின் கல்வி நடவடிக்கையை பாதிக்காத வகையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

208 ஆண்டுகளைக் கடந்த பாரம்பரியமிக்க ஒரு ஆண்கள் பாடசாலையில் முதல் முறையாக பெண் அதிபரை நியமிப்பதற்கு ஆட்சேபனை செய்கின்றோம் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு கல்லூரியின் அதிபராக செயற்பட்ட எஸ். இந்திரகுமாரை மீண்டும் நியமிக்குமாறு மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரச்சனைக்கு சரியான ஒரு தீர்வை விரைவில் பெற்றுத்தருவதாக கடற்றொழில் அமைச்சரும், கல்லூரியின் பழைய மாணவருமான டக்ளஸ் தேவானந்தா உறுதி வழங்கியதாக பழைய மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா 2023

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா 2023 நிகழ்வு 19-02-2024 திங்கட்கிழமை அன்று பிற்பகல் 3 மணியளவில். வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைச் செயலாளர். கணேசன் கம்சநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக. விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு. மேலைதேய இசை முழங்க விழா மண்டபம் வரை அழைத்துவரப்பட்டு அங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.



வரவேற்பு நடனம், வரவேற்புரை, தலைமை உரை என்பவற்றை தொடர்ந்து கருத்துரைகளை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி. சத்தியபாமா நவரத்தினம். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர். கணேசரத்தினம் கிரு'ணகுமார். ஆகியோர் ஆற்றியதை தொடர்ந்து சிறப்புரையினை வடமராட்சிவலய கல்வி பணிப்பாளர் கன-கசபை சத்தியபாலன் நிகழ்த்தினார்.



அதனைத் தொடர்ந்து வாசிப்பு மாதத்தை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற வெற்றியாளர்களுக்கான பரிசீல்கள் மற்றும் சான்றிதழ்களை பிரதம, சிறப்பு, கௌரவ விருந்தினர்கள் வழங்கி கௌரவித்தனர்.

இந் நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை ஊழியர்கள், சன சமூக நிலையங்களின் நிர்வாகிகள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# விரிவுரைகளை துரிதப்படுததுங்கள் — யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் கட்புலக் கலைகள் பீட மாணவர்கள் போயராட்டம்





விரிவுரைகளை துரிதப்படுத்தக் கோரி யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீட மாணவர்கள் 20-02-2024 செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழஇராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீட இசைத்துறையில் 4ஆம் வருடத்தில் கல்விகற்கவேண்டிய 3ஆம் வருட 2ஆம் அரையாண்டு மாணவர்களின் விரிவுரை செயற்பாடுகளை துரிதப்படுத்தக் கோரியே வகுப்பு பகி'கரிப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மாணவர்கள் வாயிற் கதவுகளை மூடி போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதோடு விரிவுரையாளர்கள் பணியாளர்கள் உட்செல்லமுடியாமல் தடுத்துவைக்கப்பட்டனர்.

# யாழ்ப்பாண தலைமைப் பொலிஸ் நிலையத்தில்மனித உரிமை ஆணைக்குழு — பாதுகாப்பு தரப்பு கலந்துரையாடல்!



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும், பாதுகாப்பு தரப்பினருக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ்ப்பாண தலைமைப் பொலிஸ் நிலையத்தில் 20-02-2024 அன்று இடம்பெற்றது.



இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி.தெஹிதெனிய, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமால் புஞ்சிஹேவா, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ், பொலிஸ், இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மனித உரிமைச் சட்டங்கள் தொடர்பாகவும், பாதுகாப்பு தரப்பினர் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாகவும், சிறு குற்றம், பாரிய குற்றங்கள் இடம்பெறும்போது விசாரணைகள் மேற்கொள்ளும் விதம் தொடர்பாகவும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கை கல்வி அமைச்சரின் கல்வி சீர்திருத்த கொள்கை கூட்டத்தில் நித்திரை கொள்ளும் வடமாகாணத்தைச் சேர்ந்த வலயக்க கல்விப் பணிப்பாளர்

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இடம்பெற்ற கல்வி சீர்திருத்த கொள்கை கூட்டத்தில் வடக்கில் இருந்து சென்ற வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் ஆழ்ந்த நித்திரை கொள்ளும் புகைப்படம் அமைச்சின் இணையதளத்தில் வெளியாகியுள்ளது.

இலங்கை முழுவதிலிருந்தும் மாகாண மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளருங்கு கல்வி அமைச்சில் கல்வி சீர்திருத்த கொள்கைக் கூட்டம் வெள்ளிக்கிழமை (16) இடம்பெற்றது.

இந்நிலையில் வடமாகாணம் சார்ந்து சகல வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தில் வடமாகாணத்தைச் சேர்ந்த வலயக்க கல்விப் பணிப்பாளர் ஒருவர் ஆழ்ந்த நித்திரை கொள்ளும் புகைப்படம் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியாகியுள்ளது.




# புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் துரித கணிதம் போட்டியில் சாதனை படைத்த முல்லைத்தீவு விஸ்வநாதர் ஆரம்பப் பாடசாலையின் மாணவர்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு விஸ்வநாதர் ஆரம்பப் பாடசாலையின் 2023 ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் துரித கணிதம் போட்டியில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இன்நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கோட்டக்கல்வி பணிப்பாளர் சி. பாஸ்கரன், அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள, பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையினை மேன்படுத்தும் முகமாக விஸ்வநாதர் பாடசாலைக்கேன ஸ்மாட் வகுப்பறை ஒன்றை அமைப்பதற்கு எற்பாடுகள் செய்துதருவதாகவ உறுதியளித்தார்.









# கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் தமிழ் மொழித்தின விழா

குறித்த நிகழ்வு 17-02-2024 அன்று காலை 9 மணியளவில் பிரதி வலக்கல்விப் பணிப்பாளர் வாசுதேவன் தலைமையில் கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்பாண பல்கலைக்கழக கல்வியற்துறை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா, வடக்கு வலய பதிவாளர் நாயகம் சிவநயனி சர்வேஸ்வரா ஆகியோர் பிரதம விருத்திகர்களாக கலந்து கொண்டனர்.

நிகழ்வில் விருத்தினர்கள் வரவேற்கப்பட்டதை அடுத்து மங்கள விளக்கேற்றப்பட்டது. தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டதை அடுத்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து தமிழிற்கு அழப்பெரும் பணியாற்றி விபத்தில் உயிரிழந்த ஜீவரஞ்சினி விவேகானந்தராஜா ஆசிரியருக்கு “தமிழ் அன்னை” விருது வழங்கி வைக்கப்பட்டது.



குறித்த ஆசிரியையின் திரு உருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து குறித்த விருது அவரது குடும்பத்தினரிடம் வழங்கி வைக்கப்பட்டது.

மாணங்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்ற அதே வேளை, தமிழ்த்தின போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில், வலயக்கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# தமிழரசுக் கட்சியைக் காப்பாற்ற முடியுமா?

**– யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



ஒரு குடும்பத்துக்குள் பிணக்கு வந்தால் அதை அக்குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் தீர்த்து வைப்பதுண்டு. அல்லது அந்தக் குடும்பத்தின் நலனில் அக்கறை கொண்ட வெளியாட்கள் அதைத் தீர்த்து வைக்க முடியும். அதுவும் முடியாது போனால், விவகாரம் போலீஸ் நிலையத்துக்கோ, நீதிமன்றத்துக்கோ போகும்.

தமிழரசுக் கட்சிக்குள் நடப்பவற்றைப் பார்த்தால் அங்கே இரண்டு அணிகளுக்கும் இடையிலான மோதலைத் தீர்த்து வைக்க கட்சிக்குள் மூத்தவர்கள் யாரும் இல்லையா என்று கேட்கத் தோன்றுகிறது. கட்சிக்குள் மூத்தவர்களாகக் காணப்படும் சம்பந்தர், மாவை, குலநாயகம், கனகசபாபதி, சிவஞானம்... போன்றவர்கள் ஏதோ ஒரு பக்கம் உலாஞ்சுவதாகத் தெரிகிறது. அதனால் அவர்கள் நடுநிலையாக நின்று விவகாரத்தைக் கையாள முடியாதவர்களாகக் காணப்படுகிறார்கள் என்று தோன்றுகிறது. சம்மந்தரும் மாவையும் கனகசபாபதியும் அதிகம் சிறீதரனுக்கு நெருக்கமாகக் காணப்படுகிறார்கள். குலநாயகமும் சிவஞானமும் அதிகம் சுமந்திரனுக்கு நெருக்கமாகக் காணப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பின்னணியில், கட்சிக்குள் வெடித்திருக்கும் பிளவைத் தீர்த்து வைப்பதற்கு கட்சியின் மூத்தவர்களால் முடியவில்லை. அதன் விளைவாகத்தான் விவகாரம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றது.

இப்பொழுதும் கட்சியைப் பாதுகாக்க வேண்டும் என்று கட்சியின் மூத்த தலைவர்கள் முடிவெடுத்தால், விவகாரத்தைச் சுமூகமாகத் தீர்க்க முடியும். ஆனால் அப்படிப்பட்ட மூப்போடும் முதிர்ச்சியோடும் பக்குவத்தோடும் கட்சிக்குள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

கொழும்பில் நிகழ்நிலைப் பாதுகாப்பு சட்டத்துக்கு எதிராக சுமந்திரன் வழக்கு தொடுத்த அதே காலப்பகுதியில், திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் அவருக்கு இணக்கமானவர்கள் என்று கருதப்படுகின்றவர்களால் இரண்டு வழக்குகள் கொடுக்கப்பட்டன.

தென்னிலங்கையில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக சர்ச்சைக்குரிய ஒரு சட்டத்தை சுமந்திரன் எதிர்க்கிறார். ஆனால் அவருடைய சொந்தக் கட்சியை உடைக்கும் வேலைகளை அவர் தன்னுடைய விசுவாசிகளுக்கு ஊடாகச் செய்கிறார் என்று அவருடைய எதிரணி அவரை குற்றம் சாட்டுகின்றது.

ஆனால் தனக்கும் அந்த வழக்குகளுக்கும் சம்பந்தம் கிடையாது என்று சுமந்திரன் மறுத்திருக்கிறார். எனினும், அவர்தான் எல்லாவற்றின் பின்னணியிலும் நிற்கிறார் என்ற அபிப்பிராயம் பரவலாகக் காணப்படுகின்றது. மேற்படி வழக்குகளின் பின்னணியில் சுமந்திரனே இருப்பதாக ரவிராஜின் மனைவி சசிகலா என்ற பெயரில் உள்ள ஒரு முகநூல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரச்சனை ஒரு சட்ட விவகாரம் ஆக்கப்பட்டதும் சிறீதரன் தன்னுடைய முகநூலில் "தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வும். தர்மம் மறுபடியும் வெல்லும்" என்று எழுதினார். அதன்பின் அவருக்குப் பதில் கூறுவது போல, சுமந்திரனுக்கு ஆதரவான வடமாராட்சியைச் சேர்ந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் அதே வசனத்தை தனது முகநூலில் எழுதினார். இதில் யார் தர்மத்தின் பக்கம் நிற்கின்றார்கள்? யார் அதர்மத்தின் பக்கம் நிற்கின்றார்கள்? எது தர்மம்?

கட்சி பல ஆண்டுகளாக யாப்பை மீறி வழி நடத்தப்பட்டிருக்கிறது என்று சிவகரன் கூறுகிறார். அவர் தமிழரசு கட்சியின் இளைஞரணித் தலைவராக இருந்தவர். பின்னர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர். பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக சிவில் சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர். கட்சிக்குள் இரண்டு அணிகள் உருவாகிய போது அவர் சுமந்திரனின் பக்கம் நிற்கிறார் என்ற குற்றச்சாட்டு எதிரணியால் முன்வைக்கப்படுகின்றது.

தனது முகநூல் பக்கத்தில் சிவகரன் ஒரு குறிப்பை எழுதியிருந்தார். அக்குறிப்பில் அவர் கட்சியின் யாப்பு தொடர்ச்சியாக மீறப்பட்டு வந்ததைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். கட்சியின் யாப்பு நடந்து முடிந்த தேர்தலில் மட்டும் மீறப்படவில்லை. தேர்தலுக்கு முன்னரே அது மீறப்பட்டு விட்டது. அதற்குக் கட்சியின் முக்கியஸ்தர்களாகக் காணப்பட்ட எல்லாச் சட்டத்தரணிகளும் பொறுப்பு. சிவகரனின் வார்த்தைகளில் சொன்னால், கட்சிக்குள் "வழிப்போக்கர்கள்" தலையெடுத்ததே யாப்புக்கு முரணாகத்தான்.

சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பின் யாப்பானது தமக்கு நீதியைத் தரவில்லை என்று கூறிப் போராடும் ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் உள்ள மூத்த பெரிய கட்சியானது தனது சொந்த யாப்பையே மீறிச் செலுத்தப்பட்டிருக்கிறது. இத்தனைக்கும் கட்சியின் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் சட்டத்தரணிகள் பலர் உண்டு. சட்டத்தரணிகளின் அரசியல் அல்லது அப்புக்காத்துக்களின் அரசியல் ஒரு மூத்த பெரிய கட்சியை நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

கட்சிக்குள்ளேயே விவகாரத்தைத் தீர்த்து வைக்க முடியவில்லை என்பது கட்சி தோற்றுப் போய்விட்டதைக் காட்டுகின்றது. கட்சிக்குள் மூத்தவர்களாகக் காணப்படும் யாரும் அதைத் தீர்த்து வைக்கும் தகமையோடும் முதிர்ச்சியோடும் இல்லை என்பதையும் அது காட்டுகின்றது. கட்சிக்குள் மட்டுமல்ல கட்சிக்கு வெளியேயும் விவகாரத்தைத் தீர்த்து வைப்பதற்குப் பொதுவான யாரும் இல்லையா என்ற கேள்வி எழுகிறது.

முன்பு கட்சிகளுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த முனைந்த சிவில் சமூகங்கள் இப்பொழுது கட்சிக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்தும் ஒரு விடயத்தில் தலையிடுமா என்று பார்த்தால், சிவில் சமூகங்கள் மத்தியிலும் கட்சியின் இரண்டு அணிகளுக்கும் சார்பானவர்கள் இருப்பதாகத் தெரிகிறது. பொதுவாக கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடும் சிவில் சமூகங்கள் இந்த விடயத்தில் இதுவரை தலையிடாமல் இருப்பதற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். கட்சிக்குள் ஏற்பட்ட பிளவு சிவில் சமூகங்களிலும் பிரதிபலிக்கின்றது.

சிவில் சமூகங்கள் மட்டுமல்ல, மதத் தலைவர்களும் இந்த விடயத்தில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. பொதுவாக சிவில் சமூகங்கள் முன்கை எடுக்கும் போதுதான் மதத் தலைவர்களும் அவற்றோடு இணைந்து செயல்படுவதுண்டு. இம்முறை சிவில் சமூகங்கள் இந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை. கடந்த 15 ஆண்டுகளிலும் கட்சிகளுக்கு இடையே ஐக்கியத்தை ஏற்படுத்தும் விடயத்தில் சிவில் சமூகங்கள் தலையீடு செய்திருக்கின்றன. ஆனால் கட்சிக்குள் பிணக்குகள் ஏற்படும் போது அதைத் தீர்ப்பதற்கு சிவில் சமூகங்கள் தலையிட்டது குறைவு.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் மணிவண்ணன் அணி உடைந்து வெளியே வந்த பொழுது, சில தனிநபர்கள்தான் தலையிட்டார்கள். எனினும் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. இப்பொழுது தமிழரசுக் கட்சிக்குள்ளும் உடைவு வந்திருக்கிறது. அதைத் தீர்ப்பதற்குச் சிவில் சமூகங்கள் தலையிடாத ஒரு நிலை காணப்படுகிறது.

அதாவது தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள மூத்த கட்சிகளில் ஒன்றாகவும் உள்ளவற்றில் பெரியதாகவும் காணப்படும் ஒரு கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிணக்கைத் தீர்த்து வைக்க கட்சிக்குள் மூப்பாக உள்ளவர்களாலும் முடியவில்லை கட்சிக்கு வெளியேயும் யாரும் இல்லை. இது தமிழரசுக் கட்சியின் சீரழிவை மட்டும் காட்டவில்லை. தமிழ் அரசியலின் சீரழிவையும் காட்டுகின்றது. ஒரு பொதுவான மக்கள் இயக்கம்; ஒரு தேசிய இயக்கம் இல்லாத பாரதூரமான வெற்றிடத்தை அது காட்டுகின்றது.

அரங்கில் உள்ள புத்திஜீவிகள், கருத்துருவாக்கிகள், குடிமக்கள் சமூகங்கள், மதத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற யாருமே இந்த விடயத்தில் தலையிடாத ஒரு நிலை. பெரும்பாலானவர்கள் இது தங்களுக்குச் சம்பந்தமில்லாத ஒரு விடயம் என்று கருதிக் கொண்டு பார்வையாளர்களாகக் காணப்படுகிறார்கள். இது தமிழ் மக்கள் ஓர் அரசியல் சமூகமாகப் பலமாக இல்லை என்பதைக் காட்டுகின்றது. இது தமிழரசுக் கட்சிக்கு வந்த சோதனை மட்டுமல்ல, தமிழ் அரசியல் சமூகம் முழுவதற்கும் வந்த ஒரு சோதனை.

அவ்வாறு கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் விவகாரத்தைத் தீர்த்து வைப்பதற்கு நீதியான, மூப்பான ஆட்கள் இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் விவகாரம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது. அதாவது தமிழ்த் தேசிய அரங்கில் உள்ள மூத்த, மிகப் பெரிய கட்சி ஒன்றுக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை தீர்ப்பதற்கு கட்சிக்குள்ளேயும் ஆட்கள் இல்லை; கட்சிக்கு வெளியேயும் ஆட்கள் இல்லை.

இந்த நிலை தொடருமாக இருந்தால், கட்சியின் எதிர்காலத்தை நீதிமன்றம் தான் தீர்மானிக்கும். நீதிமன்றத்தில் இப்பொழுது தொடுக்கப்பட்டிருக்கும் வழக்குகளின் தீர்ப்புகளின் அடிப்படையில் அது தீர்மானிக்கப்படும்.

தமக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலை, போர்க் குற்றம், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்றவற்றுக்கு எதிராக நீதி கேட்டுப் போராடும் ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் காணப்படும், உள்ளதில் பெரிய ஒரு கட்சி தனக்குள் நீதி கேட்டு நீதிமன்றத்தை நாடியிருக்கிறது. இது, தமிழ் மக்கள் தொடர்ந்து தோற்றுக் கொண்டிருப்பதைத்தான் காட்டுகின்றதா? அல்லது சட்டத்தரணிகளின் அரசியல் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் தோற்கடித்துக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றதா?

---

## வீணாவின் கவிக்கணை

கண்ணாடி என்பது
என் முகத்தை மட்டும்
காட்டுவது அல்ல
என் மனதையும்
சேர்த்துத்தான்,
கண்ணாடி என்பது
என் அழகை மட்டும்
வர்ணிப்பவை அல்ல
நான் யார் என்பதை
எனக்கு இனம்
காட்டுபவையும்தான்
நான் யாராக இருந்தாலும்,
எப்படித் தெரிந்தாலும்
என்னை நான் எப்படி
ஏற்றுக்கொள்ள வேண்டும்
என்ற மனப்பக்குவத்தை காட்டும்
ஒரே உண்மையான
தோழி என் நிழல் கண்ணாடி மட்டுமே.



# இலங்கைக்குள். இந்திய அமெரிக்க சீன வல்லாதிக்கத்தில் சிக்கி அழிக்கப்பட்டுவரும் ஈழத் தமிழர் உரிமை போராட்டம்

[ஊடகன்]

<ழத் தமிழர்கள் கடந்த 75 வருடங்களாக தென்னிலங்கையின் சிங்கள பௌத்த அரசுகளின் அடக்கு முறைக்கு எதிராகக் குரல் எழுப்பி. பின்னர் சாத்வீதிகப் போராட்டங்களை நடத்தி அவற்றிலும் எதனையும் சாதிக்க இயலாது இறுதியில் ஆயுதப் போராட்டத்தையும் அதற்கு சமாந்தரமாக அரசியல் போராட்டங்களையும் நடத்தி அதில் வெற்றியின் உச்சத்தை அடைந்து விட்டது போன்று ஒரு இடத்தை அடைந்தனர்.

ஆனால் உலக நாடுகளின் தென்னாசியாவில் ஒரு மக்கள் புரட்சி வென்றுவிடக்கூடாது என்பதில் கவனமாகச் செயற்பட்டதால் தங்களுக்குள் ஆதிக்கப் போட்டிகளில் மூழ்கி போட்டியிட்டுக்கொண்டாலும். வீடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அவர்களது முப்படை கொண்ட சிற்றரசு ஒன்றையும் அழித்தார். அதோடு மாத்திரமல்லாது அந்த வன்னி மண்ணில் நிரந்தரமாக வாழ்ந்து விடுதலைப் புலிகளோடு ஒன்றிய வண்ணம் தங்கள் சாதாரண வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த சுமார் 1 இலட்சம் அப்பாவி மக்களையும் கொன்றழித்தார்கள்.

"இறுதி யுத்தம்" என்ற பெயரோடு ஈழத் தமிழர்களின் உரிமைக்கான போராட்டங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்ட 2009ம் ஆண்டிலிருந்தும் இன்று வரை எமது தமிழ் மக்களின் அனைத்து கூறுகளையும் சிதைக்கும் வகையில் சர்வதேசச் சக்கிகளும் இலங்கையில் ஆட்சி பீடத்தில் ஏறுகின்றவர்களும் அவர்களோடு இணைந்து தமிழ்த் தலைவர்கள் உட்பட அனைவரும் எவ்வித இலட்சியமும் இல்லாத சுயநல அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இனி சர்வதேச ரீதியில் நேற்று இன்று நாளை என்ன நடைபெற்றது என்ன நடக்கவுள்ளது என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.!

இலங்கை தமிழர்களின் உரிமை போராட்டம் அமெரிக்கா, இந்தியா வல்லாதிக்க போட்டியில் பின்னப்பட்டு சிக்குண்டு சின்னா பின்னாமாகப்பட்டது போல சிங்கள பேரினவாதம் பிரித்தானியாவின் பிரித்தாளும் தந்திரோபாய மூலம் தமிழர்களின் ஆயுத போராட்டதை எவ்வாறு இல்லாது ஒழித்ததே அதே பாணியில் விடுதலைப் புலிகாளால் ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை பிளவை ஏற்படுத்தியதுடன் புலிகளால் சிபார்சு செய்யப்பட்டு எஞ்சியுள்ள தமிழரசு கட்சியை சின்னா பின்னமாக்க நாடாளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரன் இரா. சாணக்கியன் களம் இறக்கப்பட்டு அரங்கேற்றி அதன் ஊடாக சிங்கள பேரினவாம் வெற்றி கண்டுள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

தமிழர்களின் உரிமை போராட்டத்துக்காக தந்தை செல்வா ஆரம்பித்த தமிழரசு கட்சி பின்னாளில் தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியாக தேற்றம் பெற்று செயற்பட்டு தமிழர் உரிமைக்காக அகிம்சை ரீதியாக போராட்டங்களை நடாத்தி தொடர்ந்து குரல்கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் அகிம்சை போராட்டம் சரிவராது தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என தந்தை செல்லா தெரிவித்த கருத்தையடுத்து பொங்கி எழுந்த இளைஞர்கள் ஆயுத போராட்டத்தில் குதித்தனர் இதனை அறிந்த இந்தியா பிரதமர் இந்திரா காந்தி தனது நாட்டின் தேச நலனுக்காக தேசிய புலனாய்வான றோவின் ஆதரவுடன் இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ் இளைஞர்களை ஒருங்கிணைத்து பல இயக்கங்கள் உருவாகி அவர்களுக்கு ஆயுத பயிற்சி தொடக்கம் ஆயுதங்களையும் வழங்கி சிங்கள தேசத்திற்கு எதிராக போராடவைத்தது.

இந்த இயக்கங்களை றோவின் மூத்த அதிகாரியாக அப்போது சென்னையில் இருந்து செயற்பட்ட உன்னிகிருஷ்ணன் தலைமையில் கண்காணித்து வந்தனார் இதன் போது அந்த மூத்த அதிகாரி அமெரிக்காவுக்கும் புலனாய்வு வேலைகளை இரகசியமாக செய்து வந்துள்ளார். இதன் அடிப்படையில் றோவின் செல்லப் பிள்ளையாக இருந்து வந்த ரெலோவை இல்லாது ஒழிப்பதற்கு அமெரிக்காவின் திட்டத்தை றோவின் மூத்த அதிகரி ஊடாக கச்சிதமாக செயற்படுத்தி வெற்றிகண்டது.

அதாவது ரொலோவிற்குள் முரண்பாட்டை ஏற்படுத்தி அவர்களை தாஸ்குறுப் பொபிகுறுப் என இரண்டாக உடைந்த நிலையில் அமெரிக்கா சார்பு நிலை விடுதலைப் புலிகளுக்கு றோவின் அந்த மூத்த அதிகாரி ஊடாக ரொலே சிறிசபாரட்ணத்தை சுட்டுகொன்று ரெலோவை முற்றாக அழிக்குமாறு உத்தரவுக்கமைய புலிகள் அதனை செய்தனர்.

அமெரிக்காவிற்காக செயற்பட்ட அந்த றோவின் மூத்த அதிகாரியை ரஜீவ் காந்தி டெல்லிக்கு வரவழைக்கப்பட்டு கைது செய்தனர். பின்னர் நரசிம்மராவ் பிரதமராக வந்ததும் அவர் வெளியில் வந்தார்.

இதன் பின்னர் அமெரிக்கா சார்பான விடுதலை புலிகளை இந்தியா முற்றாக ஒழிப்பதற்கான திட்டமிட்ட நிலையில் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அதன் பின்னர் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் ஏற்பட்ட மோதல் இடம்பெற்றது.

இவ்வாறான நிலையில் ராஜீவ் காந்தியை புலிகள் கொலை செய்ததையடுத்து இந்தியா மிக கவனமாக சந்தர்பத்தை பார்த்துக் கொண்டிருந்தது அப்போது 2002 சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் மீண்டும் அரசாங்கத்துடன் புலிகள் யுத்தம் ஆரம்பித்ததையடுத்து இந்திய பிரதமரான சோனியா காந்தி தனது கணவர் ராஜீவ் காந்தியை கொலை செய்த புலிகளை முற்றாக அழிக்க அரசாங்கத்துடன் சேர்ந்து புலிகளை சோனியா காந்தி முற்றாக அழித்து தனது பழியை தீர்த்து கொண்டார்.

இவ்வாறான நிலையில் தமிழர்களின் உரிமை போராட்டத்துக்காக ஆரம்பித்து பின்னர் புலிகளுக்கு எதிராக அரசாங்கத்துடன் சோர்ந்து இயங்கிவந்த ஆயுத குழுக்கள் உட்பட அரசியல் கட்சிகள் உட்பட அனைவரையும் புலிகளால் ஒன்றிணைக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கினர்.

இதனடிப்படையில் இந்தியா தேசிய புலனாய்வின் தேசிய பாதுகாப்பு கொள்கைகளில் ஒன்றாக புலிகள் சார்புடைய எந்த கட்சிகளோ அமைப்புக்களோ இலங்கையிலே வெளிநாடுகளிலே இல்லாமல் செய்யும் வேலைத்திட்டங்களை செய்து வந்த நிலையில் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் புலிகளால் ஒன்றிணைக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது கண்வைத்தது.

இதற்கு முதலில் தமிழ் கூட்டமைப்பை பிளவுபடுத்தவேண்டும் அதற்கு இந்திய சர்புடைய சுரேஸ் பிறேமச்சந்திரன் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் ஊடாக தமிழ் தசிய கூட்டமைப்புக்கு பிளவை ஏற்படுத்தி தனது சார்புடையவர்களை கொண்டு புதிய தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கியது வெற்றி கண்டது.



அதேபோல அமெரிக்கா சார்புடைய கஜேந்திரகுமார் அணியினரையும் சுமந்திரன் ஆகியோரை அமெரிக்கா பயன்படுத்தியது இவ்வாறு இந்தியாவும் அமெரிக்காவும் தனது பூகோல நலன்களுக்காக தமிழர்களின் தலைமைகளை தமது நலன்களுக்கு ஏற்றால் போல ஆட வைத்தனர் அவர்களும் அவர்களுக்காக நடனம் ஆடினர்.

இருந்தபோதும் அமெரிக்கா சார்புடைய தமிழ் அரசியல் கட்சிகளை தனது பக்கம் மாறாதா கட்சிகளை உடைப்பது என்ற செயற்பாட்டில் செயற்பட்டுக் கொண்டிருந்த போது இந்திய சார்புடைய சிறீதரன் தமிழரசு கட்சியின் தலைவராக வந்ததையடுத்து இந்தியா பெருமூச்சு விட்ட நிலையில் அமெரிக்கா சிறிதரனை தனது வலையில் சிக்க வைப்பதற்காக எம். சுமந்திரன் சாணக்கியன் மூலம் சிறிதரனுக்கு நெருக்கடியை கொடுப்பதற்காக இந்த நீதிமன்றத்தில் தமிழரசு கட்சிக்கு எதிராக வழக்கு தொடர வைத்தனர்.

இந்த சதிக்கு சிங்கள பேரினவாதிகளின் செல்லப் பிள்ளையாக மொட்டு கட்சியில் இருந்த சுது மல்லி என்றழைக்கப்படும் சாணக்கியனை சுமந்தரணின் ஆதரவுடன் தமிழரசு கட்சிக்கு உள் நுழையவைத்து நாடாளுமன்ற உறுப்பினராக்கி தனது சார்பு நிலையில் சாணக்கியன் தொடர்ந்து வைத்துக் கொண்டார்.

இதேவேளை சிங்கள பேரினவாத மொட்டு கட்சி மகிந்த ராஜபக்ஸ சுது மல்லிக்கு கொடுக்கப்பட்டவேலையை அவர் கட்சிதமாக காய்நகர்தினார் அதாவது சிங்களவர்களுக்கு எதிரா-னவன் என காண்பித்து தனக்கு மட்டும் தான் மூன்று மொழி தெரியும் என அநாகரிகமாக கத்தி தமிழர்களுக்கு உணர்ச்சி ஏற்றி அரசுக்கு எதிராக வீதி மறியல் போராட்டங்களை ஏற்பாடு செய்து தமிழர்களின் கதாநாயகன் தான்தான் என சித்தரித்து வேடம் போட்டுகாட்டிவந்தார்.



அரசுக்கு எதிராக நடந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையான போராட்டம், மற்றும் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம் உட்பட பல போரட்டங்களை தலைமை தாங்கி நடாத்துவது போல மக்கள் மத்தியில் காண்பித்து அங்கு பொலிசாருடன் முறுகுவது போல பொலிசாருடன் சண்டையிட்டு அங்கிருந்து இவர் எவ்வாறு நடந்து கொண்டு தான் மாத்திரம் தப்பித்து கொண்ட சுது மல்லிக்கு சிங்கள பேரினவதிகளால் கொடுக்கப்பட்ட நாடகத்தை செவ்வன அரங்கேற்றி கொடுத்துள்ளார்.

இவ்வாறு இந்தியா கொண்டுவந்த 13 திருத்தசட்டதை மீண்டும் கொண்டு வருவதற்கு இந்தியா முயற்சி செய்துவரும் நிலையில் அதற்கு ஆதரவு தெரிவித்து வந்த சுரேஸ், சித்தார்தன், செல்வம் அடைக்கலநாதன் அணியினரை அதற்கு எதிராக செயற்படுவதற்காக அமெரிக்கா அமெரிக்காவிலுள்ள புலம் பெயர்ந்த அமைப்பு ஒன்றின் ஊடாக ஆளுக்கு 2 பில்லியன் பணம் அண்மையில் கைமாறப்பட்டுள்ளது.

இந்த தரகு வேலையை மகிந்தவின் செல்லப்பிள்ளையான ஒரு பிரல்யமான தமிழ் ஊடகவியலாளராக இருந்து செயற்பட்டவர் மூலம் அரங்கேற்றப்பட்டுள்ளதுடன் இவர் மூலம் தான் அமெரிக்கா அரக்கல போராட்டத்திற்கு 350 பில்லியன் ரூபாவை சஜித்துக்கு வாங்கு கொடுக்கப்பட்டது.

இந்த தகவல் மகிந்தவுக்கு தெரியவந்தால் தனக்கு நெருக்கடி ஏற்படும் என மகிந்தவிடம் அவர் சஜித்துக்கு பணம் வாங்கி கொடுத்ததாக தெரிவித்ததையடுத்து கோடபாய 400 பில்லியன் வாங்கி தந்தால் தான் ஜனாதிபதி பதவியில் இருந்து இராஜணாமா செய்வதாக தெரிவித்து அதனை அமெரிக்காவிடம் இருந்து வாங்கி கொடுத்து அவர் இராஜணாமா செய்யப்பட்டது இவைகள் அனைத்தும் அன்டகிறவுன் டீல் சந்திக்குவராத இராஜ இரகசியங்கள்.

இவ்வாறு தமிழர்களின் உரிமை போரட்டத்தை வைத்து தமிழ் தலைமைகள் வல்லரசு நாடுகளின் விஜபி இன்போமர்களாக செயற்பட்டு வருகின்றனரே தவிர உண்மையில் தமிழ் மக்களின் நன்மைகளுக்காக செயற்படவிலை ஆனால் இதனை கேட்டால் இராஜதந்திரிகளுடன் சந்திப்பு என்கின்றனர்.

அப்படி என்ன சந்திப்பு இவர்கள் தமிழர்களின் கல்வி பொருளாதாரம் வாழ்வாதாரம் நிலப் பிரச்சனை இனழிப்பு தொடர்பாக எந்த திட்டதை ஆவணங்களுடன் முன்வைத்துள்ளனர் இவர்கள் தமது நாடாளுமன்ற பதவி காலத்தில் அவர்களது மாவட்டத்திலுள்ள மக்களின் கல்வி பொருளாதாரம் வாழ்வாதாரம் மேம்படுத்த என்ன திட்டம் வைத்துள்ளனர் என்றால் ஒன்றுமே இல்லை ஏன் என்றால் இவர்கள் காலையில் எழுந்ததும் தமிழர்களை ஊர்ச்சி பொங்க வைத்திருக்க வேண்டும் என்பற்காக சும்மா வாயால் வந்ததை எல்லாம் ஊடகங்களன் முன்னால் பேசினால் சரி என மக்களை ஏமாற்றும் நடவடிக்கையினை மட்டுமே செய்து வருகின்றனர்.

அதேவேளை தேர்தல் காலம் வந்ததும் தமிழ் தலைமைகள் ஒன்றினைய வேண்டும் என தமிழ் கட்சிகள் கோஷமிட்டு அறைகூவல் விடுப்பதும் ஆளுக்கு ஒரு கூட்டு என கூட்டுச் சேர்வதும் பின்னர் ஒருவருக்கு ஒருவர் குற்றம் சுமத்தி கூட்டில் இருந்து வெளியேறுவதும் தான் கடந்த 14 வருடங்களாக செய்துவருகின்றனர்.

தமிழர் நலனுக்காக தான் செயற்படுவதாக தெரிவித்து வரும் இந்த தமிழ் தலைமைகள் வடக்கு கிழக்கில் 30 கட்சிகளுக்கு மேல் பதிவு செய்து கொண்டுள்ளனனர் இவர்கள் அனைவரும் தமது கட்சி பதவிகளை விட்டெறிந்துவிட்டு ஏன் ஒரு கட்சிக்குள் சேர்ந்து தமிழ் மக்களின் உரிமைக்கா செயற்பட முடியாது என்ற கேள்வி எழுகின்றது.

ஏன் என்றால் அவர்களுக்கு தேவை பதவி பணம் மட்டும் தான் இவர்களுக்கு மக்களை பற்றி கவலை இல்லை தமது கதிரைக்கும் தலைமையை காப்பாற்ற மட்டுமே பேர்தும் என்ற எண்ணக்கருவில் செயற்பட்டுவருகின்றனர்.

சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் தமது உரிமை போராட்டத்திற்காக என்னற்ற உயிர்தியாகங்கள் சொத்துக்கள் உற்றார் உறவினர் வீடு வாசல்கள் கைகால்கள் இழந்து நிர்கதியாக இருக்கின்ற மக்களின் வாழ்வுக்கு செய்ய வேண்டியவற்றை செயற்படுத்தி கொண்டு உரிமை போராட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

அதேவேளை இராஜதந்திரத்தை கற்றுக்கொண்டு பூலோக அரசியலுக்கு எற்ப எமது தாயக விடுதலைக்காக இராஜதந்திர ரீதியாக செயற்படவேண்டும் அதற்கான திட்டம் இடப்பட்டு முதலில் அத்திவாரம் போபடவேண்டும் இதனை விடுத்து சுயநல அரசியலுக்காக தமிழ் தலைமைகள் தமிழ் மக்களைவிற்று பிழைப்பு நடாத்துவதை நிறுத்தி இதய பூர்வமாக தமிழ் மக்களின் நலனுக்காக செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

எனவே இந்தியா அமெரிக்கா சீனா வல்லாதிக்க நாடுகளிடனும் சிங்கள பேரினவாதிக-ளின் சதிவலையில் பின்னப்பட்டுள்ள தமிழர் உரிமை போராட்டத்தையும் தமிழ் மக்களையும் உடைக்க வல்ல ஒற்றுமையுடன் கூடிய அறிவு சார்ந்து போராட்டங்களின் அவசியம் எமது ஈழத்தமிழர்களின் முன்னால் உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரல்



மாற்றுத் திறனாளிகள் புனர்வாழ்வு சங்கத்தின் 34வது ஆண்டு நிறைவையொட்டி மாற்றுத்திறனாளிகளுக்கான போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மைதான போட்டிகள் கவிதை போட்டிகள் கட்டுரை போட்டிகள் பேச்சுப் போட்டிகள் மற்றும் விசேட போட்டி நிகழ்வுகள் என பிரிவுகள் ரீதியாக நடத்தப்பட உள்ளது.

குறித்தா போட்டியில் பங்கு பெற்ற விரும்பும் வட மாகாணத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் தமது நிறுவனங்கள் ஊடாக போட்டிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்ப முடிவதோடு குறித்த போட்டிகளுக்கு வயது எல்லை கிடையாது.

விண்ணப்ப முடிவதில்லை பங்குனி மாதம் ஒன்பதாம் திகதிக்கு முன்னர் மாற்றுத்திறனாளிகள் புனர் வாழ்வுச் சங்கம் 47/2 ஆடியபாதம் வீதி திருநெல்வேலி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பதோடு இணைய வழியாக **arod-injaffna@gmail.com** தொடர்பு கொள்வதோடு 0212215925 என் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம்.

# சட்டவிரோத அமைக்கப்பெற்ற தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் ஆரம்பம்!



தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. இந்த போராட்டமானது மாலை 6:30 மணிவரை தொடரும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த போராட்டமானது தொடர்ச்சியாக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் இடம்பெற்று வருகிறது.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டுள்ளனர்.

# கறுப்பு ஜூலைக்கு ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைகளே காரணம் ரணிலுக்கு எதிராக யுத்த குற்ற விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும்... தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்க

(கனகராசா சரவணன்)

தமிழ் மக்களுக்கு எதிராக ஜே.ஆர். ஜெயவர்தன, ஆர்.பிரேமதாச, ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையின் கீழ் இயங்கிய ஐக்கிய தேசிய கட்சியினால் தான் 1983 கறுப்பு ஜுலை கலவரம் மேற்கொள்ளப்பட்டதுடன் யாழ். நூலகத்தை தீக்கிரையாக்குவதற்காக கட்சியின் அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்றார்கள் என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றது எனவே ரணிலுக்கு எதிராக யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பாக புலனாய்வு விசாணை மேற்கொள்ளப்பட வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் தோழர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி ஊடகப் பிரிவு புதன்கிழமை (21) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி தோழர் அநுர குமார திசாநாயக்கா உள்ளிட்டவர்கள் இந்தியாவின் அழைப்பின் பேரில் இந்திய விஜயத்தை மேற்கொண்டு வந்ததன் பின்னர் இந்நாட்டு தமிழ் மக்கள் மத்தியில் எம்மீதான மிகப் பெரிய ஆர்வமும் கவனமும் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில் தமிழ் மக்கள் எம்மோடு இணைவதைத் தடுப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புள்ள பல்வேறு குழுக்கள் மக்கள் விடுதலை முன்னணியின் இடையீட்டுடன்தான் 83 ஆம் ஆண்டு கறுப்பு ஜுலை கலவரம் மேற்கொள்ளப்பட்டதென எமக்கு எதிராக ஆதாரமற்ற, அடிப்படையற்ற பொய்யான குற்றச்சாட்டு பிரச்சாரத்தை தமிழ் மக்கள் மத்தியில் செய்து வருகின்றனர் இது அப்பட்டமான பொய்யாகும்.

இந்த கலவரத்தின் பின்புலத்தை நாம் ஆராய்ந்தால் 1983 கறுப்பு ஜுலை என்பது குறிப்பாக இலங்கையில் வடக்கு மாகாணங்களை தவிர்ந்த ஏனைய எல்லா மாகாணங்களிலும் வசித்த தமிழ் மக்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்ட அடிப்படையில் கட்டவிழ்த்துவிட்ட கடுமையான ஒரு இனவாத செயற்பாடாகும்.

குறிப்பாக ஜே.ஆரின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தேர்தலை பிற்போட்டு ஜனநாயகத்தின் மீது அடக்குமுறையைப் பிரயோகித்து படுமோசமான ஆட்சியைத்தான் செய்து வந்தது. அவர்கள் தொழிற்சங்கங்களை தடை செய்தார்கள். ஒரு இலட்சம் பேருக்கு தொழிலை இழக்கச் செய்தார்கள். வளர்ந்து வந்துகொண்டிருந்த தேசிய ஒற்றுமையை சிதைப்பதற்காக ஜே.ஆரும், ரணில் விக்ரமசிங்கவும் தமிழ் மக்களுக்கு எதிரான படுகொலையையும் அடக்குமுறையையும் பாவித்தார்கள்.


1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் 1977 அம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்தன, ரணில் விக்ரமசிங்க ஆகியோர் அரசாங்கத்தை அமைக்கும்போது இந்நாட்டில் யுத்தம் இருக்கவில்லையே? ஜே.ஆர் மற்றும் ரணிலின் தவறான இனவாத அரசியலின் காரணமாகத்தான் 81, 82 இல் முரண்பாட்டு நிலைமையொன்று இலங்கையில் உருவாகியிருந்தது. 83 ஆம் ஆண்டிலே முரண்பாடு உச்சம் கண்டிருந்தது. அதன் விளைவாக இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சிப்பாய்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் சடலங்களை அவர்களின் வீடுகளில் ஒப்படைப்பதுதான் அப்போது அமுலில் இருந்த நடைமுறை. ஆனால், ஜே.ஆர். ஜெயவர்தன, ரணில் உள்ளிட்ட கும்பல் அந்தச் சிப்பாய்களின் பூதவுடல்களை கொழும்புக்கு கொண்டுவந்து திட்டமிட்ட அடிப்படையில் மிகப்பெரிய ஒரு தாக்குதலை கொழும்பில் உள்ள தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்டனர்.

அத்தாக்குதல் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச தலைவர்களால் இலங்கை முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டது. சப்பாத்து தைக்கின்ற வறிய மனிதர் முதற்கொண்டு பெரிய தொழிலதிபர்கள் வரை இதனால் பாதிப்புற்றார்கள். இலங்கையில் எத்தனையோ சினிமா தியட்டர்கள் அழிக்கப்பட்டன. கொழும்பில் ரணிலின் வீட்டிலிருந்து ஒரு கிலோமீட்டருக்கு அப்பால் இருந்த காமினி மண்டபம் இப்போது இல்லையே! யார் தீக்கிரையாக்கியது? ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் காடையர் கும்பல்கள்தான் அழித்தன.

எனவே, 83 கறுப்பு ஜுலையை உருவாக்கியதும் அமுலாக்கியதும் ஐக்கிய தேசியக் கட்சிதான். ஜே.ஆர்.தான் அதன் முக்கியஸ்தர். அதேபோல அப்போது பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். தமிழர்களின் வீடுகள் அழிக்கப்பட்டன. அவர்களின் ஆதனங்கள் அழிக்கப்பட்டன. அதனையடுத்து ஜே.ஆர். ஜெயவர்தன ஒருவாரகாலம் சட்டத்தை அமுலாக்கவில்லை. பொலிசாருக்கு கட்டளையை பிறப்பிக்கவில்லை. பொலிஸ்மா அதிபர்கள் ஜே.ஆரிடம் சென்று அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரினார்கள். ஆனால், அவர் அதனைச் செய்யவில்லை.

இந்தக் கறுப்பு ஜுலையைத் தொடர்ந்து ஜே.ஆர். என்ன செய்தார்? மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜ கட்சி ஆகிய மூன்று இடதுசாரி கட்சிகளை தடைசெய்தார். தடைசெய்து சில மாதங்களுக்குப் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜ கட்சியின் தடைகளை நீக்கினார். ஆனால், மக்கள் விடுதலை முன்னணியின் தடையை நீக்கவில்லை. அதற்கான காரணம் என்னவென்றால், மக்கள் விடுதலை முன்னணி 1980களில் மிகவும் பலம்பொருந்திய வகையில் வளர்ந்து வந்தது. அதாவது, இடதுசாரியின் மிகவும் பலம்பொருந்திய மக்கள் இயக்கமாக வளர்ந்து வந்துகொண்டிருந்தது.



மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகர் தோழர் விஜேவீரவை உள்ளிட்டவர்கள் பாராளுமன்றத்திற்கு வந்து இந்த நாட்டின் அதிகாரத்தை இடதுசாரிகளின் கைகளுக்கு கொண்டுபோய் விடுவார்களென ஜே.ஆர். பயந்தார். எனவே, அதனை தடுப்பதற்காக ஜே.ஆர் இந்த இனவாதத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களை படுகொலை செய்து, அதனை பயன்படுத்தி மக்கள் விடுதலை முன்னணியை தடை செய்தார். ஹிட்லரும் இதைத்தானே செய்தார். ஹிட்லரின் நாசிக்கட்சி ஜேர்மன் பாராளுமன்றத்தை தீக்கிரையாக்கினார்கள். அவ்வாறு செய்துவிட்டு ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி மீது குற்றத்தை சுமத்தினார்கள். அதன் பின்னர் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை தடைசெய்து அடக்கினார்கள். ஜே.ஆரும் 83 இல் இதைத்தான் செய்தார். பின்னர் கறுப்பு ஜுலை தொடர்பாக ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. இந்தக் கலவரத்திற்குக் காரணம் ஐக்கிய தேசியக் கட்சிதான் என்று அதில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, இற்றைவரை இக்குற்றச் செயல்களுக்காக ரணில் விக்ரமசிங்க இந்த தேசத்திடம் மன்னிப்புக் கோரவில்லை. ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பாக புலனாய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவைதான் நடந்த உண்மை.

பெரும்பாலான தமிழ் மக்களுக்கு இந்த விடயம் தெரியும். ஆனால், அக்காலப்பகுதியில் இலங்கையில் சமூக வலைத்தளங்கள் இருக்கவில்லை. சுயாதீன ஊடகங்கள் இருக்கவில்லை. ஓரிரண்டு செய்தித்தாள்கள் இருந்தன. ஐ.டி.என், தேசிய ரூபவாஹினி என்ற இரு இலத்திரனியல் ஊடகங்கள் அரசாங்கத்தின் கைகளில் இருந்தன. எனவே, அந்தநேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் காடையர்கள், அயோக்கியர்கள் புரிந்த ஆட்கொலைகளை ஜே.வி.பி. அல்லது வேறு நபர்கள் மீது சுமத்துவதற்கு வசதியாக இருந்தது.

அண்மைக் காலத்தில் மக்கள் எழுச்சியின் போது அரசாங்கத்தின் காடையர்கள் காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது தாக்குதலை நடத்திவிட்டு அப்பளியை மற்றவர்கள் மீது சுமத்த முயற்சித்தனர். ஆனால், சமூக வலைத்தளங்கள் இருந்ததனால் ராஜபக்ஸர்களால் அதனைச் செய்ய முடியவில்லை. ஆனால், 83 யுகம் அப்படிப்பட்டதல்ல. எனவே, 83 கறுப்பு ஜுலை இலங்கை வரலாற்றை முற்றாகவே மாற்றியமைத்தது என்பதை தெட்டத்தெளிவாகக் கூறுகிறோம்.

இதுவே ஆயுதமேந்திய பிரிவினைவாதத்திற்காக இளைஞர்களை வழிப்படுத்தியது. இது முட்டாள்த்தனமான கறுப்பு ஜுலையாகும். அந்தக் கலவரத்தில் உடைமைகளை இழந்த, உறவுகளை இழந்த, கைகால் முறிந்த தோழர்கள் இன்னமும் இருக்கிறார்கள். இன்று மக்கள் விடுதலை முன்னணியுடன் அவர்கள் இணைந்தே இருக்கிறார்கள். சரோஜா போல்ராஜ், இராமலிங்கம் சந்திரசேகர், மோகன் போன்ற தோழர்கள் அப்படிபட்டவர்கள்தான். ஜே.வி.பி. தமிழர்களை தாக்கியிருந்தால் அவர்கள் ஏன் ஜே.வி.பியுடன் இணைந்துகொள்ள வேண்டும்? அந்தக் காலப்பகுதியில் ஜே.வி.பி. இனவாத ரீதியாக செயற்படவில்லை என்பதை மக்களிடம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அப்போது நாங்கள் தமிழ் சகோதர சகோதரிகளை இயலுமான நேரங்களில் காப்பாற்றினோம். அவர்களை பாதுகாத்தோம். எனவே, வங்குரோத்து அடைந்துள்ள இந்த ராஜபக்ஸர்கள், ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியின் சேறுபூசும் இயக்கங்களிடம் அகப்படாமல் ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்காக எம்மோடு இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் — அடம்பன், முள்ளிக்கண்டல் பகுதியில் இருவர் சுட்டுக் கொலை — சந்தேக நபர்கள் இருவர் கைது



(21-02-2024)

மன்னார் - அடம்பன், முள்ளிக்கண்டல் பகுதியில் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிலங்குளம் மற்றும் மன்னார் பகுதிகளைச் சேர்ந்த 33 மற்றும் 55 வயதை உடைய குறித்த இருவரும் செவ்வாய்க்கிழமை (20) மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் திகதி இந்த இரட்டை கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டு இருந்தது.

குறித்த துப்பாக்கிச் சூட்டில் மன்னார் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஜேசுதாசன் அருந்தவராஜா (வயது-42) மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலா-ளர் பிரிவில் உள்ள ஈச்சளவக்கை கிராமத்தை சேர்ந்த கணபதி காளிமுத்து (வயது-56) ஆகியோரே உயிரிழந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

# தலைமன்னார் இறங்கு துறை பகுதியில் மணல் அகழ்விற்கு சென்றவர்களை தடுத்து நிறுத்திய மக்கள்





(எஸ். றொசேரியன் லெம்பேட்) (23-02-2024)

தலைமன்னார் இறங்கு துறை பகுதியில் வியாழக்கிழமை (22) மாலை மணல் அகழ்வு பணியில் ஈடுபட வந்த நிலையில் அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர்.

தலைமன்னார் இறங்கு துறை, தலைமன்னார் ஊர் மனை, தலைமன்னார் ஸ்டே'ன் பகுதி மக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பை தெரிவித்தனர்.

இந்த நிலையில் தலைமன்னார் பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தனர். எவ்வித அனுமதியும் இன்றி மக்களுக்கு எவ்வித அறிவுறுத்தல்களும் வழங்கப்படாமல் மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்காக சகல ஆயத்தங்களுடனும் குறித்த குழுவ-ினர் வருகை தந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அப்பகுதிக்கு வருகை தந்த மணல் பரிசோதனை குழுவினர் தாங்கள் ஒரு ஒப்பந்த நிறுவனம் என்றும் தமது ஒப்பந்தத்தினை காண்பித்து உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களின் எதிர்ப்பை தொடர்ந்து குறித்த குழுவினர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். சம்பவ இடத்திற்கு வந்த தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் மேலும் உடல்கள் இருக்கலாம் என்கிறது அறிக்கை



கடந்த ஆண்டு கொக்குத்தொடுவாய் பகுதிய-ில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனித புதைகுழி தொடர்பில் மேலதிக தகவல்கள் வெளிவந்துள்ளன. முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையிலேயே இந்த கூடுதல் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அவ்வகையில் நீதிமன்றில் வியாழக்கிழமை (22) சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இனம்காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து மீடகப்பட்ட 40 மனித எச்சங்களும் 1994 ஆம் ஆண்டிற்கும் 1996 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற யுத்தத்தின் போது இறந்து புதைக்கப்பட்டவர்களாக இருக்கக் கூடும் என்று தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா கூறியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் இனம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளினுடையது எனச் சந்தேகிக்கும் 40 மனித உடற்பாகங்கள், உடைகள் மற்றும் இலக்கத் தகடுகள் மீட்கப்பட்டன. குறிப்பாக பெண் போராளிகளுடையது என்று நம்பப்படும் உள்ளாடைகளும் கண்டெடுக்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட உடல்கள் தொடர்பிலும் மேலும் அந்த அகழ்வுப்பணி எந்தளவிற்கு விரிவுபடுத்தப்பட வேண்டும், அப்பகுதியில் கூடுதலாக எத்தனை உடல்கள் இருக்கலாம் என்பதுடன் மீட்கப்பட்ட உடல் பாகங்கள் எந்த காலப்பகுதியைச் சார்ந்தவை என்பவை தொடர்பில் தொல்லியல் பேராசரியர் ராஜ் சோமதேவா ஆய்வில் ஈடுபட்டிருந்தார்.

இவ்வாறு மேற்கொண்ட ஆய்வின் அறிக்கை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அது வியாழக்கிழமை மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

"இதில் இனம் காணப்பட்ட மனித உடல் பாகங்கள் அனைத்தும் 1994 ஆம் ஆண்டிறகும் 1996ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் புதைக்கப்பட்டுள்ளதோடு இவை எந்தவொரு சமயாசார முறைகளையும் பின்பற்றி அடக்கம் செய்யப்படவில்லை. இந்த உடல்கள் காணப்படும் இடத்தில் மேலும் 2 மீற்றர் தூரத்திற்கு நிலத்திற்கு கீழே இரு அடுக்குகளில் உடல்கள் காணப்படுகின்றன".

இதுவரை மீட்கப்பட்ட உடல்களில் ஆண்கள், பெண்கள் இருபாலாரின் உடல் பாகங்களும் காணப்படுவதாக பேராசிரியர் அறிக்கையிட்டுள்ளதாக மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குதொடுவாய் மனித புதைகுழியிலிருந்து இதுவரை மீட்கப்பட்டுள்ள 40 உடல் பாகங்களின் பாலினம், வயது, உயிரிழப்பிற்கான காரணம் போன்றவை இன்னும் ஆராயப்படவில்லை என்றும், அதற்கான நிதியை எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேநேரம் இப்புதைகுழி அகழ்விற்காக 6 மில்லியன் ரூபாவும் உடல்களை மேலதிகமாக ஆய்வு செய்வதற்கு 6 மில்லியன் ரூபாவும் தேவை எனக் கோரப்பட்ட போதும் அப்பணத்திற்கான அனுமதி எவையும் இதுவரை கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது மத்ரஸா மாணவனின் மர்ம மரணம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

## கைதான சிசிடிவி தொழிநுட்பவியலாளர் உட்பட 4 சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைப்பு



மாணவனின் மர்ம மரணம் தொடர்பிலான சிசிடிவி காட்சி உள்ளடக்கிய முக்கிய தடயப் பொருட்களை அழித்த குற்றச்சாட்டு அடிப்படையில் கைதான சிசிடிவி தொழிநுட்பவியலாளர் உட்பட 4 சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு புதன்கிழமை (21-02-2024) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலை-லயில் மௌலவியின் வேண்டுகோளுக்கமைய சிசிடிவி காணொளிகளை அழித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 4 சந்தேக நபர்களும் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதற்கமைய கடந்த செவ்வாய்க்கிழமை (20) சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு சிசிடிவி தொழிநுட்பவியலாளர் உள்ளிட்ட 4 பேர் வரவழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் ரவூப் தலைமையில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 30,26,22,2,3 வயது மதிக்கத்தக்க 4 சந்தேக நபர்களையும் கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட் போது எதிர்வரும் பெப்ரவரி 29 ஆந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மேலும் கடந்த நீதிமன்ற தவணையின் போது விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட குறித்த வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி உட்பட ஏனைய தரப்பினரின் விடயங்களை ஆராய்ந்த நீதிவான் அழிக்கப்பட்ட காணொளிகளை மீள பெற்றுக்கொள்ள மொரட்டுவை கணனி பிரிவிற்கு வன்பொருளை அனுப்பி வைக்குமாறு கட்டளை பிறப்பித்திருந்ததுடன் நீண்ட சமரப்பணத்தின் பின்னர் மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பில் கைதான மௌலவியை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29 திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

செய்தியின் பின்னணி

.13 வயது சிறுவன் சடலமாக மீட்பு-குர்ஆன் மதரஸா நிர்வாகி கைது-சாய்ந்தமருது பகுதியில் சம்பவம்.

13 வயது மாணவன் தூக்கில் தொங்கிய நிலையில் மலசல கூடத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சந்தை வீதியில் அமைந்துள்ள 3 மாடி கட்டடம் ஒன்றில் நடாத்தப்படும் மத்ரஸா ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை (5) மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பகுதியை சேர்ந்த எம்.எஸ். முஸ்அப் (வயது-13) எனும் கல்வி கற்று வந்த மாணவனே தூக்கில் தொங்கி உயிரிழந்த நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மத்ரஸாவில் மஹ்ரீப் தொழுகைக்கு ஏனைய மாணவர்கள் கலந்து கொண்ட நிலையில் மரணமடைந்த மாணவன் அங்கு காணப்படாததன் காரணமாக சில மாணவர்கள் தேடிய நிலையில் மலசல கூடத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் அம்மாணவன் மீட்கப்பட்டு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.இதே வேளை மரணமடைந்த மாணவனின் பெற்றோர் உறவினர்கள் தூக்கில் தொங்குவதற்கு எமது பிள்ளை கோழையல்ல எனவும் ஏதோ ஒன்று நடைபெற்றுள்ளதை ஊகிக்க முடிவதாகவும் முறையான விசாரணை அவசியம் என கேட்டுக்கொண்டனர்.

இதனை அடுத்து மத்ரஸா மாணவனின் மரணத்தில் சந்தேகம் என குறித்த மத்ரஸாவினை சுற்றி பொதுமக்கள் குவிந்தமையினால் சாய்ந்தமருது பொலிஸ் பொறுப்பதிகாரி சம்சுதீன் தலைமையிலான பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று நிலமையை கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

மேலும் குறித்த மாணவனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பொதுமக்கள் ஒன்று கூடி குறிப்பிட்ட மதர்ஸாவின் நிர்வாகி மீது தாக்குதல் மேற்கொள்ள தயாராகிய வேளை மேலதிக பொலிஸார் அவ்விடத்திற்கு அழைக்கப்பட்ட நிலை-லயில் சாய்ந்தமருது பொலிஸாரால் மதரஸா நிர்வாகியாகிய மௌலவி கைது செய்யப்பட்டு அழைத்து செல்லப்பட்டார்.

இது தவிர குறிப்பிட்ட மதர்ஸாவின் நிர்வாகி மீது ஏற்கனவே பல பொலிஸ் முறைப்பாடுகள் இருப்பதாகவும் மாணவனின் மரணம் தற்கொலையல்ல என கூறி பொதுமக்கள் குழப்பத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.








# முன்மாதிரி கிராமமாக நயினாதீவை மாற்ற வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்தல்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக ஆராயும் மற்றுமொரு சிநேகபூர்வ கலந்துரையாடல், உள்ளூராட்சி திணைக்களத்தின் ஏற்பாட்டில் நயினாதீவு அமுதசுரபி மண்டபத்தில் 20.02.2024 அன்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

யாழ் குடாநாடாடில் காணப்படும் தீவுகளில் ஒன்றான நயினாதீவில் சுமார் ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஐயாயிரம் பேர் வரை வசிக்கின்றனர்.

மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய நயினாதீவு மக்களின் பிரதான ஜீவனோபாயமாக கடற்தொழில் காணப்படுகிறது.

நயினாதீவில் உள்ள பாடசாலைகளின் குறைபாடுகள் மற்றும் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து கலந்துரையாடலின்போது கிராம மக்களால் எடுத்துக்கூறப்பட்டது. பாடசாலைகளுக்கான தேவைகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஆளுநர் இதன் போது பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை போக்குவரத்து, குடிநீர் வசதி உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கும் தீர்வு காண்பதற்கான திட்டவரைபை சமர்ப்பிக்குமாறும் கௌரவ ஆளுநர் குறிப்பிட்டார். நயினாதீவை பிளாஸ்ரிக் அற்ற முன்மாதிரி கிராமமாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் குறிப்பிட்டார்.

தீவகமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், புலம்பெயர் அமைப்புகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென ஆளுநர் குறிப்பிட்டார்.

இயற்கை வளங்களை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்திசெய்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டது.

இனமத பேதமின்றி நயினாதீவு மக்கள் இந்த கலந்துரையாடலில் பங்கெடுத்தமையானது இக்கிராமத்தை சிறந்த முன்மாதிரியாக மாற்றுவதற்கான சிறந்த ஆரம்பம் என கௌரவ ஆளுநர் தெரிவித்தார்.

மக்களுடனான கலந்துரையாடலின் பின்னர் நயினாதீவு அமுதசுரபி அன்னதான மண்டப நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மதிய உணவிலும் ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் கலத்துகொண்டனர். இதேவேளை தீவிலுள்ள மதவழிபாட்டுத்தளங்களுக்கும் சென்று மதத்தலைவர்களுடனும் கௌரவ ஆளுநர் கலந்துரையாடினார். இதேவேளை இன்றைய சந்திப்பின் போது கௌரவ ஆளுநர் அவர்களினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளை உடனடியாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கபடுவதுடன், நயினாதீவை முன்மாதிரி தீவாக மாற்ற தேவையான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பித்து அதற்குரிய திட்ட வரைபை விரைவில் ஆளுநரிடம் சமர்ப்பிப்பதாகவும் வடக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் நயினாதீவு மக்களிடம் உறுதியளித்தார்.







# தமிழர்கள் எதிர்க்கும் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் குறித்து கலந்துரையாடல்

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தொடர்ந்து எதிர்ப்பினை வெளியிட்டு வரும் நிலையில், உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழுவை நிறுவுவதற்கான உத்தேச சட்டம் தொடர்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தினால் **(ISTRM)** ஏற்பாடு செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடனான கலந்துரையாடல் அண்மையில் கொழும்பில் நடைபெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த ஆலோசனைக்கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

குறிப்பாக நீண்டகாலமாக கோரி வரும் சர்வதேச பங்களிப்புடன் ஒரு நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை ஸ்தாபிப்பதற்கு பதிலாக உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழுவை அமைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

“வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு” என அரசாங்கத்தால் குறிப்பிடப்படும், உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் **(CTUR)** வரைவின் பல்வேறு அம்சங்களைப் பற்றி கலந்துரையாடுவதும் நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படாத வகையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் ஆராய்வதும் இந்த கலந்துரையாடலின் பிரதான நோக்கமாக இருந்ததாக, இலங்கை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் சட்ட விவகாரங்கள், கொள்கை மேம்பாடு, மக்கள் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் **(ISTRM)** ஆகிய 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் குரலுக்கு செவிசாய்ப்பதை உறுதிசெய்து பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் உட்பட, நிலைமாறுகால நீதியின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய வலுவான கருத்துப்பரிமாறலுக்கு இந்த கலந்துரையாடல் வாய்ப்பளித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நிலைமாறுகால நீதிச் செயன்முறைக்கான நம்பிக்கையையும் சட்டப்பூர்வமான தன்மையையும் கட்டியெழுப்புவதற்காக பல்வேறு பங்குதாரர்களிடமிருந்து கருத்துக்களை சேகரிக்க பரந்த மற்றும் வெளிப்படையான ஆலோசனை செயல்முறையை நடத்துவதன் முக்கியத்துவமும் இங்கு வலியுறுத்தப்பட்டதாக அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் சட்டம் தொடர்பான பேராசிரியை சாவித்ரி குணசேகர ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடல், உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் கொள்கைப் பிரதானி கலாநிதி சி.வை.தங்கராஜாவின் உதவியுடன் அதன் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவம்சவினால் நெறிப்படுத்தப்பட்டது.

# இணைய பாதுகாப்புச் சட்டம்: மனித உரிமைகள் ஆணைக்குழு அதிருப்தி

இலங்கையின் நாடாளுமன்றம் உயர் நீதிமன்றத்தின் பரிந்தரைககைளை புறந்தள்ளி, இணையதள நடவடிக்கைகளை கண்காணிக்கும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

மிகவும் சர்ச்சைக்குரிய இணைய பாதுகாப்புச் சட்டம் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி தனிப்பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. எனினும் உயர் நீதிமன்றம் இது நாடாளுமன்றாத்தில் மூன்றில் இரண்டு பெருமான்மையினால் நிறைவேற்றப்பட வேண்டுமென கூறியிருந்தது.

“இணையதள பாதுகாப்புச் சட்டத்தை கவனமாக ஆராய்ந்த பின்னர், அதிலுள்ள பல பிரிவுகள் உயர் நீதிமன்ற தீர்ப்பிற்கு அமைவாக இல்லை என்பதும் அதில் பல அம்சங்கள் விடுபட்டுள்ளன” என்பதையும் அவதானிக்க முடிவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைகுழு கூறுகிறது.

உயர்நீதிமன்றத்தின் உத்தவிற்கு அமையவே இந்த இணையதள பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என நாடாளுமன்றத்தின் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்து மூன்று நாட்கள் கடந்துள்ள நிலையில் இந்த விடயத்தை ஆணைக்குழு வெளிப்படுத்தியுள்ளது.

இந்த சட்டமூலத்திற்கு எதிராக 51 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி தீர்ப்பை அறிவித்தது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஊடக நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ செயற்பாட்டுக் குழுக்கள் உட்பட பலர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். அவ்வகையில் “மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மாத்திரமே இந்த மசோதாவை சட்டமாக நிறைவேற்ற முடியும்” என் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அது மாத்திரமின்றி அந்த சட்டத்தில் திருத்தங்கள் தேவைப்பட்டால் அதை தனிப்பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்ற முடியுமெனவும் நீதிமன்றம் தெரிவித்திருந்ததாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மனுக்கள் மீதான விசாரணையின் போது அந்த மசோதாவிலுள்ள 56 பிரிவுகளில் 31 திருத்தப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் கண்டறிந்திருந்தது. எனினும், இந்த பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என ஆணைக்குழு கூறியுள்ளது.



சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில், இணையதள பாதுகாப்புச் சட்டத்திலுள்ள தொழில்நுட்ப ரீதியிலான தவறுகளை ஆணைக்குழு விபரித்துள்ளது. “அந்த மசோதாவில் இருந்த 30 பிரிவுகள் அரசியல் சாசனத்தின் பிரிவு 12 (1) இசைவாக இல்லை, மேலும் சில அம்சங்கள் பிரிவு 14 (1) (அ) ஆகிய பிரிவுகளுக்கு எதிராக உள்ளன” எனக் கூறியுள்ளது. அந்த திருத்தங்கள் செய்யப்படாத நிலையில், உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு ஏற்ற வகையில் அந்த சட்டம் இயற்றப்படாமை குறித்து ஆணைக்குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

“உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை முழுமையாக ஏற்று அதை செயல்படுத்த தவறியமை, அந்த சட்டத்தின் தற்போதைய வடிவம் குறித்தும், நாடாளுமன்றத்தில் தேவையான அளவிற்கு வாக்குகளை பெறாமை குறித்தும் ஆழ்ந்த கவலை எழுகிறது” என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் நீதியரசர் எல் டி பி தெஹிதெனிய கூறியுள்ளார்.

“ஆக்கபூர்வமாக நிறுவன ரீதியாக சீர்த்திருத்தங்களை முன்னெடுப்பதில் ஈடுபடாமல், இதை முன்னெடுத்துச் செல்லுவது குறித்து நாங்கள் அரசை எச்சரித்திருந்தோம்” என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை, இலங்கையில் “கருத்துச் சுதந்திரத்தை நசுக்கவும், எதிர்ப்புகளை ஒடுக்கவும் அரசின் ஆயுதங்களில் புதிதாக சேர்ந்துள்ள ஒரு விடயம்.” இதுவென விமர்சித்துள்ளது.

அதேபோன்று அப்பிள், அமெசான், கூகள் மற்றும் யாஹூ போன்ற அமைப்புகளை உறுப்பினராகக் கொண்டுள்ள ஆசிய இணையதள கூட்டமைப்பு இந்த சட்டத்தில் பரந்துபட்ட திருத்தங்கள் தேவை எனவும், இந்த சட்டமானது நாட்டிற்கு வரக்கூடிய முதலீடுகளை பாதிக்கும் எனவும் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஜனாதிபதி காணி உரித்துப்பற்றி பேசுகையில், தமிழர்களின் காணி உரிமையை பறிக்க முயற்சி



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரண்டு மில்லியன் மக்களை காணி உரிமையாளர்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கின்ற நிலையில், நாட்டின் வடக்கில் தமிழர்களின் காணியை அபகரிக்கும் முயற்சிகள் தொடர்வதாகவும், மலையகத் தமிழர்களுக்கு காணி உரிமையை வழங்குவதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் எதிர்ப்பினை வெளியிடுவதாகவும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டின் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் காணி உரிமைப்பற்றி உரையாற்றுகையில், மன்னார் மாவட்டத்தில் மக்களின் விவசாய காணிகளை அபகரிக்கும் முயற்சியில் வனவளத் திணைக்களம் ஈடுபட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

“காணி உரிமை தொடர்பில் ஜனாதிபதி பேசியிருந்தார். 2 மில்லியன் மக்களுக்குக் காணி உரிமை வழங்கியதாகக் குறிப்பிட்டிருந்தார். மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரர் கிராமத்தில் உள்ள மக்களின் சொந்த காணிகளை, வனவளத் திணைக்களம் தமக்குச் சொந்தமானது என்று குறிப்பிட்டுக் கொண்டு அடையாளப்படுத்தல் தூண்களை நாட்ட முயல்கிறது. மக்களுக்குக் காணி உரிமை வழங்குவதாக ஜனாதிபதி பெருமையாகப் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகின்ற போது மன்னார் மாவட்டத்தில் மக்களின் விவசாய காணிகள் அரச திணைக்களத்தால் அபகரிக்க முயற்சிக்கிறது. மக்களின் கடும் எதிர்ப்பை தொடர்ந்து காணி அபகரிப்பு முயற்சியைத் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளது”.

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை கடந்த 7ஆம் திகதி ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆற்றிய கொள்கை விளக்க உரை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி இந்த விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

காணி விடுவிப்பு விவகாரத்தில் ஜனாதிபதி ஒரு நிலைப்பாட்டிலும், அரச அதிகாரிகள் ஒரு நிலைப்பாட்டிலும் செயற்படுவதகாவும், இவ்வாறன செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி அவதானம் செலுத்தாமல் இருப்பது கேள்விக்குரியது எனவும் எம்.பி சாள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கொள்கை விளக்க உரை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்குவதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் எதிர்ப்பினை வெளியிடுவதாக குற்றஞ்சாட்டினார்.

“பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்குவதை எதிர்க்கின்றோம் என பெருந்தோட்ட நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன. காணி உரிமை வழங்கினால் தோட்டத்தில் வேலை செய்ய ஆட்கள் இருக்கமாட்டார்கள் எனவும் கூறின. இப்படியான தரப்புகளை வைத்துக்கொண்டு நாட்டை எப்படி முன்னேற்றுவது?”

காணி உரிமை சம்பந்தமாக பிரதமர் செயலகத்தில் சந்திப்பொன்று நடைபெற்றதாகவும், இதன்போதே பெருந்தோட்ட நிறுவனங்கள் சார்பில் பங்கேற்ற தரப்பினர் இந்த கருத்தை முன்வைத்ததாகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது நாடாளுமன்ற உரையில் சுட்டிக்காட்டினார்.

பெருந்தோட்டப்பகுதிகளில் 40 ஆயிரம் ஹெக்டேயர் தரிசு நிலங்களாக காணப்படுவதாகவும், பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையை வழங்குவதற்கு அதில் 10 வீதத்தை வழங்கினாலே போதுமானது எனவும் தான் இந்த கூட்டத்தில் சுட்டிக்காடட்டியாதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனதுரையில் மேலும் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரண்டு மில்லியன் மக்களை காணி உரிமையாளர்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

“இங்கு காணி உரிமை பிரதான இடத்தைப் பெறுகிறது. 1897 தரிசு நிலச் சட்டத்தின் மூலம் மக்களின் காணி உரிமையை காலனித்துவப் பிரித்தானிய அரசு பெற்றது. சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்த ஒரு அரசாங்கமும், பறிக்கப்பட்ட காணி உரிமைகளை மக்களிடம் மீள வழங்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த காணி உரிமையை மீள வழங்கும் பணியை நாம் ஆரம்பித்துள்ளோம். இரண்டு மில்லியன் மக்களை காணி உரிமையாளர்களாக எமது சமூகத்தில் இணைக்கின்றோம்”.

# பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பொலிஸாருக்கு ஊதிய உயர்வு எதற்காக?



நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள அதேவேளை, வருமான வரி மற்றும் இதர வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், செவ்வாய்க்கிழமை (13) முதல் பொலிஸாருக்கு உணவு மற்றும் தங்குமிட கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளன.

அதன் அடிப்படையில் முதல் கட்டமாக அடுத்த ஆறு மாதங்களுக்கான கொடுப்பனவையும், அடுத்த கட்டத்தில் நிலுவைத் தொகையுடன் கூடிய அதிகரித்த கொடுப்பனவையும் பொலிஸார் பெற்றுக்-கொள்ளவுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சின் செயலர் வியானி குணதிலக கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் இந்த அறிவிப்பின்படி சார்ஜன்ட் நிலையில் இருக்கும் ஒருவருக்கு 2,340 ரூபாய் முதல் 4,230 ரூபாய் வரையிலும், உதவி பொலிஸ் பரிசோதகர் நிலையிலிருந்து தலைமை பொலிஸ் பரிசோதகர் தரத்திலான அதிகாரிகளுக்கு 3,060 ரூபாய் முதல் 4,320 ரூபாய் வரையிலும், உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் முதல் பொலிஸ் மா அதிபர் போன்ற உயரதிகாரிகளுக்கு மாதம் 4,140 ரூபாய் வரையில் கொடுப்பனவுகள் கிடைக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பொலிஸாருக்கு வழங்கப்படும் உணவு மற்றும் தங்குமிட கொடுப்பனவு 18,930 ரூபாய் முதல் 25,140 ரூபாய் வரை காணப்படும் என்பதோடு, ஆறு மாதங்களில் நிலுவைத் தொகையுடன் வழங்கப்படுமென, பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் தெரிவித்துளது.

கொடுப்பனவு அதிகரிப்பு கடந்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவிருந்த போதிலும் திறைசேரி நிதியை விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது. திறைசேரி நிதியை விடுவிக்கும் வரை தனது சொந்த நிதியில் இருந்து பணம் செலுத்துவதாக பொலஸ் திணைக்களம் ஒப்புக்கொண்டதாக குறித்த அதிகாரி கூறியுள்ளார்.

நாட்டில் ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் உள்ள நிலையில், பொலிஸாருக்கு மாத்திரம் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையானது பல கேள்விகளை எழுப்பக் கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

போராட்டங்களை கட்டுப்படுத்துவது, போதைப் பொருட்களுக்கு எதிரான அதிரடி சோதனை மற்றும் புலனாய்வுப் பிரிவில் உள்ளவர்களுக்கு மேலதிகமாக, அவர்களின் அடிப்படை ஊதியத்தில் நான்கில் ஒரு மடங்கு அதிகரிக்கும் என அரசு அறிவித்துள்ளது.

இது கடந்த 2023ஆம் ஆண்டின் ஆய்வறிக்கையின் அடிப்படையில், அமைச்சரவையில் ஒப்புதலை அடுத்து நடைமுறைக்கு வருமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், ஓய்வு பெற்ற ஜனாதிபதிகளின் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்கு உள்ளவர்கள் மற்றும் விசேட அதிரடிப் படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினருக்கு அடிப்படை ஊதியத்தில் மூன்றில் ஒரு பங்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, கடந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் தகுதி வாய்ந்த 8,381 அதிகாரிகளுக்கு பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது. அதில் 4,587 பேர் கொன்ஸ்டபிள் தரத்திலிருந்து சார்ஜன்ட் தரத்திற்கு உயர்த்தப்பட்டனர்.

2,297 பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை விடுவிப்பதற்கான ஆவணங்களை சமர்ப்பித்துள்ள நிலையில், 910 அதிகாரிகள் நேர்காணலுக்குப் பின்னர் சேவையில் மீண்டும் இணைத்துக் கொள்ள தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் 62 அதிகாரிகளை மீண்டும் பணியில் அமர்த்துவதற்கு பொதுச் சேவை ஆணைக்குழுவிடமிருந்து பொலிஸாரினால் பரிந்துரை கோரப்பட்ட போதிலும், கடந்த வருடம் ஜனவரி முதல் செப்டெம்பர் வரை இலங்கை பொலிஸ ்க்கு புதிதாக ஆட்சேர்ப்பு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

# மக்களுக்கான சேவை நேரத்தில் உத்தியோகத்தர்களிடையே போட்டிகளை நடாத்தும் சங்கானை பிரதேச செயலகம்!




சங்கானை பிரதேச செயலகமானது மக்களுக்கான சேவை நேரத்தில் உத்தியோகத்தர்களிடையே போட்டிகளை நடாத்துவதால் சேவைகளை பெறுவதற்கு செல்லும் மக்கள் இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், பிரதேச செயலகங்ககளுக்கு இடையிலான போட்டிகள் எதிர்காலத்தில் நடைபெறவுள்ளன. அந்தவகையில் போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்களை தெரிவு செய்வதற்கான தெரிவுப் போட்டிகள் சங்கானை பிரதேச செயலகத்தில் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் நேற்றையதினம் கரம் போட்டிகள் பிரதேச செயலகத்தில் நடைபெற்றன. எதிர்காலத்தில் கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், வலைப்பந்தாட்டம், காற்பந்தாட்டம் உள்ளிட்ட போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இந்த போட்டிகளில் பங்குகொள்ளும் உத்தியோகத்தர்கள் தமது அலுவலகங்களான கிராம சேவகர் அலுவலகம், சமுர்த்தி அலுவலகம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான அலுவலகங்களுக்கு செல்லாது போட்டிகளில் பங்குபற்றி விளையாடி வருகின்றனர்.

உத்தியோகத்தர்களை சந்திக்க வேண்டிய தேவையுள்ள மக்களை பிரதேச செயலகத்திற்கு அழைத்து, மக்களை சிரமங்களுக்கு உள்ளாக்குகின்றனர். இதனால் மக்கள் வீண் அலைச்சல்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வாறான போட்டிகளை மக்களுக்கு சேவை செய்யும் நேரத்தில் நடாத்தாது, அலுவலக நேரம் முடிந்த பின்னர், அல்லது விடுமுறை தினங்களில் நடாத்தினால் மக்களது சேவைகள் பாதிக்காது செயற்பட முடியும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.



# யாழ்ப்பாணத்தில் மயங்கி விழுந்த கோண்டாவில் பகுதியை சேர்ந்த ஆசிரியர் ஞானசம்பந்தர் மில்ரன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மயங்கி விழுந்த நிலையில் நேற்றையதினம் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியரான, கோண்டாவில் பகுதியை சேர்ந்த ஞானசம்பந்தர் மில்ரன் (வயது 32) எனும் ஆசிரியர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

அதனை அடுத்து சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் 20-02-2024 செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "இமாலய பிரகடனத்திற்கு" நிதியுதவி வழங்கியதை சுவிஸ் அரசு அதிகாரபூர்வமாக ஒப்புக்கொண்டது



இலங்கையில் தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட "இமாலய பிரகடனத்திற்கு" தாங்களே நிதியுதவி செய்ததாக சுவிஸ் அரசு அதிகாரபூர்வமாக ஒப்புக்கொண்டுள்ளது.

சுவிஸ் சோ'லிஸ கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மொலினா ஃபேபியன் எழுப்பிய கேள்விகளுக்கு புதன்கிழமை (21) அன்று பதிலளிக்கும் போதே அந்நாட்டின் வெளியுறவு அமைச்சு இதை தெரிவித்துள்ளது.

"இமாலய பிரகடனத்திற்கு" சுவிஸ் அரசு எந்தளவிற்கு ஆதரவு வழங்கியது என்று அவர் நாடாளுமன்றில் எழுத்துபூர்வமான கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார்.

அதற்கு பதிலிளித்த அரசு, "சுவிஸ் வெளியுறவு அமைச்சு "போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு" புலம் பெயர்ந்த தமிழர்கள் மற்றும் பௌத்த பிக்குகளுாக்குஇடையே பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தளம் ஒன்றை நிறுவ நிதியுதவி அளித்தது. அதையடுத்தே அந்த "இமாலய பிரகடனம்" வெளியானது. எனினும், அந்த கலந்துரையாடலின் நிர்வாகம் அந்த பங்குதாரர் அமைப்பின் பொறுப்பாக இருந்தது" என்று விளக்கியுள்ளது.

இந்த கலந்துரையாடலில் ஏன் இலங்கையிலுள்ள எந்தவொரு தமிழரும் உள்வாங்கப்படவில்லை என்று அவர் எழுப்பிய கேள்விக்கும் மேற்கூறிய பதிலே அளிக்கப்பட்டது.

இலங்கையில் 1983 ஆமாண்டு நடைபெற்ற கலவரங்கள் மற்றும் போர் தொடங்கியதை அடுத்து, 40 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மக்கள் சுவிஸ் நாட்டிற்கு அகதிகளாக வந்தனர். அன்றிலிருந்து அவர்கள் புலம்பெயர்ந்த அந்த தமிழ் மக்கள் சுவிஸ் மக்களுடன் ஒருங்கிணைந்துள்ளனர் என்றும் ஃபேபியன் தனது கேள்விகளுக்கான முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமின்றி, நாற்பது ஆண்டுகளுக்கு பிறகும் இலங்கையின் அரசியல் சூழல் தொடர்ந்து உறுதியற்ற நிலையில் உள்ளது என்றும், இலங்கையின் உள்நாட்டிலும், புலம்பெயர்ந்த தமிழர்களும் அங்கு இடம்பெற்ற போர் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை, அரசியல் தீர்வு, சுயநிர்ணய உரிமை, தமிழர் பகுதியிலிருந்து இராணுவம் விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் என்று கோருகின்றனர் என்றும் அவர் தனது முன்னுரையில் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் ஆணையர் தனது செப்டம்பர் 2023 அறிக்கையில், நீதிபரிபாலனம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை முன்னெடுப்பதற்கான விருப்பம் இல்லை என்று கூறியிருந்ததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்படியான முன்னுரையை அடுத்து அவர் ஏழு கேள்விகளை நாடாளுமன்றத்தில் எழுப்பி அதற்கான பதில்களை கோரியிருந்தார். நல்லிணக்கம் ஏற்படுவதை ஆரம்பிப்பதற்கு போர் குற்றங்கள் விசாரிக்கப்படுவது, அரசியல் தீர்வொன்றை கண்பது ஆகியவை தொடர்பில் சுவிஸ் எப்படியான ஆதரவை அளிக்கிறது என்பதை முதலாவது கேள்வியாகவும் பின்னர் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்த தமிழர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களுக்கு சுவிஸ் எப்படியான ஆதரவை அளித்தது என்று மற்றோரு கேள்வியையும் எழுப்பியிருந்தார்.

அதற்கு பதிலளித்த சுவிஸ் வெளியுறவு அமைச்சகம், "இலங்கையில் சுவிஸ் சமாதானத்திற்கான செயல்திட்டம் ஒன்றை நடைமுறைபடுத்தி வருகிறது. சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களவர்கள், சிறையில் சித்திரவதை செய்யப்பட்டவர்களுக்கான சட்ட உதவிகளை அளிக்கும் மனித உரிமை அமைப்புகளுக்கு நாங்கள் ஆதரவளிக்கின்றோம். மேலும் சட்டத்தின் ஆட்சி, கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் நிறுவனங்களுடன் செயல்படுகிறோம். ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கையில் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை சுவிட்சர்லாந்து ஆதரித்துள்ளது. இலங்கையில் இடம்பெற்றவை தொடர்பிலான பொறுப்புக்கூறல் செயல்திட்டத்துடன் இலங்கை அரசு இணைந்து செயல்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக சுவிஸ் அரசு கோருகிறது, மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் சட்டவிரோதமான வகையில் பயன்படுத்தப்படுவதை கண்டிப்பதோடு, இலங்கையுடனான இருநாட்டு உறவுகளிலும் இது எடுத்துரைக்கப்படுகிறது" என்று அவருக்கு கூறியுள்ளது.

நீதி மற்றும் பொறுப்புக்கூறல் இல்லை என்று கூறி மனித உரிமைகள் அமைப்புகளாலும் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலும் விமர்சிக்கப்படும் இலங்கை அரசாங்கத்தின் உத்தேச உண்மை ஆணைக்குழுவை சுவிட்சர்லாந்து எவ்வாறு ஆதரிக்கிறது? என்றும் சுவிட்சர்லாந்து அளிக்கிறது என்று சுவிஸ் சோ'சில கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்துள்ள சுவிஸ் அரசு, "உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணையம் ஒன்றை அமைக்கும் இலங்கை அரசின் அவாவை அரசு கவனத்தில் எடுத்துள்ளது என்றும், இப்போதைய சூழலில் அதற்கு ஆதரவளிப்பது குறித்து தாங்கள் பரிசீலிக்கவில்லை. கடந்த டிசம்பர் 2023இல், முத்தரப்பு முன்னெடுப்பாக ஜப்பான் மற்றும் தென் ஆப்ரிக்க தூதரகங்களுடன் சுவிஸ் தூதரகமும் கூட்டாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் நம்பிக்கையை கட்டியெழுப்பவும், நல்லிணக்கத்தை ஊக்கப்படுத்தவும் முன்னெடுக்கப்படக் கூடிய பிரேரணைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை அளித்துள்ளோம்".

இலங்கையில் அண்மைக் காலத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் சித்திரவதைக்கு உள்ளாவது, உயிரிழப்பது ஆகியவை குறித்த செய்திகள் வந்துள்ள நிலையில், இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட தஞ்ச கோரிக்கையாளர்களின் பாதுகாப்பை எவ்வாறு சுவிட்சர்லாந்து உறுதிப்படுத்தப் போகிறது என்றும் அவர் அரசிடம் வினவியுள்ளார்.

குடியேற்றம் மற்றும் குடியகல்வு ஆகியவை தொடர்பான வழமையான நடைமுறைகள் தொடர்ச்சியாக இந்த விடயத்தின் பின்பற்றப்படுகின்றன என்றும், ஒவ்வொரு விண்ணப்பமும் தனிப்பட்ட முறையில் கையாளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுறது என்று இதற்கு பதிலளித்துள்ள சிவிஸ் வெளியுறவு அமைச்சு, கடந்த 2023 ஆம் ஆண்டு நவம்பர் இறுதிவரை 61 பேர் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும் 21 பேர் சுயமாக நாடு திரும்பினர் என்றும் சுவிஸ் சோஷலிஸ கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மொலினா ஃபேபியன் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது தெரிவித்துள்ளது.

மிகவும் சர்ச்சைக்குரிய இந்த இமாலய பிரகடனம் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தது. வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூக அமைப்புகள், போரினால் பாதிக்கப்பட்டவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் என்று பல்தரப்பினரால் இது நிராகரிக்கப்பட்டது மாத்திரம்ல்ல கண்டிக்கவும் பட்டிருந்தது.




tasty தமிழா
தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...
பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..
கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..
MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.
Call: 416 293 4010
MAHAANS
PICK & PRESS OIL MILL INC


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Per-mits
Contact: Siva
416-706-8160

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கட்டைக்காடு கடற்பகுதியில் கரை ஒதுங்கிய கூம்பு வடிவிலான கூடாரம்!



வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியில் இரும்பாலான கூம்பு வடிவிலான கூடாரம் ஒன்று காலை 22.02.2024 காலை கரையொதுங்கியுள்ளது.

மீன்பிடிப்பதற்காக கடலுக்கு சென்ற மீனவர்கள் இதனை அவதானித்து உடனடியாக வெற்றிலைக்கேணி கடற்படையினருக்கு அறிவித்தனர்.

இரும்பால் ஆன குறித்த மிதக்கும் கூடாரத்தை கட்டைக்காடு மீனவர்கள் தங்களது முயற்சியால் கரைக்கு கொண்டுவருவம் மீனவர்களின் முயற்சி தோல்வியுற்றதால் கூடாரத்தை அகற்றும் முயற்சியில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் ஈடுபட்டு அதனை அப்புறப்படுத்தினர்.

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கில் கரையொதுங்கிய இவ்வாறான கூடாரங்களில் தாய்லாந்து கொடி காணப்பட்டதோடு கரையொதுங்கிய இந்த கூடாரத்தில் எந்தவிதமான கொடியும், காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# "வீடு" உடைக்கும் ஒப்பந்தம்

**ஆயுத பலத்துடனிருந்த விடுதலைப்புலிகள் மௌனித்து விட்டார்கள்,அரசியல் பலத்துடனிருந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பை உடைத்து விட்டோம். சற்று உயிர்ப்புடனிருக்கும் தமிழரசுக்கட்சியையும் முடக்கி விட்டால் தமிழர் தீர்வுக்கான சர்வதேச அழுத்தங்கள் இன்றி, தமிழரை திருப்திப்படுத்த வேண்டிய அவசியமின்றி சிங்களவர்களுக்கான ஜனாதிபதியாக மீண்டும் தெரிவாகலாம் என்ற ரணில் விக்கிரமசிங்கவின் "நரிமூளை "திட்டமே" வீடு" உடைக்கும் ஒப்பந்தம்**

- கே. பாலா

விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டமும் அவர்களின் இராணுவ வெற்றிகளும் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான உள்நாட்டு, சர்வதேச பேச்சு முயற்சிகளில் தமிழர் தரப்பின் மிகப் பெரும் பலமாக இருந்த நிலையில் சமாதானம் பேசிப்பேசியே முன்னெடுக்கப்பட்ட சர்வதேச சூழ்ச்சிகள், கூட இருந்தே நடந்த குழிபறிப்புக்கள், காட்டிக் கொடுப்புக்களினால் 2009 ஆம் ஆண்டுடன் விடுதலைப் புலிகளின் போராட்டமும் பேரம் பேசும் ஆயுத பலமும் மௌனிக்கப்பட்டன.

அதன் பின்னர் விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்ட அரசியல் ஆயுதமான தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான உரிமைப்போரை அரசியல் ரீதியாக முன்னெடுத்தது.தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக தமிழ் தேசிய கூட்டமைப்பை சர்வதேச நாடுகளும் ஏற்றுக்கொண்டதுடன் தமிழர் தரப்பின் உரிமைகள், பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் தேசியக்கூட்டமைப்புடனேயே தொடர்புகளையும் பேணி வந்தன.

இந்தியா,அமெரிக்கா கூட தமது அரசியல் காய் நகர்த்தல்களுக்காக இலங்கை அரசுக்கு குடைச்சல் கொடுக்க தமிழ் தேசியக்கூட்டமைப்பையே பயன்படுத்தி வந்தன. அத்துடன் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகள், தீர்வுகள் வேண்டுமென தமிழ் தேசியக்கூட்டமைப்பும் சர்வதேச நாடுகள், ஐ.நா. மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்களை நாடியதனால் அது இலங்கை அரசுக்கும் பல வழிகளிலும் நெருக்கடிகளையும் அழுத்தங்களையும் ஏற்படுத்தியது.

இவ்வாறான நிலையில் மைத்ரி - ரணில் நல்லாட்சி அரசு உருவான நிலையில் தமது ஆட்சிக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பினால் சர்வதேச அழுத்தங்கள், நெருக்கடிகள் வந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த அப்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்க, தமிழ் தேசியக்கூட்டமைப்பை தனது "சின்ன வீடு" போன்றே வைத்திருந்தார். அத்துடன் எதிர்க்கட்சித்தலைவர் பதவியை அப்போது தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா. சம்பந்தனுக்கு வழங்கியதால் அந்த நல்லாட்சியில் தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு அடக்கியே வாசித்ததுடன் அரசை ஆதரிக்கும் எதிர்கட்சியாகவும் பல விடயங்களில் செயற்பட்டது.

ஆனால் பின்னர் ஏற்பட்ட போர் குற்றவாளியான கோத்தபாய ராஜபக்ச ஆட்சியில் அவருக்கு சர்வதேச ரீதியில் இருந்த எதிர்ப்புகளை பயன்படுத்தி தமிழ் தேசிய கூட்டமைப்பு ராஜபக்சக்களின் ஆட்சிக்கு எதிராக சர்வதேச ரீதியில் அழுத்தங்களை பிரயோகித்ததனால் ராஜபக்சக்களின் ஆட்சிக்கு பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டன. இதன்மூலம் தமிழ் மக்களுக்கு சாதமான சூழல் ஏற்பட்டுவந்த நிலையில் தான் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியுடன் "கோ கோம் கோத்தா" போராட்டங்கள் தீவிரம் பெற்றதனால் நாட்டில் மீண்டும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

இலங்கையின் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி "அரசியல் குள்ள நரி" ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். ஆனால் இம்முறை அவர் தனது ஜனாதிபதிக் கனவை அதிர்'டத்தின் மூலம் நனவாக்கியதனாலும் அப்பதவியை தொடரவும் விரும்பியதனாலும் சிங்களவர்களை திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றார். அதனால் அவர் தமிழ் மக்களின் உரிமைகள் ,அவர்களுக்கான அரசியல் தீர்வுகள் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் தனக்கு வரக்கூடிய சர்வதேச அழுத்தங்களை குறைக்க முடிவு செய்துள்ளார்.

அதற்காகவே ரணில் விக்கிரமசிங்க தமிழ் தேசியக்கூட்டமைப்பை உடைக்கும், பிளவுபடுத்தும் முடிவை எடுத்தார். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் நமபிக்கைக்குரிய தளபதியான கருணாவையே விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிளவுபடுத்தி விடுதலைப்புலிகளின் முடிவுக்கு பிள்ளையார் சுழிபோட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பை பிளவு படுத்துவது ஒன்றும் பெரிய விடயமாக இருக்கவில்லை.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக இருந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பை உடைக்க அதற்குள் இருந்த வடக்கு பிரதிநிதி ஒருவரையும் கிழக்கு பிரதி நிதி ஒருவரையும் தெரிவு செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிக இலகுவாக தமிழ் தேசியக்கூட்டமைப்பை சிதறடித்தார். ரணிலின் கைக்கூலிகளாக தமிழ் தேசியக்கூட்டமைப்பிற்குள் கலகங்களை செய்து, குழப்பங்களை ஏற்படுத்தி, முரண்பாடுகளை தோற்றுவித்த அந்த இரு பிரகிருதிகளினாலும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு உடைந்தது.



தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தாய் கட்சியாக கருதப்பட்ட அந்த இரு பிரகிருதிகளும் அங்கம் வகிக்கும் இலங்கை தமிழரசுக்கட்சி தமிழ் தேசியக்கூட்டமைப்பிலிருந்து தனித்து வெளியேறியது. இதனால் தமிழ் தேசியக்கூட்டமைப்பாக தமிழருக்கான அரசிய உரிமைகள், தீர்வுகள் விடயத்தில் இலங்கை அரசுக்கு கொடுக்கப்பட்டு வந்த சர்வதேச நெருக்கடிகள், அழுத்தங்கள் ரணில் அரசுக்கு குறையத் தொடங்கின.

தமிழ் தேசியக்கூட்டமைப்பு உடைந்ததனால் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா. சம்பந்தனும் பதவியை இழந்தார். இரா. சம்பந்தன் சர்வதேச நாடுகளின் நன் மதிப்பை பெற்றவர். அவரின் கருத்துக்கள், வேண்டுகைகளுக்கு சர்வ்தேச நாடுகளின் தலைவர்கள் மதிப்பளிப்பது வழக்கம். அதிலும் குறிப்பாக இந்தியா இரா. சம்பந்தனையே அதிகம் பயன்படுத்தி இலங்கை அரசுக்கு சில நெருக்கடிகளை கொடுத்தது. சம்பந்தனும் இந்தியாவை பயன்படுத்தி இலங்கை அரசுக்கு நெருக்கடிகளை அழுத்தங்களை கொடுத்து வந்தார்.

இவ்வாறான நிலையில் வயது மூப்பின் காரணமாக இரா. சம்பந்தன் அரசியல் ரீதியான செயற்பாடுகளில் சற்று தொய்வுகண்டார். இந்நிலையை பயன்படுத்தி இரா. சம்பந்தனை அரசியலிலிருந்து அகற்றும் அடுத்த காய் நகர்த்தலை சம்பந்தனால் வளர்க்கப்பட்ட வடக்கு பிரதிநிதியான அந்த "கடா" மூலமே ரணில் முன்னெடுத்தார். இதன்வெளிப்பாடாகவே "அரசியல் ரீதியாக செயற்பட முடியாத நிலையில் உள்ள இரா.சம்பந்தன் எம்.பி. பதவியிலிருந்து விலக வேண்டும்" என அந்த "வளர்த்தகடா" கத்தியது.

இவ்வாறான நிலையில் தான் "பழம் நழுவி பாலில் விழுந்ததுபோல்" இலங்கை தமிழரசுக்கட்சிக்கான தலைவர் தெரிவு இடம்பெற்றது. தமிழ் தேசியக்கூட்டமைப்பை உடைத்தாகி விட்டது. அதில் இருந்த பங்காளிக்கட்சிகள் இன்று பல்லுப் பிடுங்கிய பாம்புகளாகி விட்டார்கள். எனவே செயற்பாட்டு நிலையில் உள்ள இலங்கை தமிழரசுக்கட்சியை தனது கைப்பாவைக் கட்சியாக மாற்றினால் சர்வதேச அழுத்தங்களிலிருந்து மட்டுமல்ல தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்காமலும் விடலாம் என்ற ரணிலின் நரி மூளைத் திட்டத்தின் பின்னணியிலேயே ஏக மனதாக தெரிவு செய்யப்படும் இலங்கை தமிழரசுக்கட்சி தலைவர் நியமனத்தில் போட்டித்தன்மை ஏற்படுத்தப்பட்டு அது இரகசிய வாக்களிப்பு வரை சென்றது.

ஆனால் இலங்கை தமிழரசுக்கட்சியில் உள்ள தமிழ் தேசியத்தின் காவலர்களினால் அந்த திட்டம் முறியடிக்கப்பட்டு தமிழ் தேசியத்தின் பாதுகாவலராக கருதப்படும் ஒருவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். எனினும் தமிழ் தேசியக்கூட்டமைப்பை உடைத்த அந்த வடக்கு,கிழக்கு பிரகிருதிகளினால் இந்த தோல்வியை தாங்கிக்கொள்ள முடியவில்லை. இதுவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதகமாகவே இருந்தது. தமிழரசுக்கட்சியை தனக்கு சார்பாக மாற்ற திட்டமிட்ட அவர் அது முடியாத நிலையில் தனது விசுவாசிகளின் தோல்வியை பயன்படுத்தி இலங்கை தமிழரசுக்கட்சியை முற்றாகவே முடக்க திட்டமிட்டுள்ளார்.

அதன் பின்னணியிலேயே "எனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு இரு கண்களும் போக வேண்டும்" என்ற முட்டாள் சிந்தனையில் இலங்கை தமிழரசுக்கட்சியின் பொது செயலாளர் தெரிவில் குழி பறிப்புக்கள், குழப்பங்கள், சதிகளை செய்து "உள்வீட்டு" பிரச்சினையை நடுத்தெருவுக்கு கொண்டு வந்த இந்த ரணில் விசுவாசிகள் தற்போது இலங்கை தமிழரசுக்கட்சியை நீதிமன்றத்திலும் நிறுத்தியுள்ளனர்.இந்த விசுவாசிகளின் விசுவாசிகளினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இலங்கை தமிழரசுக்கட்சிக்கு எதிரான வழக்குகளில் தமிழ் தேசியத்திற்கு எதிரான தரப்பும் தமிழ் தேசியத்தை பாதுகாக்கும் தரப்பும் "சமாதானம்" காணாவிட்டால் வழக்குகள் இழுபட்டு ஒரு சில வருடங்களுக்கேனும் இலங்கை தமிழரசுக்கட்சி முடக்கநிலையில் இருக்க வேண்டியேற்படும்.

இந்த கால அவகாசம் சர்வதேச அழுத்தங்களை குறைத்து, தமிழர்களுக்கு தீர்வு வழங்காது சிங்களவர்களை மட்டும் திருப்திப்படுத்தி மீண்டும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவிற்கு போதுமானது. வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு ஒரு எட்டப்பன், பண்டாரவன்னியனுக்கு ஒரு காக்கைவன்னியன், பிரபாகரனுக்கு ஒரு கருணா போன்ற "உள்வீட்டு" துரோகிகள் இருக்கும்வரை ரணில் விக்கிரமசிங்க போன்ற பேரினவாத ஆட்சியாளர்களுக்கு வெற்றிதான்.



# வலிகாமம் வடக்கில் 500 ஏக்கர் சுவிகரிப்பு விமான நிலைய அபிவிருத்திக்கானதா?

(கனடா உதயனின் சிறப்பு கட்டுரை)

– நடராசா லோகதயாளன்

யாழ்ப்பாணம் விமான நிலைய அபிவிருத்தி என்னும் பெயரில் விமான நிலையத்திற்கு எதிர் திசைகளிலும் நிலத்தை அபகரிக்க முயற்சிக்கப்படுவது பெரும் சந்தேகத்தை ஏறபடுத்துவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பலாலி விமான நிலையம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்தப்பட்டபோது, அதற்கு செல்வதற்கான பிரதான வீதி கிழக்குத் திசையில் பலாலி வீதியில் இருந்து மேற்குத் திசையில் உள்ள கட்டுவன் மயிலிட்டி வீதிக்கு மாற்றப்பட்டது.

ஏற்கெனவே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இன்னும் இலங்கை பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், இப்போது விமான நிலையத்தைச் சுற்றி மேலும் நிலங்களை கபளீகரம் செய்யும் செயல்பாடும் தொடங்கியுள்ளன.

தற்போது சிவில் விமானப்போக்குவரத்து அதிகார சபை 500 ஏக்கர் நிலத்தை சுவீகரித்து தருமாறு கோருவதன் நோக்கம் விமான நிலைய ஓடுபாதை மற்றும் விமான நிலைய அபிவிருத்தி எனக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம் சர்வதே விமான நிலையத்தில் இன்று தரை இறக்கப்படும் 80 ஆசணங்களைக்கொண்ட விமானம் ஒன்றைத் தரை இறக்க 950 மீற்றர் ஓடு பாதையும் அடுத்த தர விமானமான 150 பயணிகள் பயணிக்கத்தக்க விமானங்களை தரை இறக்குவதானால் 2300 மீற்றர் ஓடு பாதையும் தேவையானது.

ஆனால், யாழ்ப்பாணம் சர்வதேச வி-மான நிலையத்தில் தற்போதே கைவசம் 2,300 மீற்றர் நீளமான ஓடு பாதை உள்ளபோதும் 950 மீற்றர் ஓடுபாதை மட்டுமே பயன்படுத்துவதன் காரணமாகவே இங்கே 150 பயணிகள் பயணிக்கத்தக்க விமானங்கள் தரையிறக்க முடியவில்லையே அன்றி 2300 மீற்றர் நீளமான ஓடுபாதை இல்லை என்பது தவறான கூற்று. இப்போது இருக்கும் 2300 மீற்றர் நீளமான ஓடு பாதையில் 500 மீற்றர் வரையான ஓடுபாதை செப்பனிடப்பட வேண்டும் என்பது மட்டுமே உண்மையானது.



இதேநேரம் யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் பிரதான நுழைவாயில் கிழக்குத் திசையில் இருந்தபோது காணப்பட்ட இடவசதிகள் தற்போதும் உள்ள போதும் அவை படையினரின் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டு மேலதிக நிலத்தை சுவீகரிக்கவே தற்போதைய திட்டமாக காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் அமைத்துள்ள தற்போதை இடத்திற்கு பலாலி வீதி ஊடாக உள் நுழையும்போது பலாலி வீதியின் மேற்கே பெரும் பிரதேசம் காணப்படுவது மட்டுமன்றி பலாலி வீதிக்கு கிழக்கே எந்தவொரு விமான நிலைய பயன்பாடும் இன்றி வெறுமனே படையினரின் பிடியில் 642 ஏக்கர் நிலம் இன்றும் உள்ளது.

இந்த 642 ஏக்கர் நிலத்தையும் முழுதையாக விடுவிப்பதாக அரசினால் பலதடவை படம் காட்டப்பட்ட போதும் அந்த நிலங்கள் இன்றுவரை விடுவிக்கப்படவில்லை. தற்போது காங்கேசன்துறை வீதி எவ்வாறு கடற்கரை வரையில் செல்கின்றதோ அதேபோன்று பலாலி வீதியில் தற்போது வசாவிளானில் போடப்பட்டுள்ள இராணுவத் தடையை அகற்றி கடற்கரை வரையில் பயணிக்கவும் பலாலி வீதிக்கு கிழக்கே உள்ள 642 ஏக்கர் நிலம், குரும்பசிட்டியில் தற்போது படையினர் வசம் உள்ள 126 ஏக்கர் என்பவற்றுடன், மயிலிட்டியில் மீனவர்களின் குடியிருப்பு நிலமான 150 ஏக்கர் என மொத்தம் 918 ஏக்கரையும் விடுவிக்க நடவடிக்கை இடம்பெறுவதாக தற்போதைய



அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தாவின் ஏற்பாட்டில் மாவட்ட மேலதிக அரச அதிபர் வரைபடங்கள் தரவுகளுடன் கொழும்பிற்கு விரைந்தார்.

2021ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் திகதி பிரதமர் அலுவலகத்தில் பிரதமர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் முரளிதரன் உள்ளிட்டோர் முன்னிலையில் பிரதேச வரைபடம், அந்த நிலத்தில் குடியமர தயாராகவுள்ள மக்கள் எண்ணிக்கை போன்றவை விவரங்களுடன் ஆராயப்பட்ட போது ஏதோ உடனடியாக நிலம் விடுவிப்பதுபோன்ற மாயை உருவானது.

இவ்வாறெல்லாம் விமான நிலையத்திற்கும் அப்பால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் வலி வடக்கிலே படையினரின் பிடியில் உள்ளபோதே தற்போது மேலும் 500 ஏக்கர் சுவீகரிப்பதற்கான முயற்சி இடத்பெறுவது மக்களிற்கு பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

விமான ஓடுபாதை நீளம் போதாது எனக் கூறும் சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை, விமான ஓடுபாதை உள்ள வடக்குத் தெற்குத் திசையில் நிலத்தை கோரவில்லை. மாறாக விமான ஒடுபாதையின் முன்பாக அலுவலகம், அதன் முன்னே பாரிய நிலப்பிரதேசத் உள்ளதற்கு முன்பாகவுள்ள கட்டுவன் மயிலிட்டி வீதிக்கும் மேற்குத் திசையில் உள்ள நிலங்களை கோரி நிற்பதே பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

ஏனெனில், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் தற்போதைய பிரதான நுழைவாயில் அமைந்துள்ள கட்டுவன் மயிலிட்டி வீதியில் வெறும் 3 ஏக்கர் நிலத்தை விடுவிக்க மறுத்து மக்களின் காணிகளை ஊடறுத்து வீதி அமைக்கும்போது இதற்கு அப்பால் எக்காரணம் கொண்டும் இனி படையினர் நில அபகரிப்பில் ஈடுபடமாட்டார்கள் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்டது.

கோவில்களும், பாடசாலைகளும் சிக்கியுள்ளன

போர் முடிந்து 15 ஆண்டுகள் பின்னரும், படையினர் வலிந்து ஏராளமான ஏக்கர் நிலங்களை விடுவிக்காமல் இருப்பது தமிழ் மக்களின் மன வேதனையை மேலும் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத்திற்கு என்று கூறி இன்னும் விடுவிக்கப்படாமல் இருக்கும் நிலப் பகுதியில் சைவ ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியவை சிக்குண்டுள்ளன. அவ்வாறு சிக்குண்டுள்ள ஆலயங்களில் நித்திய பூசை கூட செய்ய முடியாத துர்பாக்கியமான சூழல் நிலவுகிறது, அது மிகவும் விசனமளிக்கிறது என்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் துணைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் வருந்துகிறார்.

“வலிகாமம் வடக்கில் படையினர் வசம் தற்போதுள்ள நிலத்தில் 22ற்கும் மேற்பட்ட சைவ ஆலயங்கள் நித்திய பூசையின்றி அழிவடையும் அதேநேரம் 4 பாடசாலைகளும் படையினரின் பிடியிலேயே உள்ளது.

மறுபுறத்தே காங்கேசன்துறையில் தல்செவன எனும் படையினரின் பிடியில் சிவ புண்ணியபூமியே உள்ளது. கீரிமலையில் 7 சைவ அடையாளங்களிற்கு என்ன நடந்தன என்பதனைக்கூட முழுமையாக கண்டறியமுடியாமல் திணறுகின்றோம்.

இந்த நிலைமையிலேயே தற்போது அபகரிக்க முயற்சிக்கப்படும் 500 ஏக்கர் நிலப் பரப்பிற்குள்ளும், ஞானோதயாப் பாடசாலையுடன் துரைகட்டி வயிரவர் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், பூதநாதர் கோயில், பிள்ளையார் ஆலயம் தண்ணித்தாழ்வு வயிரவர் ஆலயம் என்பவற்றுடன் மயிலிட்டி பிரதேச சபையின் உப அலுவலகம் ஒன்றும், குரும்பசிட்டி பொதுச் சந்தை என்பனவும் காணப்படுகின்றது”.

எனவே இவை தொடர்பில் தமிழ் முஸ்லீம் பேதமின்றி வடக்கு கிழக்கின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் உரத்த குரல் எழுப்ப வேண்டுமென அகில இலங்கை இந்துமா மன்றத்தின் துணைத் தலைவர் ஆறு. திருமுருகன் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிதாக சுவீகரிக்கப்படவுள்ளதாக கூறப்படும் 500 ஏக்கரில் ஜே- 242, 238, 239, 240, 246 ஆகிய 5 கிராம சேவகர் பிரிவுகள் பகுதியளவிலோ அல்லது முழுமையாக இழக்கப்படும் அபாயம் உள்ளது என இப்பகுதியை பூர்வீகமாக கொண்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வலிகாமம் வடக்கு பிரதேச மக்களின் கவலை தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறிதரன் ஆகியோரைத் தொடர்புகொண்டு கேட்டபோது:

“2024-02-16 இன்று யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் இடம்பெறவுள்ளது. அதிலே நிச்சயமாக இது தொடர்பில் உடனடியாக பிரஸ்தாபிக்கப்படுவதோடு அடுத்து வரும் நாடாளுமன்ற அமர்வுகள் மற்றும் சர்வதேச பிரதிநிதிகளின் கவனத்திற்கும் இந்த விடயம் எடுத்துச் செல்லப்படும். ஏனெனில், மயிலிட்டித் துறைமுகம் உள்பட இப்பிரதேசங்களை விடவே முடியாது என மகிந்த ராஜபக்சவும் அவரது அமைச்சர்களும் கூறிவந்த நிலையில் எமது விடாமுயற்சியால் மீட்கப்பட்ட பகுதியை திருட்டுத் தனமாகவோ அல்லது கபடத்தனமாகவோ அபகரிப்பதனை அனுமதிக்கவே முடியாது” என்றனர்.

இதேநேரம் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகளில் இருந்து மீளவும் 500 ஏக்கர் பரப்பளவு காணிகளை சுவீகரிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்வது மீண்டும் அப்பகுதி மக்களை எத்தனை ஆண்டுகாலம் அலைய வைத்து, இன்னலுக்கு உள்ளாக்கும் முயற்சி என வலிக்காமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் கேள்வி கேள்வி எழுப்புகின்றார்.

“கடந்த 30 வருடங்களுக்கு மேல், உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த பகுதிகள் 2018 ஆம் ஆண்டு எமது நீண்ட போராட்டங்கள், தொடர் முயற்சிகளின் பயனால் விடுவிக்கப்பட்டிருந்தது.

மக்கள் மீளக்குடியமர்ந்து தமது வாழ்வாதாரத்தை பகுதி பகுதியாக கட்டமைத்துக் கொண்டுவரும் வேளையில், மக்களுக்கு இடி விழுந்தால் போல் மீளவும் 500 ஏக்கர் காணியை அரசாங்கம் சுவீகரிக்க முயற்சி செய்கின்றது.

உண்மையில் பலாலி விமான நிலைய விஸ்தரிப்பிற்காக காணிகள் சுவீகரிக்கப்படுவதாக கூறப்படுகிறது. அதனை நம்ப மக்கள் தயாராக இல்லை. இதற்கு எதிராக மீண்டும் மக்கள் போராட்டங்கள் இடம் பெறும் இதற்கு மக்கள் எதிர்ப்பினை வெளியிடுவார்கள்.

காணி அளவையாளர்கள் இங்கு வந்தால் அவர்கள் அடித்து விரட்டப்படுவார்கள். இங்கு வருபவர்களை கண்டறிவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஏனைய மக்களுக்கு இதனை தெரியப்படுத்தி எதிர்ப்பில் ஈடுபடுவார்கள்” என்றார்.



# கனடா நோக்கிய பயணம்: டீகோ கார்சியாவில் சிக்கிய தமிழ் புகலிட கோரிக்கையாளர்களின் நிலை

(கனடா உதயனின் சிறப்பு கட்டுரை)



,ந்தியப் பெருங்கடல் பகுதியில் பிரித்தானிய - அமெரிக்க இராணுவத்தின் ஆளுமையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள டியாகோ கார்சியாவில் சிக்கியுள்ள தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் கடும் நெருக்கடிகளில் சிக்கியுள்ளதாக ஐ.நாவின் சிறப்பு விசாரணைக் குழுவின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

அங்கு இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக சிக்கியுள்ளவர்கள் வன்முறை, துஷிபிரயோகம், சட்டவிரோத தடுப்புக்காவல் ஆகியவற்றை எதிர்கொள்வதால், அவர்கள் உடனடியாக வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று அந்த ஐ நா அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், கனடாவில் தஞ்சம் கோரும் நோக்கில் இந்தியாவிலிருந்து சென்ற தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்த படகு அந்த தீவை அண்மித்த கடல் பிரதேசத்தில் சேதமடைந்ததால் அவர்கள் மீட்கப்பட்டு அந்த தீவிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

பிரித்தானியாவுக்கு சொந்தமான அந்த தீவில் தங்கவைக்கப்பட்டுள்ள, தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் குழு, தாங்கள் பாதுகாப்பற்ற நிலையில் மறக்கப்பட்டுவிட்டதாகவும் உணர்வதாக தெரிவித்துள்ளதோடு, பாலியல் துஷ்பிரயோகங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தங்கியுள்ள அகதி முகாமிலுள்ள இதர புகலிட கோரிக்கையாளர்களாலேயே பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு தாங்கள் ஆளானதாக ஐ நா விசாரணையாளர்களிடம் கூறினர். பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் மன உளைச்சல் காரணமாக சுய தீங்கை ஏற்படுத்திக் கொண்டு தற்கொலைக்கு முயல்வது ஆகியவை குறித்தும் அவர்கள் ஐ நா விசாரணையாளர்களிடம் பகிர்ந்துகொண்ட விடயம், பிரித்தானியாவின் எல்லைகளுக்கு அப்பால் இந்தியப் பெருங்கடலில் இருக்கும் பிரதேசங்களுக்கான உச்சநீதிமன்றத்தில் ஐ நாவின் அகதிகளுக்கான அமைப்பு தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அங்குள்ள புகலிட கோரிக்கையாளர்களின் நிலைமை குறித்து கவலைகள் எழுந்ததை அடுத்து முதல் முறையாக அங்கு நேரில் ஆய்வு செய்ய ஐ நா அகதிகளுக்கான முகமையின் அங்கு குழு சென்றுவந்தது.

பாலியல் வன்முறைகள், துன்புறுத்தல்கள் குறித்து முறைப்பாடு செய்வதால் எந்த பயனும் இல்லை என புகலிடக் கோரிக்கையாளர்கள் கருதுவதாகவும், பாதுகாப்பு, நீதி போன்ற விடயங்களில் முன்னேற்றம் ஏற்படப்போவதில்லை என அவர்கள் கருதுவதே அங்கு அப்படியான செயல்கள் அதிகரிக்க காரணம் எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஒரு கால்பந்து மைதான் அளவிற்கே இருக்ககூடிய நிலப்பரப்பில் கூடாரங்கள் அமைக்கப்பட்டு இந்த புகலிட கோரிக்கையாளர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இடப்பாற்றாக்குறை நிலவும் சூழலில், பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள் பாதிக்கப்பட்டவர்களுடன் ஒரே முகாமில் வசிக்கும் நிலைமை காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிலும் அந்த 61 பேரில் 16 சிறுவர்கள் தடுத்து வைத்திருப்பது "குறிப்பாக கவலைக்குரியது" என குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதோடு, சர்வதேச பாதுகாப்பு தேவைப்படும் பட்சத்தில் அவர்களை பிரித்தானியாவிற்கு மாற்றுவதற்கான அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் சுயாதீனமாக எங்கும் வெளியே செல்ல முடியாதபடி அவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள கூடாரங்களைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டு, பிரித்தானியாவை தளமாகக் கொண்ட G4S என்ற தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் ஊழியர்களால் கண்காணிக்கப்படுகிறார்கள்.

புகலிடக் கோரிக்கையாளர்கள் சுயமாக தமக்கான சமைக்க அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களுக்கு நாளொன்றுக்கு மூன்று வேளை உணவு அளிக்கப்படுவது என்றாலும், அது பல சந்தர்ப்பங்களில் அவர்களின் கலாசார விழுமியங்களுடன் ஒத்துப்போவதில்லை என்று ஐ நா அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி எலிக்கடியாலும் அவர்கள் பாதிக்கப்படுவதாகவும், தீவில் பரவலாக காணப்படும் எலிகள் புகலிடக்கோரிக்கையாளர்களின் கூடாரங்களை சேதப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

"நாங்கள் மறக்கப்பட்டவர்களாகிவிட்டோம், எங்கள் வாழ்க்கைய முடித்துக்கொள்வது குறித்து எங்களில் அனேகமானவர்கள் கருதுகின்றோம்." என பெண் ஒருவர் ஐ நா விசாரணையாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

டீகோ கார்சியாவில் தங்கள் வாழ்க்கை நிலை குறித்தும் அவர்கள் பேசியுள்ளனர். "இங்கு வாழ்வது நரகத்தில் வாழ்வது போன்றது" என புகலிடக் கோரிக்கையாளரான தாய் ஒருவர் தெரிவித்துள்ளதாக குறிப்பிடும் அந்த அறிக்கை, சிறுவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்ற நிலையில், காவலுக்கு இருக்கும் நாய் வேலிக்கு வெளியே சுதந்திரமாக சுற்றித் திரிவதையும் சிறார்கள் தெரிவித்ததையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த தீவு இந்தியப் பெருங்கடல் தீவின் ஒரு பகுதி என பிரித்தானியா வலியுறுத்துகிறது. இது லண்டனால் நிர்வகிக்கப்படுகிறது, எனினும் அரசியலமைப்பு ரீதியாக பிரித்தானியாவில் இருந்து பிரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை டீகோ கார்சியா தீவு மொரிஷியஸின் ஒரு பகுதி என ஐக்கிய நாடுகள் பொதுச் சபை தெரிவிக்கின்றது.

புகலிடக் கோரிக்கையாளர்களின் குழுவினால் பிரித்தானியாவில் இருக்கும் அந்த பிரதேசத்திற்கான உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு ஒன்றில், அந்த தீவில் தாங்கள் தடுத்து சட்டவிரோதமான தடுப்புக்காவலாகும் என வெளிப்படுத்தப்பட்டதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவர் அமைப்பு அந்த நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அவர்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி ஒருவர், டீகோ கார்சியாவில் அவர்களின் வாழ்க்கை அச்சுறுத்தும் வகையில் அபாயகரமாக உள்ளது என்றும், அவர்களை சந்திக்க அனுமதி மறுக்கப்படுகிறது என்றும் நீதிமன்றில் கூறியுள்ளார்.

இதேவேளை பிரித்தானியவில் வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் இது பற்றி கூறும் போது: "பிரித்தானியவிற்கு வெளியே ஆனால் தமக்கு சொந்தமான அந்த தீவுகள் குடியேறிகள் இருப்பதற்கு ஏற்ற இடம் கிடையாது, அதனால் தான் நாங்கள் அவர்களின் தஞ்ச கோரிக்கையை பரிசீலப்பதற்கு கடுமையாக உழைத்து வருகிறோம் என்றும், பாதுகாப்பு தொடர்பில் யாருடைய கோரிக்கைகள் ஏற்க்கப்படுகிறதோ அவர்களை ஏற்புள்ள மூன்றாம் நாடு ஒன்றிற்கு அனுப்ப முயல்கிறோம். எந்த வேளையிலும், அங்கிருக்கக் கூடிய குடியேற்றவாசிகளின் நல்வாழ்வும் பாதுகாப்புமே எமது உச்சபட்ச முன்னுரிமையாக உள்ளது" என்று கூறியுள்ளார்.

எனினும் அங்கு அவர்களின் சூழல் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதற்கு ஒப்பாகும் என்பதை தாங்கள் ஏற்கவில்லை என்றும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் கூறுகின்றன.

---

## கடந்தவையும் கடப்பவையும்

– [89]

வல்லிபுர ஆழ்வார் ஆனாலும் முதல்வணக்கம்
அல்லல் அறுக்கும் ஆனைமுகன் அவனுக்கே - அங்கு

எல்லைகள் இல்லாது நல்லருள் வழங்குதற்காய்
நெஞ்சமதைக் கொள்ளை கொள்ளும் வயல்வெளியில்

ஆலமரம் நிழல் கொடுக்க குளிர்ந்த நீர்
நிலையான குளமொன்றும் தனதாக - கண்ணனிடம்

வருவோரின் உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக்கி
மாயவனாம் அவனின் அருள்வேண்ட அனுப்புகிறார்.

கொஞ்சம் தூரமாக இருந்தாலும் துணையாகத் தானிருந்து
வாஞ்சையோடும் வனப்போடும் ஆதரவாய்

வல்லிபுரஆழ்வாரின் வீதி உலாக்காலங்களில் மூலமூர்த்தி.
நல்லருள்நல்கும் இந்த குருக்கட்டு சித்திவிநாயகர் இவரின்

சிறப்புப்பூசையில் கலந்தபின்பே வீதிவலம் வருவதுண்டு.
தினந்தோறும் பூசைகூட முதல்நடக்கும் தள்ளியுள்ள விநாயகர்கே

இத்தனை சிறப்புக்களைக் கொண்டபோதும் தனக்கென
சத்தமாக தனிப்பாடல் இல்லைப்போலும் - அன்றும்

ஆலயத்தின் பின்னுள்ள குளத்தடியில் இறங்குகையில்
காதுகளில் விழுகிறது "கோதையின் திருப்பாவை

வாசகன் எம்பாவை கூப்பிடும் குரல்கேட்டு கண்ணன் வந்தான்
மாதவர் பெரியாழ்வார் மன்னவர் குலத்தாழ்வார்
ஓதியமொழி கேட்டு கண்ணன் வந்தான்"

காற்றினிலே கலந்துவரும் கண்ணனது பாடல்கள்
முன்னைய நினைவுகளை நெஞ்சத்தில் ஊற்றியது - முன்பு

மறைப்பில்லா திறந்தவெளி பெரும்பரப்பில்
நிறைந்திருக்கும் குளத்தினிலே சுவையான குளிர்தண்ணீர் - அதை

எடுப்பதற்கு வாளியிலே கயிறுகட்டி வைத்திருப்பர்
தடுப்பேதும் பெரிதாக இருக்காத கற்பத்தல்

விரிந்திருக்கும் பாய்போல நீட்டாக - ஒன்றிற்கு
அதிகமாய் அவையிருக்கும் அவை ஒவ்வொன்றிலும்

வாளிகள் தனித்திருக்கும் வருவோர்க்கு வசதியாக.
குனிந்துதான் அள்ளவேண்டும் தண்ணீரை - எப்போதும்

தந்தையோ தாத்தாவோ இருவரில் ஒருவர்தான்.
முன்னரெல்லாம் பெண்கள் அள்ளுவது மிகக்குறைவு

சின்னவராய் இருந்தபோது திறந்தவெளிக்குளிப்பு
சங்கடமாய் இருக்கவில்லை பெண்களும்தான் குளிப்பார்கள்

வயல்வெளிக்காற்றும் குளிர்ந்த நீர்வார்ப்பும் மட்டில்லா
மகிழ்வொடு புத்துணர்ச்சி ஏற்படுத்த - அங்கு

குளத்திற்கு அருகிருக்கும் குட்டி விநாயகருக்காய்
அளிக்கப்படும் பெருந்தொகைக் கற்பூர

நறுமணமும் சுற்றுப்புறச்சூழலிற்கு சுறுசுறுபை
பெருளவில் ஏற்படுத்தும் பெரும்பேறும் - அங்கு

ஆண்டுகள் பல கழிந்து மறுபடியும் ஒருமுறை
பன்னிரண்டு ஆண்டுகளின் முன்பு - அன்றளவும்

மாயவனில் அருளால் தூயவனாய் பெருந்துணையாய்
மேலான அனைத்தும் தந்த தந்தைக்கு - இனி

நீர்வார்க்க நாளொன்று அமையாது தானென்றோ - மேல்
நீர்வார்க்கும் ஒருவாய்ப்பை நல்கினான் போலும்

குளிக்காதவேளையில் பெண்களும் அள்ளலாம் - இது
எனக்காகத் தரப்பட்ட வாய்ப்புப்போல் இருந்தது.....

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# சமஷ்டியை நீக்கிய தமிழரசுக் கட்சி

[கட்டுரையாளர் வி.எஸ். சிவகரன்]

mரசியல் என்பது அயோக்கியனின் கடைசி புகலிடம் என்றார் மாக்கியவல்லி. அந்த கூற்றை எத்தனை ஆண்டுகள் கடந்தும் அரசியல் வாதிகள் நிரூபித்த வண்ணமே உள்ளனர். தமிழர்களின் அரசியல் செல்நெறியை உருவாக்கியதும் கோட்பாட்டு சித்தாந்தத்தை திடமாக தடம் மாறாத நோக்கு நிலையில் உருவாக்கிய தமிழரசுக்கட்சியும் பதவி மோகத்தாலும் சந்தர்ப்ப வாத சுயநலத்தாலும் தடுமாறுகிறது.

1976-05-14ல் இருந்து தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஓர் அங்கம் ஆகியதன் பின்னர் 10-01-2010ல் யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் தான் தனது 13 வது தேசிய மாநாட்டை பகிரங்கமாக நடாத்தியது. அதில் இருந்து யாப்பு மீறல் என்பது தொடர்கிறது. இதற்கிடையில் 27-04-2008 யாழ்ப்பாணம் கட்சி அலுவலகத்திலும் 23-08-2008 கொழும்பிலும் உள்ளக ரீதியாக நடை பெற்ற கட்சிக் கூட்டங்களில். விதி 02 (அ) சமஷ்டி எனும் சொல்லை நீக்கிவிட்டு இணைப்பாட்சியின் என்ற சொல்லை பதிலீடு செய்துள்ளனர்.

இது மட்டுமன்றி வேறு பல திருத்தங்ளும் செய்துள்ளனர் அத் திருத்தங்களை 26-05-2011 மாவை சேனாதிராஜா பொதுச் செயலாளராக இருந்த போது மகிந்த தேசப்பிரிய தேர்தல் ஆணையாளராக இருக்கும் போது தேர்தல் திணைக்களத்தில் கையளிக்கப்பட்டு மகிந்த தேசப்பியவால் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஆனால் தற்போது தேர்தல் திணைக்கள இணையத்தில் மேற்கூறிய திருத்தம் உடைய யாப்பு இல்லை. 25-09-2020ல் வழங்கப்பட்ட யாப்பே காணப்படுகிறது கட்சி தலைமை அலுவலகத்திலும் கட்சியின் முக்கிய நபர்கள் என கூறப்படும் வர்கள் இடத்திலும் இதை விட வேறு விதமான யாப்பு க்கள் காணப்படுகின்றன வேறு சிலர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாப்பை தமிழரசுக் கட்சியின் யாப்பாக நினைத்து வியாக்கியானம் செய்கின்றனர்.

ஆகவே கட்சியிடம் தெளிவான யாப்பும் இல்லை. அதைப்பற்றி அவர்கள் ஆழமாக சிந்தித்ததும் இல்லை. பிரபல சட்ட வல்லுநர்கள் என்று தம்மை வெளிக்காட்டிக் கொள்ளக்கூடிய பலர். கட்சியில் பல்வேறு விதமான பொறுப்பில் இருந்துள்ளனர். தற்போதும் இருக்கின்றனர்.

குறிப்பாக சனாதிபதி சட்டத்தரணிகளான சுமந்திரன், தவராசா சட்டத்தரணிகளான சம்மந்தன் துரை ராசசிங்கம், சயந்தன் இவர்களை விட மாவட்ட ரீதியாக பல இளம் சட்டத்தரணிகள் உள்ளனர். இவர்கள் மாத்திரமன்றி பல பேராசிரியர்கள் வைத்தியர்கள் பொறியியலாளர்கள் இதர பல கல்வியாளர்கள் என பல்வேறு துறை சார்ந்த புத்திஜீவிகள் என எந்த தமிழ்க் கட்சியிலும் இல்லாத அளவுக்கு தமிழரசுக் கட்சியில் அங்கம் வகித்தனர் காரணம் வடகிழக்கை ஓரளவுக்கேனும் பிரதிநிதித்துவப் படுத்தியது தமிழரசுக் கட்சி தான் என்பதில் எவருக்கும் இரு கருத்து நிலை இல்லை.

ஆனால் இத்தனை பட்டம் பெற்றவர்கள் இருந்து என்ன பயன் ஒரு கட்சியோ அல்லது அமைப்போ, குடுப்பமோ, வணிகமோ எதற்கும் மிகவும் அடித்தளமாக விளங்குவது யாப்பு ரீதியான இருப்பியல் கோட்பாடே அதில் ஆட்டம் கண்டால் யாவும் அசைந்துவிடும்.

ஆகவே இன்றைய தடுமாற்றத்திற்கு கறுப்பு கோட்டு போட்ட எல்லா சட்டம்பிகளும் பொறுப்புக்கூற வேண்டும்.

தமிழரசுக் கட்சியின் மறுபெயர் சமஷ்டிக் கட்சியே ஆனால் அந்த சொல்லையே நீக்கிவிட்டு அதை சட்டப்படி தேர்தல் திணைக்களத்தில் வழங்கிவிட்டு வெளியே தெரியாத படி மறைத்தும் வைத்துள்ளனர். இது மிகப் பெரிய ஏமாற்று நாடகம் எதுவும் அறியாத வாக்காளன் இவர்களின் உணர்ச்சிவச தேர்தல் பேச்சை நம்பி கண்ணை மூடிக்கொண்டு வாக்களிக்கிறார்கள் இவ்விதமான ஏமாற்றுக்கள் எல்லாம் அவர்களுக்கு மட்டுமல்ல கட்சியில் பதவியில் உள்ள பலருக்கும் புரிவதில்லை. புரிய முயல்வதும் இல்லை.

இப்போது மட்டுமல்ல இவர்கள் ஏலவே கூட இப்படி பல முன்னுக்கு பின் முரணாக நடந்து கொள்வது வாடிக்கை தான் 1977ல் தமிழர் விடுதலைக் கூட்டணியாக தேர்தலை சந்தித்த போது தமிழரசின் தளபதியாக இவர்களின் ஆதர்ச நாயகனாக அக் காலத்தில் விளங்கிய அமிர்தலிங்கம் மட்டக்களப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இராசதுரையும் தமிழரசுக் கட்சியில் காசியானந்தனையும் களமிறக்கி பல்வேறு குழப்பத்தை ஏற்படுத்தினார் தமிழரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன இணைந்து கொள்ளும் போது ஏற்படுத்திக்கொண்ட உடன்பாட்டுக்கு அமைய இ தொ. கா வடகிழக்கு கோட்பாட்டில் மலையக அரசியல் சாத்தியமில்லை என்று வெளியேறினார்.

அது வேறு விடயம் ஆனால் அமிர்தலிங்கம் அத் தேர்தலில் தமிழரசுக் கட்சியையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் களத்தில் இறங்கி தனது மாறுபட்ட நிலையை வெளிப்படுத்தினார். அது மட்டுமல்ல குமார் பொன்னம்பலம் அத் தேர்தலில் யாழ்ப்பாண தொகுதியை கேட்க இல்லை நீங்கள் ஏலவே வெற்றி பெற்ற பருத்துறை தொகுதி தரலாம் என அடம்பிடித்து அவர்கள் வெளியேறும் நிலையை தோற்றுவித்தார். அது மட்டுமல்ல அவர்களது கட்சி சின்னம் கூட இரத்தாகியிருந்தது. அதனால் அவர்கள் அத் தேர்தலை சுயேட்சையாக எதிர் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பதிவு நீக்கத்திற்கு அமிர்தலிங்த்தின் சூழ்ச்சியே என்று குமார் பொன்னம்பலம் விமர்சனம் செய்தார் பின்னர். ஜே.ஆரின் அனுசரணையில் தான் கட்சியை மீட்டனர் என்றும் கதையுண்டு அது வேறு விடயம்.

அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்கள் இவ்விதமான ஏமாற்று வேலைகளை சர்வசாதாரணமாக செய்ய தயங்குவதில்லை.

தமிழரசுக்கட்சியில் தற்போது பதில் பொதுச் செயலாளராக இருக்கும் மருத்துவர் ச த் தி ய லி ங் க ம் அப்பதவியை வகிக்க முடியாது.

விதி 07 பொதுச்சபை (அ). ஒரு துணைப் பொதுச் செயலாளர்.

2014 ஆண்டு நடந்த கட்சியின் 15வது தேசிய மாநாட்டில் இருந்து துணைப் பொதுச் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தொடர்கிறார் சத்தியலிங்கம் 2017ல் நடைபெற்ற 16வது தேசிய மாநாட்டில் தான் அவரும் துணைப் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார் அப்படியாயின் யாப்பின் படி இரண்டு துணைப் பொதுச் செயலாளர்கள் பதவி வகிக்க முடியாது.

ஆகவே இந்த இடைக்காலத்தில் பதில் பொதுச் செயலாளராக பணியாற்றியது சரியா அதை தேர்தல் ஆணையம் எப்படி ஏற்றுக்கொண்டது என்ற பல கேள்விகள் எழலாம் அப்படியே அது தவறு என்றால் அவரால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகளையும் கேள்விக்குள்ளாக்கும் இவை எல்லாம் மாவை சேனாதிராஜாவின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளே கட்சியின் எழுதப்படாத மரபை மீறி பத்து ஆண்டுகள் தலைவராக இருந்து சாதித்தவை என்ன கட்சியின் தாபகர் தந்தை செல்வநாயகம் கூட இரண்டு தடவைகளில் விலகி செயலாளராக கூட இருந்தார் தமிழரசுக் கட்சியின் இறுதி சவப்பெட்டிக்கு சேனாதிராஜா தான் ஆணி அடிப்பார் என அமிர்தலிங்த்தின் துணைவியார் இறப்பதற்கு சில காலத்திற்கு முன்னர் ஒரு ஊடகத்திற்கு கருத்து தெரிவித்திருந்தார்.

அதை மெய்ப்பிக்கும் வகையில் தான் அண்மைய நகர்வுகள் உள்ளன.

ஆகவே கட்சிக்குள் போட்டி வருகிற போதே பிரிவு அல்லது பிளவு ஏற்பட வாய்ப்பு உண்டு என்பது வழமை தான் அதே அறிவாற்றல் மூலம் தந்தோரபாயமாக தற்காத்துக் கொள்வதற்கான சிறந்த உத்திகளை பயன்படுத்த வேண்டியதே தலைமையின் ஆளுமை வெளிப்பாடு இங்கு ஏட்டிக்குப் போட்டி அரசியலே நகர்கிறது மிகவும் பலவீனமான நிலையில் உள்ள தமிழினத்தின் எதிர்கால இருப்பு பற்றி எவருக்கும் கிஞ்சித்தும் கவலையிருப்பதாகத் தெரியவில்லை.

ஆகவே நடந்த தவறை ஏற்றுக் கொண்டு கட்சியினதும் தமிழினத்தினதும் எதிர்காலத்தை எண்ணி நீதிமன்றில் இருந்து விடுவித்துக் கொள்வதே சிறந்த தலைமைக்கு அடையாளம். இல்லையேல் வரலாறு இவர்களை ஒரு போதும் மன்னிக்காது.

சிரித்திரன் ஆசிரியரின் கேள்வி பதில் தான் நினைவுக்கு வருகிறது சித்திரையில் புத்திரன் பிறந்தால் அக்குடி கெடுமாமே? என்று ஒருவர் கேள்வி கேட்டிருந்தார். அதற்கு பதிலாக இப்படி கேட்டார் அப்படியானால் நம் தமிழ்த் தலைவர்கள் சித்திரையிலா பிறந்தார்கள் என்று. அளவானவர்கள் அணிந்து கொள்ளுங்கள் அறிய வேண்டியவர்கள் அளந்து கொள்ளுங்கள்.

(தொகுப்பு: எஸ்.ஆர். லெம்பேட்)


## Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthdays
- Graduation Party
- Bridal Shower
- Engagement
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868


## கண்ணீர் அஞ்சலி #62

மலர்வு 13 - 03 - 1935



உதிர்வு 14 - 02 - 2024

**அமரர் குமாரசாமி கணேசன்**

எங்கள் OSTBA உறுப்பினர் #91
மாசி 14, 2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION
OSTBA2019@GMAIL.COM WWW.OSTB5.CA
416-473-6880

# Sri Lanka Urged to Publish all Commission of Inquiries Report

- Siva Parameswaran




A leading Human Rights organization has demanded the Sri Lankan Government release all the unpublished reports of previous commissions of inquiry.

South Africa-based International Truth and Justice Project (ITJP) while urging the government to release those reports has also questioned the rationale of one come commission being appointed to look into gross violation of human rights.

"The Truth, Unity, and Reconciliation Commission is the latest in a line of at least 36 commissions established by the Government of Sri Lanka to look for the truth, and yet victims say justice and accountability remain elusive" ITJP in its latest media release said.

Sri Lankan victims have lost count of the number of government commissions established to look into gross violations of human rights, as yet another one is about to be established it added.

The latest report from ITJP has been released coinciding with the peaceful protest by families of the disappeared demanding to know the fate of their dear ones who were either handed over to the state security forces or surrendered or victims of enforced disappearance during the final phase of the war.

On the 20th of February 2017, a peaceful protest led by women started-demanding a simple answer "What happened to our dear ones?".

Even as their peaceful protest, considered one of the longest such in recent times entered its eight year, not even one individual who went missing either during or after the war has been found out despite an "Office on Missing Persons (OMP) was established by an act of the Parliament on the 11th of August 2016.

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

Even the appointment of seven commissioners as mandated in the act was done only on 28th February 2018 when Maithripala Sirisena was the President.

"It's eight years today (20) since the families of the disappeared bravely started street protests to call for action; since then more than 240 elderly relatives have died without finding out what happened to their loved ones," ITJP's latest report says.

The latest Truth Commission proposed by the Government has been rejected by 37 Civil Society Organizations (CSOs) and 19 activists who have already issued statements with reasons why they reject the latest one by the Government.

"This is an eyewash," Ambika Satgunanathan, Senior Attorney and Member, UN Voluntary Trust Fund for Victims of Torture wrote on X page (formerly Twitter). A former member of the Human Rights Commission of Sri Lanka she says the Mechanism is bound to fail in the "absence of a political will and a perfect law".

ITJP in their latest report points to the abject failure of past mechanisms, the failure to make documents public, the lack of sufficient powers for the new body, the absence of international involvement in the process, the absence of an appropriate judicial mechanism, and the failure to implement the recommendations of a long line of previous commissions.

They have published a list of 36 past commissions set up by the government of Sri Lanka.

"Shockingly the final reports of more than a third of these-14 were never made public".

Additionally, very few are even displayed on any government website, despite being for a large part digitized. Indeed, we could only find copies available of approximately half - 11 - of the 22 published reports of past commissions, their report added.

Commenting on the pattern of inquiries being established to investigate, ITJP says they were done only to find what happened but not to hold anyone criminally responsible, with the result that there is a persistent recurrence of mass atrocities by the same individuals.

"This raises serious concerns about the Sri Lankan President's latest accountability initiative. The first step towards truth would surely be for the Presidential website to acknowledge and endorse the content of past government investigations by publishing them online".

In the spirit of truth, this should include reports that name the President, like the Batalanda Commission, which concluded inter alia that it was impossible for the torture and detention at the Batalanda torture site to happen without Ranil Wickremesinghe's knowledge, the South African-based Human Rights Organization has demanded.

The report was jointly produced by the International Truth and Justice Project, Centre for Human Rights Development, No More Disappearances (FOD) and the Women's Action Network.

The full report released by these organizations can be read here.
https://itjpsl.com/assets/v2-20-Feb-2024-Joint-Press-Release-Publish-Past-Commissions-of-Inquiry-copy.pdf





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் **B.A.**
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் **1088**

## கைலாசநாதர் திருக்கோயில் (நல்லூர் சிவன்கோயில்) நல்லூர், யாழ்ப்பாணம

*“ வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட*
*முழுதும் தருவோய் நீ*
*வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ வேண்டி*
*ஏன்னைப் பணிகொண்டாய்*
*வேண்டி நீயாதருள் செய்தாய் யானும்*
*அதுவே வேண்டின் அல்லால்*
*வேண்டும் பரிசொன்று உண்டென்னில்*
*அதுவும் உன்றன் விருப்பன்றே.”*

இந்நிலையில் 1983 ஆம் ஆண்டு, சிலாபம் பிரதேசத்தில் அமைந்துள்ள பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றாக விளங்கும், முன்னேஸ்வரம் ஆலயத்தின் பிரதமகுருவாகவும், ஆலயதர்ம கர்த்தாவாகவும், சிவஸ்ரீ கா.இரத்தினகைலாசநாதக் குருக்கள் செல்ல வேண்டி ஏற்பட்டது. இவ்வேளையில் நல்லூர் சிவன் கோயிலின் பரிபாலனப் பொறுப்பினை, பேராசிரியர் சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

மைந்தர்கள் இருவரும் தந்தையார் காட்டிய நெறிநின்று முன்னேசுவரம், நல்லூர் சிவன் கோயில் ஆகியவற்றின் பரிபாலனத்தைத் திறம்பட நடத்தி வந்தனர். ஆயினும் வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டு, புராண இதிகாச வரலாறுகளில் இடம்பெற்ற சிவாலயமாகத் திகழ்ந்த முன்னேசுவரத்தின் கிரியை மரபுகள், ஏனைய ஆலயங்களும் பின்பற்றக் கூடிய வகையிலே காணப்பட்டன. இக்காரணத்தினால் நல்லூர் சிவன் கோயிலிலும், முன்னேசுவரத்தின் கிரியை மரபுகள் பலவும் பின்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆதிகாலத்திலிருந்தே ஆலயங்கள் மக்களை வழிநடத்தும் பணியில் பல்வேறு நிலைகளிலே செயற்பட்டு வந்துள்ளன. குறிப்பாக அறிவு வளாச்சியை மேம்படவைக்கும் பணியில் கதாப்பிரசங்கங்கள், வில்லுப்பாடல்கள், சமயச் சொற்பொழிவுகள் மூலம், ஆன்மீகத்தை மேம்படுத்த இவ்வாறான ஆலயங்கள் பெரிதும் துணை புரிந்துள்ளன. குறிப்பாக, இவ்வாலயத்திலே காணப்படும் ஆகமநூலகம், அரிய பொக்கிஷமாக விளங்குகின்றது. இங்கு இவ்வாலய தாபகராக விளங்கிய சிவஸ்ரீ ந.வெ. கார்த்திகேயக் குருக்கள் அவர்கள் காலத்து நூல்கள், சோதிடவிற்பன்னராக விளங்கிள பிரம்மஸ்ரீ இரத்தினகைலாசநாதக் குருக்களது சோதிடநூல்கள், பேராசிரியர் சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்களின் நூல்கள் என, அரிய பல நூல்கள் நல்லூர் சிவன் ஆலயத்தின் ஆகம நூலகத்திலே காணப்படுகின்றன.

இவ்வாலயத்தின் தர்மகர்த்தாக்களாக விளங்கிய பேராசிரியர் சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் மற்றும் பிரம்மஸ்ரீ இரத்தினகைலாசநாதக்குருக்கள் ஆகியோர் வகுத்தநெறிகளின்படி, தற்காலத்திலும் இவ்வாலய நித்திய, நைமித்திய வழிபாடுகள் நடைபெறுகின்றன. நல்லூர் பிரதேசத்தில் வாழும் மக்கள் மட்டுமன்றி, ஏனையோரும் இவ்வாலயத்திலே நடைபெறும் சமய விழாக்களின் மூலம் சமய எழுச்சி பெற்றவர்களாக விளங்குகின்றனர். ஆலய விழாக்களோடு அமையாது, மக்கள் வாழ்வியலையும் வளம்படுத்தும்வகையில் பல சமூகப்பணிகளையும், இவ்வாலயம் முன்மாதிரியாகச் செய்து வருகின்றது.

இவ்வாறான பல சிறப்புக்களைக் கொண்ட நல்லூர் சிவன் ஆலயம், தமிழ் மன்னர்களின் எழுச்சிக்கு அடையாளமாக மட்டுமல்ல, மக்களை நன்னெறியில் வாழ வழிகாட்டும் ஆலயமாகவும் விளங்கி, பண்பாடு, கலாச்சார வளர்ச்சியில் ஒரு வழிகாட்டியாகத் திகழ்கின்றது. ஆலயங்கள் யாவும் தற்காலத்தில் மீண்டும் எழுச்சிபெற்றுக் காணப்படுகின்றது. புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து தாயகத்திற்கு செல்லும் தமிழ்மக்கள், இவ்வாறான ஆலயங்களைத் தரிசிப்பதோடு அமையாது, வரலாற்றுப் பெருமைகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட ஆலங்களைப்பற்றியும், எமது இளைய தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பணியில் முன்னிற்க வேண்டும்.

*“ சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்*
*இனி எதிர் காலத்தின் சிறப்பும்*
*இன்றெழுந்தருளப் பெற்ற பேறிதனால்*
*ஏற்றைக்கும் திருவருளுடையேம்*
*நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்*
*நற்றமிழ் வேந்தனும் உய்ந்து*
*வென்றிகொள் திரு நீற்றொளியினில் விளங்கும்*
*மேன்மையும்“ படைத்தனம் என்பார்.”*

*தொடரும்...*

## Sri Lankan Tamil Fishermen Warn “Consequences” if Indian Fishermen are not Stopped

**- Siva Parameswaran**

Tamil fishermen from the Northern Province have issued a stark warning that “consequences” can't be avoided if the poaching by the Indian fishermen in the Sri Lankan territorial waters does not stop.

“If action is not taken to stop the Indian trawlers unfortunate events happening in the sea can't be avoided” the fishermen protesting in front of the Consulate General of India in Jaffna on Tuesday (20).

The protestors demanded an immediate end to the trawlers from India entering their waters.

“Indian fishermen's trawler crossing the border and entering into the Northern Sea should be stopped and the livelihood of the Tamil fishermen should be saved,” Anthonypillai Francis Ratnakumar, Vice-President, Federation of Jaffna Fishermen Co-operative Societies told local media after the protest.

He added the poaching by the Indian Fishermen has pushed them to the brink.

“We are going to die due to the Indian trawlers. This is going to turn into a continuous protest for sure. We need a solution within a few days. If not a continuous protest will start and unfortunate incidents will happen at the sea”.



Many fishermen organizations from Jaffna which jointly organized the protest in from of the Consulate lay siege to it as part of their protest.

Protestors chanted slogans against the Indian Government and carried placards asking the Indian Government to stop the poaching.

“Indian Government - don't plunder our resources, allow us to live”.

Police had barricaded the area around the Consulate General's Office to stop the protesting fishermen to stop them entering the complex. While the protesting fishermen demanded to meet the Consulate General, permission was initially denied to them.

However, subsequently, a team of eight fishermen were allowed to meet the Consul General Rakesh Natraj, and hand over a petition to him demanding to stop the illegal entry of the Indian trawlers into Sri Lankan waters. Meanwhile, Rakesh Natraj is returning to New Delhi after the completion of his tenure and a new incumbent has also been named.

The fishermen also protested against the lack of seriousness by the Sri Lankan Navy in controlling the Indian trawlers crossing the International Maritime Boundary Line and entering their waters.

“We kindly inform our Navy, that their action in arresting Indian fishermen doesn't give us fullest satisfaction. The arrests should continue. The arrests are being just done for namesake. Arrests should be big and bold. When you do that you can save our livelihood, resolve our misery, and would be supportive to us.”

Poaching by Indian fishermen has jeopardized the livelihood of thousands of farmers in the Northern Province since the brutal war came to a bloody end in May 2009.

## “Refer Sri Lanka to the ICC” -- Tamil mothers call as their protest enters the eighth year

**- Siva Parameswaran**



The peaceful protest by the Tamil mothers searching for their kith and kin who either surrendered or handed over or went missing during the final phase of the war has entered the eighth year.

This protest could potentially be considered one of the longest in the world in recent times.

Hundreds of mothers have continued to march daily since the 20th of February 2017 till date searching for their husbands, sons, brothers, and other relatives whose fate is yet to be known since the brutal civil war against the LTTE came to a bloody end in May 2009.

In a march coinciding with the completion of seven years and the beginning of the eighth year, the war-affected Tamil mothers continued their long march seeking to know what happened to their beloved ones they have reiterated their long-term demand for an international inquiry and taking Sri Lanka to the International Criminal Court (ICC).

Leeladevi Anandanadarajah, Secretary, Association for Relatives of the Enforced Disappearances (ARED) read out a letter written to the Volker Turk, High Commissioner, UN Human Rights Council seeking his attention to their long-standing demands.

“Legal action should be taken against those who were responsible at the check-post where our relatives surrendered, and handed over. The status of our relatives should be known and those responsible should be brought before the law”.

The protesting mothers along with other elders called upon the international bodies to show the same amount of concern that South Africa did in the case of Gaza by referring Israel to the ICC. A banner calling the same was carried by the lead marchers.

“Oh International Community! Whilst appreciating the action taken by SA in favour of the Gaza victims, we the Tamil victims too are anticipating the same humanitarian stand from the International countries” the banner read.

They recalled the recommendations of the international community to refer Sri Lanka to the ICC and wanted the UN Human Rights Commissioner to act upon them.

“Refer Sri Lanka to the International Criminal Court based on the proposal by UN officials. An internal report by the UN says nearly 70,000 people were killed in the final six months of the war. We request that Sri Lanka be referred to the International Criminal Court as recommended by many including the UN High Commissioner for Human Rights”.

Leeladevi Anandanadarajah on behalf of the protestors called for the removal of the army from the North and East –the traditional Tamil homeland.


“The Sri Lankan military that is responsible for the enforced disappearance of our relatives is still staying in our homeland. This occupying army should be immediately removed”.

Any solution to the ethnic problem in Sri Lanka should comprise solutions that are globally accepted, the protestors sought.

“The ethnic problem of the Tamil people on the island remains an unresolved story. Racism and ethnic violence are still rampant. A permanent political solution is necessary to protect the Tamil people from genocide and ensure non-recurrence. For any permanent political solution to the Tamil national ethnic problem, the choice of the Tamil people must be known through a referendum. It should clearly include internationally recognized solutions to the ethnic problem”.

The protest march which entered its eighth year started from the Killinochi Kanthasamy Kovil and ended at the depot junction and culminated with the breaking of coconuts at a local Amman kovil for the fulfillment of their prayers.

Sandhya Eknelikoda wife of disappeared journalist Prageeth Eknelikoda too joined the Tamil .



இலங்கை செய்திகள் Sri Lanka News

# வடக்கு மாகாண பிரதம செயலகத்தின் ஏற்பாட்டில் தொழில் வாய்ப்புக்கான கற்கையினை நிறைவு செய்தவர்களுக்கான தொழிற்சந்தை வழி காட்டல் கண்காட்சி




வடக்கு மாகாண பிரதம செயலகத்தின் ஏற்பாட்டில் தொழில் வாய்ப்புக்கான கற்கையினை நிறைவு செய்தவர்களுக்கான தொழிற்சந்தை வழி காட்டல் கண்காட்சி இன்று இரண்டாவது நாளாகவும் யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையத்தில் **(Jaffna Cultural Centre)>** வடமாகாண பிரதம செயலகத்தில் பிரதிப்பணிப்பாளர் எஸ்.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.

இங்கு தொழில் வழிகாட்டிக்கான கருத்தரங்குகள் தொழில்வாய்ப்புக்கான வேலைகள், முதலீட்டிலான தொழில்முனைவருக்கு தொழிற்துறைகள் சுயதொழிலுக்கான சான்றீதழ்களை பெற்றுக்கொண்ட வர்களுக்கு தொழித்துறையிலான சந்தர்ப்பங்களை வழங்கல், முயற்சியாளர்களுக்கான சந்தைவாய்ப்பினை வழங்கல் பற்றி 60 கண்காட்சி கூடார தொகுதிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.



இதில் 100க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள், தொழில் துறையினை ஏதிர்பார்ப்பவர்கள், தொழிலில் பயிற்சிகள் பெறுனர் என பலரும் கலந்துகொண்டனர்.

# மிக இளவயதில் பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் சாதனையை நிகழ்த்த பயணிக்கவுள்ள ஹரிகரன் தன்வந்துக்கு வாழ்த்து தெரிவித்த அங்கஜன் எம்.பி



13 வயதில் துணிச்சலுடன் சாதிக்கப் புறப்பட்டிருக்கும் தன்வந்தை எனது அலுவலகத்தில் சந்தித்த போது எனது வாழ்த்துச் செய்தியையும் வழங்கி வாழ்த்தியனுப்பினேன்.

இலங்கை - இந்திய தேசங்களுக்கிடையிலான பிணைப்பை பலப்படுத்தும் பாக்கு நீரிணையை நீந்திக்கடக்கும் சாதனையை நிலைநாட்டும் பயணத்தை ஆரம்பித்துள்ள திருகோணமலையைச் சேர்ந்த செல்வன் ஹரிகரன் தன்வந்த் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.



இன்றையதினம் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

13 வயதில் இந்தச்சாதனையை நிலைநாட்ட எடுத்துள்ள இவரது முதலடியானது, எதிர்கால சிறுவர்களுக்கு பெரும் நம்பிக்கையை விதைக்கும்.

இந்தியாவின் தனுஸ்கோடியிலிருந்து இலங்கையின் தலைமன்னார் வரைக்குமான 32 கிலோமீற்றர் தூரத்தினை நீந்திக் கடக்கும் சாதனை பயணத்தை தன்வந்த், எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி அதிகாலை 12.05 மணிக்கு இந்தியாவின் தனுஸ்கோடியிலிருந்து ஆரம்பிக்கின்றார்.

இந்தப்பயணத்தின் ஊடாக இருநாடுகளினதும் சிறுவர்கள் இளைஞர்கள் மத்தியில் நல்லுறவும் நட்புறவும் வலுப்பெற ஓர் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

இடைவிடா பயிற்சியும், முயற்சியும் சிறுவயதிலிருந்து கொண்டிருக்கும் தன்வந்த் போன்றவர்கள் இத்தேசத்தின் பெருமையை நிலைநாட்டும் எதிர்கால நம்பிக்கைகள். அவர்களை ஊக்கப்படுத்துவது நமது கடமையாகும்.

திருமலை மண்ணின் மைந்தன் ஹரிகரன் தன்வந்த் அவர்களின் சாதனைப்பயணம் சிறப்பாக அமைய எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத்துறையின் ஏற்பாட்டில் சர்வதேச தாய்மொழி தினம் நிகழ்வுகள்!





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத்துறையின் ஏற்பாட்டில் சர்வதேச தாய்மொழி தினம் நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9.30 மணியளவில் மொழியியல் ஆங்கிலத்துறை தலைவர் கவிதா நவகுலன் தலைமையில் இந் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதன்போது "தாய்மொழி பற்றிய கருத்தியல்" எனும் தலைப்பில் சிக்காக்கோ பல்கலைக்கழக பேராசிரியர் இ. அண்ணாமலை நிகழ்நிலையில் உரையாற்றினார்.

இந் நிகழ்வில் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கல்முனை மேல் நீதிமன்றத்தினால் ஆளுநர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராக தடையுத்தரவு




கிழக்கு மாகாணத்திலுள்ள மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3-ஐ (இ) தரத்திற்கு மாவட்ட ரீதியாக உயர் தேசிய டிப்ளோமாதாரர்களை **(HNDE)** ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகளை கேள்விக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட **writ** வழக்கு 2024.02.20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கௌரவ கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நாற்பத்தி ஆறு மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி ஜே. றாஸி முஹம்மட் மற்றும் சட்டத்தரணி எப்.எச்.ஏ. அம்ஜாட் ஆகியோர் தெரிபட்டிருந்தனர்.

குறித்த ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் 2020.09.16 ஆம் திகதி கோரப்பட்டு அதற்கான பரீட்சைகள் 2021.02.27 மற்றும் 2021.10.30 ஆகிய தினங்களில் இடம்பெற்றிருந்தன.

குறித்த பரீட்சைகளின் பெறுபேறுகள் புள்ளிவாரியாக வெளியிடப்படாமல் வெறுமனே நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் என ஒரு பட்டியலும், குறித்த பரீட்சையில் வெட்டுப்புள்ளியை விடக் குறைவாகப் பெற்றவர்கள் என ஒரு பட்டியலுமாக இரண்டு பட்டியல்கள் மாத்திரமே வெளியிடப்பட்டிருந்தன என்ற காரணத்தினால் பரீட்சையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளும் நீதிமுறையான எதிர்பார்ப்பு **(Legitimate Expectation)** தமக்கு இருப்பதனை பிரதான அடிப்படையாகக் கொண்டு இந்த வழக்கினை மனுதாரர்கள் கோப்பிட்டிருந்தனர்.

பிரதிவாதிகளாக கிழக்கு மாகாணப் பொதுச்சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள், கிழக்கு மாகாணப் பொதுச்சேவைகள் ஆணைக்குழு செயலாளர், கிழக்கு மாகாணப் பொதுச்சேவைகள் ஆணைக்குழு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண கௌரவ ஆளுனர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கினை ஆதரித்து சட்டத்தரணி ஜே. றாஸி முஹம்மட் மேற்கொண்ட சமர்ப்பணத்தினையும் பிரதிவாதிகள் சார்பில் தெரிபட்டிருந்த சட்டத்தரணிகளின் சமர்ப்பணத்தினையும் ஆராய்ந்த கௌரவ மேல் நீதிமன்ற நீதிபதி மனுதாரர்களால் ஆளுனர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராகப் பிரதானமாகக் கோரப்பட்ட "வழக்கு நிறைவடையும் வரை குறித்த நியமனம் வழங்கப்படக் கூடாது" என்ற இடைக்காலத் தடை உத்தரவுக்கும் அனுமதியினை வழங்கினார்.



மனுதாரர்களின் நீதிமுறையான எதிர்பார்ப்பு **(Legitimate Expectation)** தொடர்பில் சட்டம் தங்களைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை மனுதாரர்களுக்கு இருப்பதாக மனுதாரர்கள் தெரிவிக்கின்றனர்.



# கச்சதீவு திருவிழாவை ரத்து செய்வதாக தமிழக வேர்க்கோடு பங்குத்தந்தை அறிவிப்பு!

இலங்கை - இந்தியா இருநாட்டு மீனவர்களும் கலந்து கொள்ளும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா மீனவர்களின் போராட்ட எதிரொலி காரணமாக இந்த ஆண்டு இந்திய தரப்பிலிருந்து எவரும் கலந்து கொள்ளப் போவதில்லை என வேர்க்கோடு பங்குத்தந்தை சந்தியாகு அறிவித்துள்ளார்.

மேலும் வெளிமாவட்டம் வெளி மாநிலங்களில் இருந்து கச்சதீவு திருவிழாவிற்கு படகுகளில் செல்ல பதிவு செய்தவர்கள் வீண் சிரமங்களை தவிர்க்க வேண்டும் எனவும், அவர்கள் விசைப்படகிற்கு செலுத்திய பணம் விரைவில் மீண்டும் வழங்கப்படும் என பங்குத்தந்தை தெரிவித்துள்ளார்.




# மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் வருடாந்த இராப்போசன ஒன்றுகூடல் அறிவிப்பு

## (Mora Night 2024 Announcement)

---

*மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கனடா வாழ் பழைய தமிழ் மாணவர்கள் அனைவருக்கும் இனிய வணக்கங்கள்!*

*மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கனடா பழைய தமிழ் மாணவ ஒன்றியம் தனது இருபத்தி மூன்றாவது வருடாந்த இராப்போசன ஒன்றுகூடலை இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இருபத்தி நான்காம் திகதி (**24th of February 2024**) நடாத்த உள்ளது.*

*இடம்:* ***Kennedy Convention Centre***
***1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2***
*நேரம்:* ***5 pm EST***

*இராப்போசன நிகழ்வோடு உங்களை மகிழ்விக்க பழைய மாணவர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் பங்குபற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளும் தயாராக இருக்கும். இந்த நிகழ்விற்கு மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கனடா வாழ் பழைய தமிழ் மாணவர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் அன்போடு வரவேற்கின்றோம்.*

*இந்த நிகழ்வானது பல்கலைக்கழக நண்பர்களோடு ஒன்றுகூடவும், பல்கலைக்கழக இனிய நாட்களை மீட்டுப்பார்க்கவும், புதிய நண்பர்களை உருவாக்கவும் சிறந்த இடமாக அமையும். மேலும் நாம் கடந்து வந்த பல்கலைக்கழக நாட்களையும் நமது வாழ்க்கைப்பாதையில் நடந்த நிகழ்வுகளையும் நாம் படைத்த சாதனைகளையும் நமது பல்கலைக்கழக நண்பர்களோடு பகிர்ந்து மகிழ ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.*

*நன்றி.*
*இளவஞ்சி கனகநாயகம்*
*செயலாளர் UMTAAC*

*UMTAAC Committee 2023/24*



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பாக்கு நீரிணையை கடந்து 06 ஆவது இடத்தினை பெறவேண்டும் என்பதுதான் எனது எதிர்கால இலட்சியம்

- திருகோணமலை இந்துக் கல்லூரி ஹரிகரன் தன்வந்த் அறிவிப்பு

பு. கஜிந்தன்





கடற்பரப்பில் வெற்று பிளாஸ்டிக்கழிவுப் பொருட்களை அகற்றி, கடற்பரப்பின் சுத்தமாக வைத்துயிருப்பது விழிப்புணர்வினை ஏற்படுத்தல், உயிர்வாழ் உயிரினங்களில் கடல்வாழ் ஆமைகளை பாதுகாத்தல், முருங்கற் பாறைகளின் முக்கியத்துவத்தின் பேணுதல் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த நீச்சலில் ஈடுபடவுள்ளேன்.

உலகத்தில் 50 பில்லியன் மக்களிடையே, நீச்சல் மூலம் பாக்கு நீரிணையை கடந்து 06 ஆவது இடத்தினை பெறவேண்டும் என்பதுதான் எனது எதிர்கால இலட்சியம் என ஹரிகரன் தன்வந்த் தெரிவித்தார்.

ஏதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி இந்திய தனுஷ்கோடியில் இருந்து விடியற்காலை 12.05 க்கு நீச்சலை ஆரம்பித்து, மதியம் தலைமன்னார் டியர் என்ற இடத்தில் நீச்சலை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்தார்.

ஹரிகரன் தன்வந்த் அவர்களது ஊடக சந்திப்பு 21-02-2024 அன்று யாழ்ப்பாண ஊடக அமையத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீச்சலில் பாக்கு நீரிணையை கடந்து, இளைஞர்கள் மட்டத்தில் அதிகரித்துவரும் போதைவஸ்து பாவனையில் இருந்து மீள்வதற்கான விழிப்புணர்வூட்டும் வகையில் இந்த நீச்சல் காணப்படுகின்றது.

கடற்பரப்பில் வெற்று பிளாஸ்டிக்கழிவுப் பொருட்களை அகற்றி, கடற்பரப்பின் சுத்தமாக வைத்துயிருப்பது விழிப்புணர்வினை ஏற்படுத்தல், உயிர்வாழ் உயிரினங்களில் கடல்வாழ் ஆமைகளை பாதுகாத்தல், முருங்கற் பாறைகளின் முக்கியத்துவத்தின் பேணுதல் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த நீச்சலில் ஈடுபடவுள்ளேன்.

ஈ.சி.டி. திருகோணமலை இந்துக் கல்லூரியில் நான் எட்டாம் தரத்தில் கல்வியினை கற்று வருகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக நீச்சல் பயிற்சி பெற்றுவருகின்றேன் என்றார்.

மேலும் இது தொடர்பாக கருத்துக்களை வழங்கிய தன்வந்த்தின் தந்தையாகிய ராஜகோன் ஹரிகரன் அவர்கள்,

எனது மகன், மாகாண மட்டத்தில் நடாத்திய நீச்சல் போட்டில் முதல் இடங்களை பிடித்து விருதுகளை பெற்றுள்ளார். தேசிய ரீதியாக நீச்சல் போட்டியில் கலந்து கொண்டுள்ளார். எனது மகன் உலக சாதனையினை முறியடிக்க இந்த முயற்சி எடுத்துள்ளார்.

31.05 கிலோ மீற்றர் கொண்ட கடற்பரப்பில் நீச்சல் சாதனை புரிய உள்ளார். கடந்த வாரங்களில் கொழும்பு கோட்சிற்றியில் இருந்து கல்கிசை கோட்சிற்றிவரை நீச்சல் பயிற்சிகளை பெற்று இருக்கின்றார்.

மேலும் திருகோணமலை கடற்பரப்பில் 20 கிலோமீற்றர் தூரம் வரையான கடற்பரப்பில் நீச்சல் பயிற்சிகள் பெற்றுள்ளார். கடந்த கிழமை இலங்கை - இந்திய ஆகிய கடற்படையினரின் எல்லைக்கோடு வரை சென்று நீச்சல் பயிற்சியினை பெற்றுள்ளார்.

இந்த நீச்சலில் வெற்றி பெற்றால் உலகத்தில் பாக்குநீரிணையை கடந்த 13 வயது சிறுவனாகவும் காணப்படுவார். இதற்கு எடுக்கும் காலம் 09 மணித்தியாலங்களும் 54 நிமிடமாகவும் காணப்படுகின்றது.

உலகத்தில் 50 பில்லியன் மக்களிடையே பாக்கு நீரினை கடந்த நீச்சலினை 06 ஆவது பெறவேண்டும் என்பதுதான் இலக்கு என்றார்.

# யாழ்ப்பாணம் வெற்றிலைக் கேணியில் இந்திய இழுவைமடி படகுகள் மீண்டும் அட்டகாசம் — 30இலட்சம் ரூபா பெறுமதியான வலைகளை அறுத்துச் சென்றன



வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் 22.02.2024 அன்று பத்திற்கும் மேற்பட்ட இந்திய இழுவைமடி படகுகள் 4 மீனவர்களுக்கு சொந்தமான 30 இலட்சம் பெறுமதியான வலைகளை அறுத்து இழுத்துச் சென்றுள்ளன.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, வெற்றிலைக்கேணியில் இருந்து 22-02-2024 அன்று மீன்பிடிக்க சென்ற நான்கு படகுகள் தங்களது மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போது கரைக்கு அண்மையாக வந்த இந்தியன் இழுவைமடி படகுகள் அவர்களுடைய பெறுமதியான வலைகளை அறுத்து இழுத்துச் சென்றுள்ளன.

இதனால் ஆத்திரமடைந்த மீனவர்கள் இந்தியன் இழுவைமடி படகுகளை விரட்ட முனைந்தும் பாதுகாப்பற்ற காரணங்களால் அறுந்த மிகுதி வலைகளுடன் உடனடியாக கரைக்கு திரும்பினர்.

இரண்டு படகுகளுக்கு சொந்தமான வலைகள் எதுவும் மிஞ்சாததால் குறித்த இரண்டு படகுகளும் எந்தவொரு வலைகளும் இல்லாமல் வெறுமனே கரைக்கு திரும்பியதை காணக்கூடியதாக இருந்தது.

மிகுதி இரண்டு மீனவர்கள் சொற்ப வலைகளுடன் அவர்களும் கரைக்கு திரும்பி வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் சங்கத்தினரிடம் சம்பவம் குறித்து முறையிட்டனர்.

இந்தியன் இழுவை மடி படகுகளால் இரண்டாவது முறையாக பாதிக்கப்பட்ட மீனவர் கருத்து தெரிவிக்கையில், கடந்தவருடம் எனக்கு சொந்தமான நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான வலைகளை இந்தியன் இழுவை மடி படகுகள் அறுத்துச் சென்ற போது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாமல் மிகவும் க்ட்பட்டேடன்.

ந்ட ஈடு வழங்குமாறு கோரி வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலாளரிடம் கடிதம் கையளிக்கப்பட்டதற்கு பிற்பாடு இரு தமிழ் கட்சிகள் ந்ட ஈடு பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்து ஏமாற்றிவிட்டதாக குறித்த மீனவர் கவலை தெரிவித்தார்.

தமிழரசு கட்சி, ஈபிடிபி கட்சியினரே தனக்கு ந்ட ஈடு தருவதாக கூறி இருந்த போதும் பின்பு அவர்கள் அதுபற்றி கரிசனை காட்டாததால் இன்றுவரை வாழ்வாதாரத்திற்காக க்ட்டப்பட்ட நான் தொடர்ந்து மீன்பிடியில் ஈடுபட்ட போது தொடர்ச்சியாக இரண்டாவது முறையாகவும் இந்திய படகுகள் தனது வலைகளை அறுத்துச் சென்றுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ந்ட ஈடு வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

சம்பவம் குறித்து எமது பிரதேச செய்தியாளர் வெற்றிலைக்கேணி கடற்படை பொறுப்பதிகாரியை வினவிய போது, அத்துமீறி இந்திய இழுவை படகுகள் கரைக்கு வந்த தகவல் அறிந்தும் ஒரு சில டோரா படகுகளின் உதவியுடன் தாம் விரட்டி அடித்ததாகவும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வருத்தம் தெரிவிப்பதுடன் இனியும் அவர்கள் தொடர்ந்து பாதிக்கப்படாதவாறு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.



வடமராட்சி கிழக்கில் இந்திய இழுவை மடி படகுகளின் அத்துமீறல்களை அண்மைக்காலமாக தடுத்து நிறுத்தியதாகவும், கச்சதீவு திருநாளை முன்னிட்டு பாதுகாப்பில் இருந்த சில டோரா படகுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இனி இவ்வாறான சம்பவங்களை தடுத்து நிறுத்த முயற்சிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் "தொழில்நுட்ப வழிகாட்டி" நூல் வெளியீட்டு விழா — வடக்கு ஆளுநர் கலந்து சிறப்பித்தார்



தொழில்நுட்ப வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா 22-02-2024 அன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் - கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் செயலக கேட்போர் கூடத்தில் வடக்கு மாகாண இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், பிரதம செயலாளர் எஜ்.எம்.சமன் பத்துலசேன, வடக்கு மாகாண பொறியியல் சேவைகள் முன்னாள் பிரதிப்பிரதம செயலாளர் சோ.சண்முகானந்தன், வடக்குமாகாண கட்டடங்கள் திணைக்கள முன்னாள் மாகாணப் பணிப்பாளர் செ.மோகனதேவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ருந்தனர்.




TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, ப்னிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



# இலங்கையை அடுத்து மாலைத்தீவை குறிவைக்கும் சீனா, என்ன செய்யப் போகிறது இந்தியா?



,ந்தியாவின் பலத்த கவலைகளுக்கு மத்தியில் சீனாவின் சர்ச்சைக்குரிய ஆய்வுக் கப்பலொன்று தற்போது மாலைத்தீவை சென்றடைந்துள்ளது.

சீனாவின் இயற்கைவள அமைச்சுக்கு அறிக்கை அளிக்கும் ஒரு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சொந்தமான “சியாங் யாங் ஹாங் 3” (Xiang Yang Hong 3) என்ற கப்பலானது கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக பயணம் மேற்கொண்டு மாலைத்தீவு தலைநகரான மலோயில் நங்கூரமிடப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் மாலைதீவு துறைமுகம் வருகைக்கு முன்னர் இந்தியா, மாலைத்தீவு மற்றும் இலங்கையின் பிரத்யேக பொருளாதார மண்டலங்களுக்கு வெளியே கடந்த மூன்று வாரங்களுக்கும் மேலாக நீர்நிலைகளை ஆய்வு செய்ததாக கப்பல் கண்காணிப்பு தரவுகள் வெளிக்காட்டுவதாக தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

விஞ்ஞான புரிதலுக்கு பயனளிக்கும் வகையில் இந்த கப்பல் பயணம் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ள சீனா, கப்பல் இந்தியப் பெருங்கடலில் அறிவியல் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் என்றும் கூறியது.

இந்த கப்பலானது சீனாவின் இராணுவத்தைச் சேர்ந்ததாக இல்லாத நிலையிலும், அது இந்திய பெருங்கடலில் ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்வது குறித்து இந்தியா ஏற்கனவே தனது கவலையை வெளியிட்டிருந்தது.

கப்பலின் மாலைத்தீவு பயணம் குறித்து கருத்து தெரிவித்துள்ள இந்திய பாதுகாப்பு அதிகாரியொருவர், சியாங் யாங் ஹாங் 3 கப்பல் சேகரிக்கும் தரவு பொதுமக்கள் மற்றும் இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம் என்று கூறியுள்ளார். இதேநேரம் குறித்த கப்பல் இந்தியப் பெருங்கடலுக்கு பலமுறை பயணம் மேற்கொண்டுள்ளது.

இது 2021 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் உள்ள சுந்தா ஜலசந்தி வழியாக பயணித்து, இந்தோனேசிய அதிகாரிகளை அச்சுறுத்தியது.

2022 ஆம் ஆண்டில், ராக்கெட் மற்றும் ஏவுகணைகளைக் கண்காணிக்கும் திறன் கொண்ட யுவான் வாங் 5 என்ற இராணுவக் கப்பல் இலங்கையின் தலைநகர் கொழும்பிற்கு வந்து இந்தியாவை அச்சுறுத்தியது.

இறுதியாக 2023ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்திலும் சீனாவின் ஆராய்ச்சிக் கப்பல் ஒன்று இலங்கையில் வந்து நிறுத்தப்பட்டது, இது இந்தியாவின் கவலையை அல்லது அச்சத்தை மேலும் அதிகரித்தது.

சியாங் யாங் ஹாங் 03 கப்பலின் வருகை ஜனவரி மாதம் மாலைத்தீவு ஜனாதிபதி மொஹமட் முய்ஸுவின் சீனாவிற்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து இரு நாட்டு உறவுகளையும் வலுப்படுத்தியுள்ளது.

இருப்பினும் அண்மைக்காலமாக விரிசலடைந்து வரும் இந்தியா மற்றும் மாலைத்தீவு இடையிலான உறவுகளுக்கு நிச்சயமாக மற்றுமோர் அடியாக இந்த “ஆய்வுக் கப்பல்” மாலேயின் நங்கூரமிட்டுள்ளது பார்க்கப்படுகிறது.

குறிப்பாக தமது துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள அந்த கப்பல் அதன் நீரில் எந்த ஆராய்ச்சியும் செய்யாது, பணியாளர்கள் சுழற்சி மற்றும் பொருட்களை நிரப்புவதற்கு மட்டுமே நிறுத்தப்படும் என்று மாலைத்தீவு கூறியுள்ளது.

இவ்வாறு 2023ஆம் ஆண்டு இலங்கை வந்த
கப்பல் துறைமுகத்தை அடைய முன்பு கூறினாலும்
பின்னர் ஆராச்சிக்கும் அனுமதிக்கப்பட்டமை போன்று மாலைதீவும் அனுமதிக்கும் அல்லது அனுமதியை பெற முடியும் என சீனா நம்புகின்றது.

மாலைதீவில் இவ்வாறு வலை விரிக்கும் சீனா, இலங்கைக்கு சுற்றுலா பயணிகளை ஏற்றிய 50 சொகுசு பயணிகள் கப்பல்கள் பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை அனுப்பவுள்ளதாக மற்றுமோர் தகவல் தெரிவிக்கின்றது.

இவற்றில் பெரும்பாலான கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடையும், மேலும் சில கப்பல்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் நங்கூரமிடவுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பி.எச். ஆர். சரிபோ டீன் தெரிவித்துள்ளார்.

இங்கு வரும் இந்த ஒரு சொகுசு பயணிகள் கப்பலில் சுமார் 1000 பயணிகள் இருப்பதாக கூறப்படுகிறது, மேலும் ஒரு கப்பல் இரண்டு நாட்களுக்கு இந்த நாட்டின் துறைமுகங்களில் நங்கூரமிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி, இந்த சொகுசு பயணிகள் கப்பல் நடவடிக்கைகளின் மூலம் இந்நாட்டின் சுற்றுலாத்துறை மேலும் வளர்ச்சியடையும் என நம்பப்படுகிறது.

இவ்வருடம் பெப்ரவரி 16ஆம் திகதி வரை இலங்கைக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 350,000ஐத் தாண்டியுள்ளது.

இது எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஜனவரி மாதத்தில் 208,253 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் இலங்கைக்கு ஏறக்குறைய 15 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதுடன் இந்த ஆண்டு அது 25 இலட்சமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு இந்தியாவைச் சுற்றி கரிசனைகொள்ளும் சீனாவின் வியூகம் வெறுமனே பொருளாதார நலனை மட்டுமே அடிப்படையாக கொண்டதுதான என்பதே தற்போதைய மிகப்பெரும் கேள்வியாகவுள்ளது.

சீனாவிலிருந்து வரும் சொகுசு கப்பல், இலங்கை பயணத்திற்கு பிறகு மாலைத்தீவிற்கு செல்லும் என்றும், அப்படிச் செல்லும் போது சில சீனர்கள் அங்கு தொடர்ந்து தங்கியிருப்பார்கள் என்றும் சில தகவல்கள் கூறுகின்றன. எனினும் இது குறித்து எந்த உறுதியாக செய்தியும் இன்னும் வெளியாகவில்லை என்றாலும், மாலைத்தீவிற்கு ஏராளமான சீனர்கள் செல்வதை இந்தியா கவனத்தில் எடுக்காமல் இருக்காது.

எனினும், அப்படியான ஒரு சூழலில் இந்தியா என்ன செய்யும், அல்லது செய்ய முடியும் என்பதே இப்போது எழுந்துள்ள பெரும் கேள்வி என்று பாதுகாப்பு ஆய்வாளர்களும், அரசியல் அவதானிகளும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தியப் பெருங்கள் பகுதி இந்தியா மற்றும் சீனா ஆகிய இரண்டு பிராந்திய வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியில் சிக்கியுள்ளது என்பது மட்டும் உண்மை.

**- நடராசா லோகதயாளன் -**






OM NAMO NARAYANA

**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM**
**L3S 3T8 CANADA**
**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

23-02-2024 வெள்ளி தொடக்கம் 29-02-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** உற்சாகம் அதிகரிக்கும் வாரம். தீய எண்ணங்கள் விலகும். புதிய தொழில் வாய்ப்பு கிட்டும். பூர்வீகச் சொத்து சேரும். தொல்லைகள் விலகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். அரசுப்பணியில் மாற்றம் வரும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். வீண் வம்பு விலகும். நிர்வாக ஆதரவு உண்டு. உறவினரால் நன்மை உண்டு. அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். வெற்றி கிட்டும். விவசாயம் கை கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்தத் தொழில் அமையும். தொழிலில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். வியாபார மந்த நிலை அகலும். பணிச்சுமைகள் குறையும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். மனைவியால் ஆறுதல் உண்டு. மகிழ்ச்சியான செய்தி வரும். நிர்வாக பொறுப்பு கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை தீரும். கொள்கையில் பிடிப்பு சேரும். கொடுக்கல் வாங்கலில் நன்மை உண்டாகும். உறவினர்களின் தொல்லை நேரும். பிள்ளைகளால் பெருமை சேரும். வியாபார வளர்ச்சி உண்டு. ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி அமையும். தனவரவு பெருகும். எதிரிகள் உதிரியாகும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மை தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டு கிட்டும். உடல்நலனில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஏரிக்கரைபகவதி, அதிர்ஷ்ட எண்: *7,9,2,3*
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,A




**ரிஷபம்:** சாதனை நிகழ்த்தும் வாரம். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். மாற்றங்கள் ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லைத் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய வாய்ப்பு கூடும். பிரார்த்தனைகள் நிறைவேறும். ஆபரணப் பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கூடும். எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலைத் தொடரும். குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர் தொல்லை நீங்கும். நன்மதிப்பு வரும். பரபரப்பான சூழ்நிலை மாறும். பெரிய திருப்பம் ஏற்படும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். செயலில் வேகம் கூடும். தனவரவு உற்சாகம் கூடும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். உறவினரால் செலவு உண்டு. வளம் பெருகும். சாதனைகள் ஓங்கும். சந்தோஷம் அதிகரிக்கும். வாய்ப்புக்கள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். கடன் பிரச்சனை தீரும். கர்மவினைகள் அகலும். உறவால் பணவிரயம் கூடும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். மனவேதனை குறையும். வாழ்வு நிலை உயரும். லாபம் திருப்தி தரும். போட்டிகள் மறையும். பொருளாதாரம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: *4,8,9,1*
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,R




**மிதுனம்:** சாதனைகள் படைக்கும் போதனையான வாரம். சுதந்திரமாக செயல்படுவீர்கள். வரவேற்பு கூடும். வரவுகள் பெருகும். அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். தாய் நலனில் அக்கறை தேவை. சுபக்காரியச் செய்தி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன்பிறந்தவரால் உதவி உண்டு. முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். ஏற்றமான தருணம். நிதி பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை உருவாகும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கலைத்தொழிலில் கவனம் தேவை. செயல்திறன் வெளிப்படும். நிர்வாகத்திறன் கூடும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். மங்களச் செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். நட்புக்கள் பெருகும். நன்மைகள் அதிகமாகும். முன் கோபத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். பழிச்சொல் தேடி வரும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவுகளால் பாதகம் உண்டு. சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்வி சலுகைகள் கிட்டும். புகழ் கூடும். பெருமைகள் தேடி வரும். அரசு வகை ஆதாயம் கிட்டும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். ஆபரணம் வாங்குவீர்கள். பேச்சில் இனிமை கூடும். விளையாட்டுத்துறையில் வெற்றி கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: *4,3,2,1*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,E




**கடகம்:** கன்னியமான புண்ணியம் சேரும் வாரம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். வீடு, மனை யோகம் உண்டு. உடன் பிறப்புக்களால் உதவி உண்டு. வெறுப்புக்கள் ஒழியும். பொறுப்புக்கள் கூடும். விரக்திகள் மாறும். வியாபார வளர்ச்சி உண்டு. வீண் செலவுகள் உண்டு. விருந்தினர் வருகை உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். கால்நடைகளால் லாபம் உண்டு. கடின உழைப்பு தேவைப்-படும். கடன் சுமை அதிகமாகும். காரியம் கைகூடும். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். திடீர் தன-வரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். தீய எண்ணம் விலகும். புதிய வாகனம் சேரும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். கமிஷன் தொழில் திருப்தி தரும். பயணத்தால் அனுகூலமுண்டு. கலை ஈடுபாடு அதிகரிக்கும். எடுத்த காரியம் தடைப்படும். எதிலும் கவனம் தேவை. அடுத்த நபரால் தொல்லை உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். தொழில் போட்டி மறையும். கனவுத்தொல்லை உண்டு. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். திடீர் பயணம் ஏற்படும். குடும்ப ஒற்றுமை குறையும். உடல் உபாதை கூடும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உறவினர் வருகைத் தொல்லை தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். நோய், நொடிகள் அகலும். வீண் வம்பு விலகும். விபரீத எண்ணம் விலகும். வழக்குகள் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: *9,5,4,3*



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் "ராஜயோகம்"

"ஜோதிட மகரிஷி" **Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377

அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிரஷ்ட எழுத்துக்கள்: Z,T




**சிம்மம்:** துன்பங்களை துரத்தியடிக்கும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். வியாபாரத்தால் நன்மை உண்டு. விருந்தினர் வருகை உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். மருத்துவச் செலவு ஏற்படும். மனோபயம் நீங்கும். குதூகலம் அதிகமாகும். குளிர்பான தொழில் கவனம் தேவை. அமைதியாக இருப்பது நல்லது. பூர்வீகச் சொத்து சேரும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். சுபச்செய்தி கூடி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு மனை யோகம் உண்டு. எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். திடீர் பயணம் உண்டு. இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். காதல் எண்ணம் ஈடேறும். வாழ்வில் வசந்தம் உண்டு. மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். வீடு, மனை வில்லங்கம் ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். பெண்களில் கௌரவம் உயரும். பல்வலி வந்து போகும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். செல்வாக்கு உயரும். உறவினர் பகை ஏற்படும். அந்நியர் ஆதரவு கிட்டும். காதல் கசக்கும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். வாகன மாற்றம் ஏற்படும். நூதன முயற்சி தடைப்படும். மாற்றுத்தொழில் உருவாகும். வேற்று இன நட்பு கிட்டும். விவேகம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். பெண்களால் பெருமை சேரும். குடும்ப உறவு பலப்படும். உத்தியோக உன்னதம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: *2,5,4,9*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T




**கன்னி:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். ஆதாயம் பெருகும். காரியத்தடை அகலும். அலுவலக பணி அனுகூலம் தரும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். தாய்வழி உறவு லாபம் தரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிலும் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் கூடும். மன அமைதி குறையும். பொருள் சேர்க்கை உண்டு. பொறாமைகள் விலகும். பொறுப்புக்கள் கூடும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். வறுமைகள் விலகும். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. கலை ஆர்வம் பெருகும். உடல் சோர்வு உண்டாகும். விபரீத போக்கு மாறும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். பாராட்டுக்கள் கூடும். வேலை பளு கூடும். புது முயற்சி பலன் அளிக்கும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலன் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பூமியால் லாபம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். வீண் விரயம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உணவு பிரியம் கூடும். ஆதலால் கவனம் தேவை. காதலில் மோதல் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. நண்பரால் செலவு உண்டு. முடிவுகள் சாதகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: *9,5,2,1*
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,L




**துலாம்:** விரக்திகள் மறையும் வாரம். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். உறவினர் வருகை உண்டு. கல்விச் செலவு உண்டு. காரியம் இழுபறியாகும். பொருளாதார உயர்வு ஏற்படும். உஷ்ணம் அதிகரிக்கும். நெருக்கடிகள் குறையும். கண்ணாடிப் பொருள் சேதம் ஏற்படும். கட்டிடத் தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். தொல்லைகள் குறையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். இன்னல்கள் அகலும். எதிர்பார்ப்புகள் குறையும். எளிமையை விரும்புவீர்கள். இனிய காதல் உருவாகும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். புதிய வாய்ப்புத் தேடி வரும். வாய்ச்சொல் பலன் தரும். வருமானத் தடை உண்டு. பணியாட்களால் தொல்லை குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சஞ்சலம் மறையும். திறமைகள் அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். தன்னம்பிக்கை கூடும். பித்தளைத் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் பயணம் உண்டு. மனச்சுமை குறையும். நினைவாற்றல் பெருகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். பக்குவமான பேச்சு அவசியம். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். பயணம் தடைப்படும். திடீர் செலவு ஏற்படும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். இலக்கிய ஆர்வம் கூடும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: *3,5,4,1*
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,X




**விருச்சிகம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். வெகுமதி தேடி வரும். வீண் வம்பு ஓடி மறையும். காரிய வெற்றி கிட்டும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். புதிய தொழில் அமையும். ஆடம்பர சுகங்கள் கூடும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. மருத்துவச் செலவு உண்டு. மறைமுக தொல்லை நீங்கும். தீர்த்த யாத்திரை உண்டு. திருப்புமுனை ஏற்படும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். காரியத்தடை அகலும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கட்டிடத் தொழில் லாபம் தரும். இன்றைய பிரார்த்தனை நன்மையை கூட்டும். இரும்புத்தொழில் லாபம் உண்டு. விவசாய விளைச்சல் அதிகரிக்கும். புத்திரரால் பூரிப்பு உண்டு. நலமே விளையும் அற்புதமான வாரம். நல்லவர் நட்பு உருவாகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் கூடும். குதூகலம் கூடும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. நிதி நிறுவனம் லாபம் தரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குடும்ப ஒற்றுமை கூடும். முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்புக்கள் விலகும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ஷ்ட எண்: *3,5,9,2*
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J

*(தொடர்ச்சி 30ம் பக்கம்)*

# வவுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு, பெரும்பான்மை இனப் பேராசிரியர் ஒருவருமாக நால்வர் விண்ணப்பம்!




வுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு பெரும்பான்மை இனப் பேராச-ிரியர் ஒருவர் உட்பட நான்கு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக அறிய வருகிறது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரனின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை 13 ஆம் திகத-ியுடன் நிறைவடையவுள்ள நிலையில், அந்தப் பல்கலைக்கழகத்தின் பேரவைச் செயலாளரால் புதிய துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கான இறுதித் தினம் நேற்று 21 ஆம் திகதி புதன்கிழமையாகும்.

பிற்பகல் 3:00 மணியுடன் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங் கோரல் நிறைவடைந்த வேளையில் வவுனியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் இருவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழப் பேராசிரியர் ஒருவரும், ருகுண மற்றும் ரஜரட்ட பல்கலைக் கழகங்களில் பணியாற்றிய பெரும்பான்மை இனப் பேராசிரியர் ஒருவருமாக நான்கு பேர் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டத்தில் பேரவையின் பதவிவழிச் செயலாளரான பதிவாளரால் நால்வரது விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

பேரவை விண்ணப்பங்களை ஆராய்ந்த பின்னர் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைய விசேட பேரவைக் கூட்டத்துக்கான திகதியைத் தீர்மானிக்கும். அன்றைய விசேட பேரவைக் கூட்டத்தில் தெரிவுக்கான புள்ளிகள் வழங்கப்பட்டு, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் விபரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக் கழகச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி தெரிவு செய்து, நியமனம் செய்வார்.

**- நடராசா லோகதயாளன் -**

# கச்சத்தீவு திருவிழாவை இலங்கையிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகள் புறக்கணிக்க வேண்டும் என இந்திய மீனவர்கள் கோரிக்கை



jமிழக மக்களின் உணர்வுகளைப் புறந்தள்ளி இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் கச்சதீவு உற்சவத்தில் பங்கேற்கக்கூடாது என இராமேஸ்வரம் விசைப்படகுச் சங்கத் தலைவர் சேசுராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

"இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்டதான குற்றச் சாட்டில் கைதானவர்களில் ஐவர் சிறையில் அடைக்கப்பட்டு கடும் எச்சரிக்கை செய்யப்படும் நிலையில் அந்த மீனவர்களின் குடும்ப வாழ்வாதாரம் கேள்விக்குட்பட்டு நிற்கும் சமயம் கச்சதீவு உற்சவத்தை புறக்கணித்து எமது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றோம்.

இந்த நிலையில் இலங்கை யாத்திரிகர்களின் பங்களிப்புடன் மட்டும் இடம்மெறும் கச்சதீவு உற்சவத்திற்கு இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் செல்லத் தயாராகி வருவதாக அறிந்து மன வேதனையடைகின்றோம்.




தமிழக மீனவர்களின் மன உணர்வை மதித்து இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளும் இம்முறை திருவிழாவை புறக்கணிக்க வேண்டும் மாறாக திருவிழாவில் பங்குகொண்டால் அதற்கான விளைவை மத்திய அரசு எதிர்கொண்டே ஆக வேண்டும்.

இதேநேரம் 5 மீனவர்களை விடுதலை செய்து மனிதாபிமானத்தை காண்பிக்க மறுக்கும் இலங்கை அரசிற்கு கச்சதீவு உற்சவத்திற்கான செலவுப் பணத்தினை இந்திய மக்களின் வரிப் பணத்தில் இருந்து வழங்க கூடாது" எனவும் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் கோரிக்கை தொடர்பில், இந்திய தூதர கருத்துக்கள் ஏதும் வெளியாகவில்லை. அதேவேளை இந்தியாவிலிருந்து கத்தோலிக்க யாத்ரிகள் யாரும் இந்த ஆண்டு திருவிழாவிற்குச் செல்ல வேண்டாம் என்றும், தமிழ் நாட்டு கத்தோகிக்கத் திருச்சபையில் உள்ளூர் அருட்தந்தை ஒருவரும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதேவேளை, இந்த வாரத்தின் முற்பகுதியில் இலங்கை கடற்பரப்பில் இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறி நுழைந்து தங்களது வாழ்வாதாரத்தை பாதிப்பதோடு மட்டுமின்றி, கடல் வளங்களையும் அழித்து வருவதாக கூறி, யாழ்ப்பாண மீனவர்கள் சங்க கூட்டமைப்பினர், இந்திய தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# அன்பின் தொனி - 722

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

தேவகிருபை - Grace of God

குடும்ப வாழ்வு

நாளையத்தினத்தைக்குறித்துப் பெருமைபேசாதே; ஒரு நாள் பிறப்பிப்பதை அறியமாட்டாயே. உன்னுடைய வாய் அல்ல, மற்றவனே உன்னைப் புகழட்டும்; உன்னுடைய உதடு அல்ல, அந்நியனே உன்னைப் புகழட்டும். கல் கனமும், மணல் பாரமுமாக இருக்கும்; மூடனுடைய கோபமோ இந்த இரண்டைவிட பாரமாம். கடுங்கோபம் கொடுமையுள்ளது, கோபம் பயங்க ரமானது; பொறாமையோவென்றால், அதற்கு முன்னே நிற்கக்கூடியவன் யார்? மறைவான நேசத்தைவிட வெளிப்படையான கடிந்துகொள்ளுதல் நல்லது. நண்பன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள். திருப்தியடை ந்தவன் தேன்கூட்டையும் மிதிப்பான்; பசியுள்ளவனுக்கோ கசப்பான ஆகாரங்களும் தித்திப்பாக இருக்கும். தன்னுடைய கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்ப டியே தன்னுடைய இடத்தைவிட்டு அலைகிற மனிதனும் இருக்கிறான். வாசனைத் தைலமும் சுகந்ததூபமும் இருதயத்தைக் களிப்பாக்குவதுபோல, ஒருவனுடைய நண்பன் உட்கருத்தான ஆலோசனையினால் பாராட்டும் இன்பமானது களிப்பாக்கும். உன்னுடைய நண்பனையும், உன்னுடைய தகப்பனுடைய நண்பனையும் விட்டுவிடாதே; உன்னுடைய ஆபத்துக்காலத்தில் உன்னுடைய சகோதரனுடைய வீட்டிற்குப் போகாதே; தூரத்திலுள்ள சகோதரனைவிட சமீபத்தி லுள்ள அயலானே சிறப்பானவன்.

விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்துகொள்ளுகிறான்

என் மகனே, என்னை சபிக்கிறவனுக்கு நான் உத்திரவு கொடுக்கும்படியாக, நீ ஞானவானாகி, என்னுடைய இருதயத்தைச் சந்தோஷப்படுத்து. விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்துகொள் ளுகிறான்; பேதைகளோ நேராகப்போய் தண்டிக்கப்படுகிறார்கள். அந்நியனுக்காகப் பிணைப்படுகிறவனுடைய ஆடையை எடுத்துக்கொள், அந்நிய பெண்ணுக்காக ஈடுவாங்கிக்கொள். ஒருவன் அதிகாலையிலே எழுந்து உரத்த சத்தத்தோடு தன்னுடைய நண்பனுக்குச் சொல்லும் ஆசீர்வாதம் சாபமாக எண்ணப்படும். அடைமழைநாளில் ஓயாத ஒழுக்கும் சண்டைக்காரி யான பெண்ணும் சரி. அவளை அடக்கப்பார்க்கிறவன் காற்றை அடக்கித் தன்னுடைய வலது கையினால் எண்ணெயைப் பிடிக்கப்பார்க்கிறான். இரும்பை இரும்பு கூர்மையாக்கிடும் அப் படியே மனிதனும் தன்னுடைய நண்பனைக் கூர்மையாக்குகிறான். அத்திமரத்தைக் காக்கி றவன் அதின் கனியை சாப்பிடுவான்; தன்னுடைய எஜமானைக் காக்கிறவன் கனமடைவான். தண்ணீரில் முகத்திற்கு முகம் ஒத்திருப்பதைப்போல, மனிதர்களில் இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்கும். பாதாளமும் அழிவும் திருப்தியாகிறதில்லை; அதுபோல மனிதனுடைய கண்களும் திருப்தியாகிறதில்லை. வெள்ளிக்குக் குகையும், பொன்னுக்குப் புடமும் சோதனை் மனி தனுக்கு அவனுக்கு உண்டாகும் புகழ்ச்சியே சோதனை. மூடனை உரலில் போட்டு உலக்கையி னால் நொய்யோடு நொய்யாகக் குத்தினாலும், அவனுடைய மூடத்தனம் அவனை விட்டு நீங்காது. உன்னுடைய ஆடுகளின் நிலைமையை நன்றாக அறிந்துகொள்; உன்னுடைய மந்தைக ளின்மேல் கவனமாக இரு. செல்வம் என்றைக்கும் நிலைக்காது; கிரீடம் தலைமுறை தலைமு றைதோறும் நிலைநிற்குமோ? புல் முளைக்கும், பச்சிலைகள் தோன்றும், மலைப்பூண்டுகள் சேர்க்கப்படும். - நீதிமொழிகள் 27: 1-26

தொடரும்...

## மாவைக் கந்தன் (கீர்த்தனை)

---------------------------

__பல்லவி__

கந்தன் பெயரைக் கனிவாய்ச் சொன்னாலே!
வந்த வினையெலாம் விரைவில் அகலுமே!

__அனுபல்லவி__

மாவைப் பதியின் மத்தியிலே வீற்றிருந்தே!
தேவைகருதி வருவோர்க்கு திருவருள் அளிப்பவனே!

__சரணம்__

வள்ளி மணாளனே விநாயகன் தம்பியே!
அள்ளித் தருவாயே ஆறுதலை எமக்கே!
கள்ளமிலா தேவரின் குறைதீர்த்த வேலவனே!
உள்ளம் உருகுகிறேன் ஊழ்வினை அறுப்பாயே!
கந்தன்---------

__சரணம்__

பார்வதி புத்திரனே பால முருகனே!
சோர்வினைப் போக்கியே சுகத்தினை அளிப்பாயே!
கானமயிலில் காட்சிதரும் கடம்பா உனையே!
மானசிகமாய் சேவிக்கிறேன் மான்மியம் தருவாயே!.
கந்தன்---------

---------------------------

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453

## இவ்வார ராசிபலன்

( 28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** புதிய பொறுப்பு வரும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். விருப்பங்கள் நிறைவேறும். திறமைகள் அதிகமாகும். பயணம் லாபம் தரும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. சகோதர விசுவாசம் கூடும். பெற்றோர் நலம் கவனம் தேவை. விவாதம் தவிர்ப்பது நல்லது. செயல்களில் துணிவு கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். புதியப்பொருள் சேரும். பொறாமைகள் விலகும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். பணம் புரளும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோக ஏற்றம் உண்டு. சோதனைகள் நீங்கும். சாதனைகள் ஓங்கும். சந்தோஷம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடிகள் தீரும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடு, மனை யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வாய்ப்புக்கள் தேடி வரும். தன வரவுகள் பெருகும். பொருள் வரவு உண்டு. மனநிறைவு ஏற்படும். கடன் பிரச்சனை தீரும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. வளம் பெருகும். உடல்நலம் கவனம் தேவை. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். போட்டிகள் வெற்றி தரும். பரபரப்பான சூழ்நிலை மாறும். மங்களகரமான வாரம். மன அமைதி கெடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப கௌரவம் ஓங்கும். வெற்றி நிலை தொடரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பதவியில் உயர்வு வரும். நண்பரால் சங்கடம் நேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திருமுருகர், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,Q





**மகரம்:** ஆரோக்கியத்தில் திருப்தி தரும் வாரம். ஆபரண பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கூடும். வியாபாரத்தில் எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். பதவியில் உயர்வு வரும். புகழ் கூடும். புதிய வாய்ப்பு கிட்டும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவிகள் சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். தெய்வப் பணியில் ஈடுபாடுகள் அதிகரிக்கும். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை பெருமை தரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உறவினர் பாராட்டுக் கிட்டும். அளவான பேச்சு நன்மை தரும். வழக்குகள் சாதகமாகும். தொலைதூரப் பயணம் உண்டு. பணிச்சுமை குறையும். வியாபார மந்தநிலை அகலும். கடன் உதவி கிட்டும். தொழிலில் மாற்றம் ஏற்படும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கெடும். திருப்தி ஏற்படும். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் கூடி வரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்ப்பேச்சில் கவனம் வேண்டும். நிர்வாகத்திறமை அதிகரிக்கும். வெளியூர் பயணம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. சொத்துக்கள் சேர்க்கையுண்டு. பெண்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். தீய எண்ணங்கள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Q




**கும்பம்:** பொறுப்பும், சிறப்பும் சேரும் வாரம். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடனால் பிரச்சனை வரும். காரிய அனுகூலம் தரும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். எதிலும் நிதானம் தேவை. எடுத்த காரியம் தடைப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து உயரும். விவசாயம் மேன்மை பெறும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். செயல் திறமை வெளிப்படும். கடின உழைப்பு தேவைப்படும். கால்நடைகளால் லாபம் தரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. வீண் செலவுகள் ஏற்படும். விரக்திகள் மறையும். வீடு, மனை ஆசை பூர்த்தியாகும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆரோக்கியம் கூடும். அரசியலில் புகழ் கூடும். திடீர் வரவு உண்டு. கல்வியில் மேன்மை கிட்டும். நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். காதலில் கண்ணியம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். தொழில் போட்டிகள் மறையும். ஏற்றமதி தொழில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து தடைப்படும். சந்தோஷம் கூடும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச் சலுகைகள் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். எதிர்பாராத நன்மை கிட்டும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். உத்தியோகம் திருப்தி தரும். பணி மாற்றம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,I




**மீனம்:** நவகிரஹம் அனுகிரஹம் கிடைக்கும் வாரம். நலம் விளையும் காலம். நன்மைகள் அதிகமாகும். நட்புக்கள் பெருகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச் செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் கூடும். கலைத்தொழில் கவனம் தேவை. கால்நடைகளால் சிரமம் உண்டு. உள்ளம் மகிழும். முக்கிய எண்ணம் நிறைவேறும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். பொருளாதாரம் உயரும். போட்டிகள் மறையும். லாபம் திருப்தி தரும். கல்வியில் கவனம் குறையும். எதிர்ப்புக்கள் விலகும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். உறவால் பணவிரயம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் குறையும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பங்குச்சந்தை மாற்றம் தரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். சொத்துக்கள் சேரும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். முதலீடுகளை தவிர்க்கவும். குடும்ப மனநிறைவு தரும். காதலில் பிரிவு ஏற்படும். கடமையில் தடங்கல் ஏற்படும். புதிய வாகனம் வாங்குவீர்கள். பாராட்டுக்கள் தேடி வரும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். புதிய முயற்சிகள் பலன் அளிக்கும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. வெகுமதிகள் சேரும். உடல்நலனில் அக்கறை தேவை. அலைபேசித் தகவல் ஆனந்தம் தரும். பணிவு அவசியம். பணவரவு உண்டு. தந்தை நலம் கூடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 9,6,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள் U,V

# 1956 தொடக்கம் 2022 வரை 36 ஆணைக்குழுக்களில் 14 ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் வெளிடப்படவில்லை

### வெளியிடுமாறு அரசார்பற்ற நிறுவனங்கள் கூட்டாக வேண்டுகோள்

-------------

(கனகராசா சரவணன்)

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக விசாரணைக்காக 1956 தொடக்கம் 2022 யூன் 6 ம் திகதிவரை 36 ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டும் 14 ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் ஒருபோதும் வெளியிடப்படவில்லை எனவே புதிய உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை உருவாக்குவதற்கு முன், முன்னைய ஆணைக்குழுக்களை அங்கீகரிக்க வேண்டும். இதுவரை வெளியிடப்படாத அனைத்து அறிக்கைகளையும் ஜனாதிபதி இணயத்தளத்தில் வெளியிடுமாறு அரசாங்கத்திடம் 4 அரசசார்பற்ற நிறுவனங்கள் கூட்டாக இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளன.

பெண்கள் பிரிவு வலையமைப்பு, மனித உரிமைக்கும் வளர்ச்சிக்குமான நிலையம், பன்னாட்டு உண்மைக்கும் நீதிக்குமான திட்டம், காணாமல் போனவர்களின் குடும்பங்கள், ஆகிய 4 அமைப்பினர் கூட்டாக இணைந்து செவ்வாய்க்கிழமை (20) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

இலங்கையில் பாரதூரமான மனித உரிமைமீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு அமைக்கப்பட்ட அரசாங்க ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை பாதிக்கப்பட்ட இலங்கையர்களால் கணக்குவைக்க முடியாத எண்ணிக்கைகளைத் தாண்டியுள்ளது. இருந்தும் பிறிதொரு ஆணைக்குழுஉருவாக்கப்படவுள்ளது.

உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்கு எனப்படும் இப்புதிய ஆணைக்குழு, உண்மையைக் கண்டறிவதற்காக சிறிலங்கா அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட குறைந்தது 36 ஆணைக்குழுக்களைக்கொண்ட வரிசையில் புதி-தாக இணைந்துள்ளது. எனினும், நீதியும் பொறுப்புக்கூறலும் மழுப்பலானதாகவே தொடர்ந்தும் இருந்துவருவதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

நடவடிக்கை எடுக்கக்கோரி, காணாமற்போனவர்களின் குடும்பங்கள் துணிகர வீதிப்போராட்டங்களை ஆரம்பித்து இன்று எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ளாமலேயே 240 இற்கும் மேற்பட்ட வயதுமுதிர்ந்த உறவினர்கள் உயிரிழந்துள்ளனர்.

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட இப்புதிய உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நிராகரித்து 37 குடியியல் சமூக அமைப்புக்களும் 19 செயற்பாட்டாளர்களும் ஏற்கனவே வெள்வேறு அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

கடந்தகாலப் பொறிமுறைகளின் மோசமான தோல்வி, ஆவணங்களைப் பகிரங்கப்படுத்தத் தவறியமை, புதிய கட்டமைப்பிற்கான போதுமான அதிகாரமின்மை, சர்வதேச பிரதிநிதிகளை ஈடுபடுத்தாமை பொருத்தமான நீதித்துறைப் பொறிமுறையின்மை, மற்றும் முந்தைய ஆணைக்குழுக்களின் நீண்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் தவறியமை ஆகியவற்றை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் 1956 நவம்பர் முதலாம் திகதி கிழக்கு மாகாணத்தில் குடியில் கலவரம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுவதற்கு முதலாவது ஆணைக்குழு அமைக்கப்பட்டது அதனை தொடர்ந்து 2022 மார்ச் 31 இற்கும் மே 15 இற்கும் இடையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற தீவைப்பு, கொள்ளை மற்றும் களவு ஆகியை அனைத்து வடிவ நாசவேலைகளுக்கும் ஆளாக்கப்பட்ட அல்லது இழக்கப்பட்ட தனிநபர்களதும், நிறுவனங்களமும், அமைப்புக்களதும், கூட்டு நிறுவனங்களதும் சொத்துக்கள் மற்றும் ஆளிழப்புக்கள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கான விசாரணைக்கா 36 வது ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

இந்த 36 ஆணைக்குழுக்களில் 14 ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் ஒருபோதும் வெளியிடப்படவில்லை என்பது அதிர்ச்சியானது என்பதுடன் பெரும்பாலான ஆவணங்கள் அரசாங்க இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள போதிலும், வெறும் ஒருசில ஆணைக்குழுக்களின் அறிக்கைகளே அவ்விணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. உண்மையில், கடந்த கால ஆணைக்குழுக்களால் வெளியிடப்பட்ட 22 அறிக்கைகளில், வெறும் 11 அறிக்கைகளின் பிரதிகள் மட்டுமே எம்மால் கண்டுபிடிக்கமுடிந்தது.

மேலும், கடந்த காலங்களில், என்ன நடந்தன என்பதை நிறுவுவதற்கான விசாரணை வடிவங்களே மேற்கொள்ளப்பட்டன, மாறாக, குற்றத்திற்குக் காரணமானவர்களைப் பொறுப்புக்கூறவைப்பதற்காக அல்ல, இதனால், அதே நபர்களால் திரும்பத்திரும்ப பெரும் அநீதிகள் மேற்கொள்ளப்பட வழிவகுத்தது.

இலங்கை ஜனாதிபதி அண்மையில் பரிந்துரைத்துள்ள பொறுப்புக்கூறல் முயற்சி தொடர்பான கடுமையான கவலைகளை இது எழுப்புகின்றது. ஜனாதிபதியின் இணையத்தளத்தில் கடந்தகால ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைப் பதிவேற்றம் செய்வதன் மூலமாக அவற்றின் உள்ளடக்கங்களை அங்கீகரிப்பதே உண்மையை நோக்கிய முதலாவது படியாக அமையும்.

நேர்மைத்தன்மையுடன் செயற்படுவதற்கு, படலந்த சித்திரவதைக்கூடத்தில் நடந்த சித்திரவதைகளும் தடுத்து வைப்புக்களும் ரணில் விக்கிரமசிங்கவிற்குத் தெரியாமல் நடந்திருப்பது சாத்தியமில்லை என்று கூறும் பத்தலந்த ஆணைக்குழுவின் அறிக்கை போன்ற, ஜனாதிபதியின் பெயரையும் உள்ளடக்கும் அறிக்கைகளையும் இதில் உள்ளடக்கவேண்டும்.

இதுவரை வெளியிடப்படாத அறிக்கைகளை வெளியிடும்படியும், கடந்த கால அறிக்கைகள் அனைத்தையும் பின்வரும் ஜனாதிபதி இணயத்தளத்தில் வெளியிடும்படியும் சிறிலங்கா அரசாங்கத்தை நாங்கள் வேண்டிக் கொள்வதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION




**NESAN** *Subramaniam* **416-908-5656**

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity Line of Credit
• Pre-approvals • Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By

Mortgage Alliance · RightBroker – RightMortgage · Brokerage #10330 / Licence # M18001465

Scotiabank · TD Canada Trust · National Bank · First National Financial LP

MCAP · Home Trust · Equitable Bank · RFA · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

Need Money? பணப்பிரச்சனையா?
கவலை வேண்டாம்! கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!
- Loans
- Cash
- Debt Consolidation
- 1st & 2nd Mortgage
- Home Renovation Loan
- Equity Loans

No Credit Check
Next Day Approval
Quick & Easy
உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்
Call Now:
647-812-6350

Keith Sanmugathas, Broker
Sun Sanmugathas, Broker of Record

PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000

416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
உதயம் 1455 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 23, 2024

# கனடா 'நிவாரணம்' செந்தில்குமாரனின் MGR107 நிகழ்ச்சி மூலம் திரட்டப்பட்ட 212,807.19 டாலர்கள் நிதி




நிவாரணம் அமைப்பினூடாக தாயகத்தில் வறுமையில் வாடும் மக்களிற்கான பல்வேறு பணிகளைச் செய்வதோடு உயிர்காக்கும் இதய சத்திரசிகிச்சை, குருதிச்சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளிட்ட பல பணிகளைச் செய்துவரும் திரு. திருமதி செந்தில்குமரன் இணையர் தம் பணிக்கு உதவுபவர்களிற்கு நன்றி நவிலும் வகையில் **Petit Delight** என்ற உணவுச்சாலையில் ஒழுங்குபடுத்திய கடந்த ஞாயிறு அன்று காலை உணவுடன் கூடிய நிகழ்வில் பலரும் வருகை தந்திருந்தனர். அவர்களில் சிலர் சிறப்புரைகள் ஆற்றினர். இங்கே காணப்படும் படத்தில் செந்தில்குமரன் அவர்கள் தனது துணைவியாரோடு நிற்கின்றார்.




# கச்சத்தீவு திருவிழாவை இலங்கையிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகள் புறக்கணிக்க வேண்டும் — இந்திய மீனவர்கள் கோரிக்கை

தமிழக மக்களின் உணர்வுகளைப் புறந்தள்ளி இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் கச்சதீவு உற்சவத்தில் பங்கேற்கக்கூடாது என இராமேஸ்வரம் விசைப்படகுச் சங்கத் தலைவர் சேசுராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

"இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்டதான குற்றச் சாட்டில் கைதானவர்களில் ஐவர் சிறையில் அடைக்கப்பட்டு கடும் எச்சரிக்கை செய்யப்படும் நிலையில் அந்த மீனவர்களின் குடும்ப வாழ்வாதாரம் கேள்விக்குட்பட்டு நிற்கும் சமயம் கச்சதீவு உற்சவத்தை புறக்கணித்து எமது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றோம்.

(உள்ளே விபரமான செய்தி 29ம் பக்கத்தில்)

# பாக்கு நீரிணையை கடந்து 06 ஆவது இடத்தினை பெறவேண்டும் என்பதுதான் எனது எதிர்கால இலட்சியம் — திருகோணமலை இந்துக் கல்லூரி ஹரிகரன் தன்வந்த் தெரிவிப்பு




கடற்பரப்பில் வெற்று பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களை அகற்றி, கடற்பரப்பை சுத்தமாக வைத்திருப்பது -விழிப்புணர்வினை ஏற்படுத்தல், உயிர்வாழ் உயிரினங்களில் கடல்வாழ் ஆமை-களை பாதுகாத்தல், முருங்கற் பாறைகளின் முக்கியத்துவத்தைப் பேணுதல் தொடர்பாக விழிப்புணர்வு எற்படுத்தும் வகையில் இந்த நீச்சலில் ஈடுபடவுள்ளேன்.- ஹரிகரன் தன்வந்த் தெரிவிப்பு

---

உலகத்தில் 50 பில்லியன் மக்களிடையே, நீச்சல் மூலம் பாக்கு நீரிணையை கடந்து 06 ஆவது இடத்தினை பெறவேண்டும் என்பதுதான் எனது எதிர்கால இலட்சியம் என ஹரிகரன் தன்வந்த் தெரிவித்தார்.

ஏதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி இந்திய தனுஷ்கோடியில் இருந்து விடியற்காலை 12.05 க்கு நீச்சலை ஆரம்பித்து, மதியம் தலைமன்னார் டியர் என்ற இடத்தில் நீச்சலை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்தார்.

(உள்ளே விபரமான செய்தி 26ம் பக்கத்தில்)

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் மேலும் மனித எச்சங்கள் இருக்கலாம் என்கிறது அறிக்கை



கடந்த ஆண்டு கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனித புதை-குழி தொடர்பில் மேலதிக தகவல்கள் வெளிவந்துள்ளன. முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையிலேயே இந்த கூடுதல் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அவ்வகையில் நீதிமன்றில் 22-02-2024 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், கொக்குத்தொடுவாய்ப் பகுதி-யில் இனம்காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து மீடகப்பட்ட 40 மனித எச்சங்களும் 1994 ஆம் ஆண்டிற்கும் 1996 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற யுத்தத்தின் போது இறந்து புதைக்கப்பட்டவர்களாக இருக்கக் கூடும் என்று தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா கூறியுள்ள

(உள்ளே செய்தி 13ம் பக்கத்தில்)

# வலிகாமம் வடக்கில் 500 ஏக்கர் சுவிகரிப்பு விமான நிலைய அபிவிருத்திக்கானதா?

— நடராசா லோகதயாளன்



யாழ்ப்பாணம் விமான நிலைய அபிவிருத்தி என்னும் பெயரில் விமான நிலையத்திற்கு எதிர் திசைக-ளிலும் நிலத்தை அபகரிக்க முயறசிக்கப்படுவது பெரும் சந்தேகத்தை ஏறபடுத்துவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பலாலி விமான நிலையம் யாழ்ப்பாணம் சர்வதேச வி-மான நிலையமாக தரம் உயர்த்தப்பட்டபோது, அதற்கு செல்வதற்கான பிரதான வீதி கிழக்குத் திசையில் பலாலி வீதியில் இருந்து மேற்குத் திசையில் உள்ள கட்டுவன் மயிலிட்டி வீதிக்கு மாற்றப்பட்டது.

ஏற்கெனவே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இன்னும் இலங்கை பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், இப்போது விமான நிலையத்தைச் சுற்றி மேலும் நிலங்களை கபளீகரம் செய்யும் செயல்பாடுகளும் தொடங்கியுள்ளன. இதற்குப் பின்னால் பாரிய சதி உள்ளதாகவும் மக்கள் பேசிக்கொள்கின்றார்கள்.

(உள்ளே செய்தி 19ம் பக்கத்தில்)

உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற வருடாந்த நிகழ்வு
உதயன் சர்வதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
For Tickets and Information:
416 732 1608 or 647 762 9512
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
மண்டபம்:-
The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024
Sunday, at 6.00 PM